விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

**Thamil Naatham**




இராகம் 01 | தாளம் 76 | வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 17 புதன்கிழமை (03.10.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

# தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை இனியும் தாமதிக்க வேண்டாம்


## ஐ.நா.செயலாளர் நாயகம், அமைச்சர் பீரிஸிடம் வற்புறுத்தல்

(நியூயோர்க்)

"இலங்கை அரசாங்கம், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை இனியும் தாமதிக்காமல் உடனடியாக முன்வைக்க வேண்டும்" என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலி யுறுத்தினார். நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ நியூயோர்க்கிலுள்ள ஐ.நா.தலைமையகத்தில் சந்தித்துப் பேசிய வேளையிலேயே பான் கீ மூன் மேற்கண்டவாறு சொன்னார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சந்திப் பின்போது, இலங்கையின் யுத்தத்துக்குப் பின்னரான நிலை மைகள் குறித்து அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பான் கீ மூனுக்கு எடுத்து விளக்கினார்.

இதன்போது பான் கீ மூன், இலங்கை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரை களை அமுலாக்குவதற்கு மேற்கொள்கின்ற முன்னெ டுப்புகள் தொடர்பில் ஐ.நா. அவதானித்து வருவதாகத் தெரிவித்தார். அத்துடன் மீள்குடியேற்றம் மற்றும் மீள மைப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஐக்கிய நாடுகள் சபை அவதானிப்புடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட் டார்.



# நாடுகளின் உள்விவகாரங்களில் ஐ.நா. தலையிடக் கூடாது

## நியூயோர்க்கில் அமைச்சர் பீரிஸ்

(நியூயோர்க்)

நாடுகளின் உள்விவகாரங்க ளில் பலவந்தமான முறையில் தலையீடு செய்யும் நடவடிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் பிர மாணத்திற்கு முரணானது என்று வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 67வது வருடாந்த மாநாட்டில் உரையாற்றியபோதே வெளிவிவ கார அமைச்சர் இவ்வாறு குறிப் பிட்டார்.

ஒவ்வொரு நாட்டுக்குரிய சுயா தீனம், சமநிலை மற்றும் கலாசார விழுமியங்கள் ஏற்றுக் கொள் ளப்பட வேண்டும்.

02

# இலங்கை வாழ் தமிழர்களின் நலனுக்கும், மறுவாழ்வுக்கும் இந்தியா நடவடிக்கை எடுக்கும்

## கருணாநிதியின் கடிதத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங்

(சென்னை)

இலங்கை தமிழரின் நலன் குறித்து தி.மு.க தலைவர் கரு ணாநிதி இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு பிரதமர் மன்மோகன் சிங் பதில் அனுப் பியுள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழர்க ளின் நலனில் மத்திய அரசு அக்கறை செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறு த்தி தி.மு.க தலைவர் கருணா நிதி கடந்த ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி பிரதமர் மன் மோகன் சிங்குக்கு கடிதம் எழுதி யிருந்தார். அந்தக் கடிதத்துக்கு நேற்றுப் பிரதமர் மன்மோகன் சிங் பதில் கடிதம் அனுப்பியுள்ளார்.

உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்கள்

02

# காலி மேயருக்கு மாஜிஸ்திரேட் எச்சரிக்கை

காலிமேயர் மொத்ச் சிறிடீசில் வாவை எதிர்வரும் 24ஆம் திகதி காலி நீதிமன்றத்தில் ஆஜராகு மாறு காலி மாஜிஸ்திரேட் உத்த ரவிட்டார். குறித்த தினத்தில் நீதி மன்றத்தில் ஆஜராகாவிட் டால்

02

# தமிழகத்தில் புலிகளின் செயற்பாடு இந்திய அரசு உன்னிப்பாக அவதானிக்கிறது

## பாதுகாப்பமைச்சர் அந்தோனி

(சென்னை)

"தமிழகத்தில் புலிகள் இயக்க நடவடிக்கைகள் வலுவடைந்து வருகின்றனவா? இல்லையா? என் பது குறித்து இந்திய மத்திய அரசு உன்னிப்பாக அவதானித்து வருகிறது" என்று இந்திய பாது காப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று முன்தி னம் நடைபெற்ற இந்திய இரா ணுவ நிதித்துறையின் ஆண்டு விழாவில் செய்தியாளரொருவர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக் கையிலேயே அமைச்சர் அந் தோனி மேற்கண்டவாறு கூறினார். "புலிகள் இயக்கம் தமிழகத்தில் வலுவடைந்து வருகிறதா?" என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையி லேயே இந்திய பாதுகாப்பமைச் சர் மேற்கண்டவாறு கூறினார்.

# மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 75 இலட்சம் ரூபா கடத்தல் பொருட்கள்

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ரூ.7.5 இலட்சம் மதிப்புள்ள கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கொழும் பிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் நேற்று அதிகாலை 1.30 மணிக்கு

02

# சிறுவர் தினத்தன்று அதிபர் மீது சிறுவர்களும் தாக்குதல்

சர்வதேச சிறுவர் தினமான நேற்று முன்தினம் காலி வித்தி யாலோக வித்தியாலயத்தின் புதிய அதிபர் மீது கல்லூரியின் சிரேஷ்ட மாணவர்கள் மட்டுமல்ல, சிறுவர்களும் அதிபர் மீது கல்வீசித் தாக்குதல்

02

# வடமாகாண சபையின் கருத்தை ஆளுநர் பிரதிபலிக்க முடியாது

## மாவை சேனாதிராஜா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட் மனு

"திவிநெகும" சட்டமூலம் தொடர் பில் வடக்கு மாகாண சபையின் கருத்து எது என்பதை வடக்கு மாகாண ஆளுநர் பிதிபலிக்க முடியாது. எனவே அவ்வாறு வட க்கு மாகாண சபையின் சார்பில் ஆளுநர் கருத்து வெளியிடமுடி யாது என உத்தரவிடுங்கள். இவ்வாறு கோரும் "ரிட்" மனு ஒன்றினை மேன்முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கல் செய்தி ருக்கின்றார் யாழ்.மாவட்ட

02

# வவுனியா, மன்னாரில் இந்திய உதவியுடன் ஆறாயிரம் வீடுகள்

வவுனியாவிலும், மன்னாரிலும் இந்திய அரசாங்கத்தின் நிதியுத வியுடன் ஆறாயிரம் வீடுகளைக் கட் டிக் கொடுப்பதற்கான அங்குரார்ப் பணம் நேற்று மன்னார் பெரிய மடு வித்தியாலயத்தில்

02

# பண்டாரவளை விசாகா மகளிர் கல்லூரி அதிபர் பிரச்சினைக்கும் தீர்வு

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் பிரச்சினை போன்று பண்டாரவளை விசாக்கா மகளிர் வித்தியாலயத்தில் ஏற்பட்ட அதிபர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. வேம்படி மகளிர் கல்லூரியில் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட வேணுகா சண்முகரெத்தினம் அதிபராக கடந்த வாரம்தான் பதவியேற்றிருந்தார்.

பண்டாரவளை விசாகா மகளிர் கல்லூரியின் அதிபராகப் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட திருமதி. டீ. திலகவதியை அதிபர் பதவியை பொறுப்பேற்க விடாமல் பதில் அதிபர் தடை செய்து கொண்டிருந்தார். இதனையடுத்து திருமதி திலகவதி நீதி கேட்டு உச்சநீதி மன்றிற்கு மனுத்தாக்கல் செய்திருந்தார். பொதுச்சேவை ஆணைக்குழு நியமித்த அதிபர், பதவியேற்பதற்கு தடையாக இருந்த கல்வியமைச்சின் காரியதரிசி கோதபயா ஜெயரட்ண உச்ச நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரியிருந்தார். திருமதி. திலகவதி அதிபராகப் பதவியேற்றுக் கொண்டார்.

கல்வியமைச்சின் காரியதரிசிலையப் போன்ற சிரேஷ்ட அதிகாரியொருவர், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலை பின்பற்றி நடக்க வேண்டும் என்று நீதியரசர் கே. ஸ்ரீபவன் தெரிவித்தார்.

இதனையடுத்து கல்வி அமைச்சின் செயலாளர் நீதிமன்றில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

# புத்தூர் கலைமதி கழகத்தின் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று

அமரர் நன்னியன் குணரத்தினம் அவர்களின் நினைவாக கலைமதி விளையாட்டுக் கழகம் நடாத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன்கிழமை இரவு 6.30 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும்.

கலைமதி விளையாட்டுக் கழகத் தலைவர் திரு.வெ.ரஞ்சித்குமார் தலைமையில் இவ் விழா இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலாள் திரு.ம.பிரதீபன் அவர்களும் கௌரவ விருந்தினராக அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் திரு.ரி.புவனேந்திரன் அவர்களும் வருகை தரவுள்ளனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் பரிசில்கள் வழங்கல், கலைநிகழ்வுகள் என்பனவும் இடம்பெறும்.

# ஒட்டு சுட்டான் பிரதேசத்தில் காட்டுயானைகளின் அட்டகாசம்

(யோ.ஷாலினி)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட முத்தையன்கட்டு மற்றும் தட்டையமலை கிராம சேவகர் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

தினமும் இரவு 7.30 மணியள விலே கிராமத்திற்குள் புகுந்து வீடுகளை அழித்து அட்டகாசம் செய்கின்றது.

இதனால் மக்கள் வீதிகளில் நடமாட முடியாமல் வீதிகளில் முடங்கிக் கிடக்கின்றனர். யுத்தத்திற்கு முன்னர் உள்ள வீடுகளும், தற்போது மீள்குடியேற்றத்தின் போது அரசாங்கத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளும் உடைக்கப்பட்டுள்ளன. இதற்கு நடவடிக்கை எடுக்கக் கோரி அப் பிரதேச மக்கள் கிராம சேவகரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட வீடுகளையும், அழிக்கப்பட்ட விவசாயச் செய்கைகளையும் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேச சபை அதிகாரிகள் ஆகியோர் நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டுச் சென்றுள்ளனர். காட்டு யானைகளின் தாக்குதல்களிலிருந்து அங்கு வாழும் மக்களையும், அவர்களின் பயிர்ச்செய்கைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் உறுதியளித்து சென்றனர். ஆனாலும் யானைகளின் தொல்லைகள் இன்னமும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

## புத்தூர் எவரெஸ்ற் கழகம் - வெளியான செய்திக்கு மறுப்பு

கடந்த 27ஆம் திகதிய "தமிழ் நாதம்" தினசரியின் 16ஆம் பக்கத்தில் "எவரெஸ்ற் விளையாட்டுக்கழகம், ருசுகுகு நிறுவனத்துக்கு நன்றி தெரிவிப்பு" என்ற தலைப்பில் வெளியான செய்தியில் சில தவறுகள் இருப்பதாக மேற்படி விளையாட்டுக் கழகத்தின் தற்போதைய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக மைதா னம் புனரமைப்பு தொடர்பான தகவல்களுடன் தொடர்புடையவர் களென வெளியிடப்பட்ட பெயர்கள் தவறானவையென்று மேற்படி விளையாட்டுக் கழகத்தின் தலைவர் வ.தவராசா, செயலாளர் க.பகீரதன், பொருளாளர் பா.நகுலன் ஆகியோர் கைச்சாத்திட்டு எமக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

## காலி...(தொடர்)

அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்து பிறப்பிக்கப்படுமென் றும் மாஜிஸ்திரேட் தெரிவித்தார்.

காலி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வெனுராசிங்காராச்சியை பயமுறுத்தியது.

## வடமாகாண சபை தொடர்பில்....(தொடர்)

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை எஸ்.சேனாதிராஜா.

நேற்றுத் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது மனுதாரர் சார்பில் சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகி வாதாடவிருக்கின்றார். வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்த மனுவில் எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். மாவை சேனாதிராஜா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவின் சாராம்சம் வருமாறு:-

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான மனுதாரர் தமது சார்பிலும், வடமாகாண மக்களுக்கு 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட உரிமைகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் நோக்குடனும் இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கின்றார்.

எதிர் மனுதாரராகக் குறிப்பிடப்படும் வடமாகாண ஆளுநரானவர் வடக்கு மாகாண மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லர். எனவே, அவர் எந்தவகையிலும் வடக்கு மாகாண மக்களின் கருத்து நிலைப்பாட்டையோ, அபிலாஷைகளையோ, விருப்புக்களையோ பிரதிபலிப்பவராகக் கருதப்பட முடியாதவர். ஆவவே, வடக்கு மாகாண மக்களின் நியாயமான கருத்துக்களை நேர்மையாக வெளிப்படுத்துவதற்கான தகுதியோ திறமையோ உடையவராக அவரைக்கொள்ள முடியாது.

கடந்த ஓகஸ்ட் 10ஆம் திகதி "திவிநெகும" சட்டமூலம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டது.இந்தச் சட்டமூலத்தை விசாரித்த உயர்நீதிமன்றம், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் மாகாண சபைக்குரிய பட்டியலில் அடங்குபவை என்பதால் அச்சட்டமூலத்தை அரசமைப்பின் 154(எ)(3) ஆம் பிரிவின் கீழ் மாகாண சபைகளின் கருத்துக்கு ஜனாதிபதி சமர்ப்பிக்காத நிலையில் அது சட்டமாக முடியாது என உத்தரவிட்டது.

உயர்நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை அடுத்து மேற்படி சட்டமூலம் நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்தில் இருந்து விலக்கிக் கொள்ளப்பட்டதாக மனுதாரருக்குத் தெரிய வந்தது.

இப்போது அந்தச் சட்டமூலம் நாட்டின் எட்டு மாகாண சபைகளுக்கும் அவற்றின் கருத்துக்களை அறிவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது என மனுதாரருக்கு நம்பகமாக அறியவந்துள்ளது.

இதேவேளை வடமாகாண சபையின் கருத்தை அறிவதற்காகவும் இச்சட்டமூலம் ஜனாதிபதியினால் அனுப்பப்பட்டிருப்பதாக மனுதாரருக்கு அறியக் கிடைத்துள்ளது.

இவ்விடயத்தில் வடமாகாண ஆளுநர் தமது கருத்தை ஜனாதிபதிக்கு வெளிப்படுத்தியுள்ளார் அல்லது விரைவில் வெளிப்படுத்தவுள்ளார் என மனுதாரர் கருதுகிறார்.

அதேசமயம், இந்தச் சட்ட மூலத்தை ஜனாதிபதி வடமாகாண ஆளுநருக்கு அனுப்பிக் கருத்துக் கோருகின்றமை அவர் வடமாகாண ஆளுநர் என்ற வகையிலா அல்லது கலைக்கப்பட்ட வட மாகாண சபைக்கு என்ற விதத்திலா என்பது மனுதாரருக்குத் தெரியவில்லை.

ஒரு சட்டமூலம் தொடர்பில் மாகாண மக்களின் கருத்து நிலைப்பாடு இதுதான் என்பதை மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக இல்லாத ஆளுநரால் பிரதிபலிக்கமுடியாது இவ்வாறு மனுதாரரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம், மாகாணசபை ஒன்றைக் கலைக்கும் அதிகாரம் உள்ள மாகாண ஆளுநரிடம் ஒரு சட்ட மூலம் தொடர்பில் மாகாண மக்களின் கருத்து நிலைப்பாட்டை பிரதிபலிக்கும் தகுதியும் உரிமையும் உள்ளது என்று கருதும் நிலைப்பாடு உருவாகுமானால் அது பல ஆபத்தான, விபரீதமான விளைவுகளை ஏற்படுத்திவிடலாம்.

ஜனாதிபதியின் வழிகாட்டலில் செயற்படும் ஆளுநர் ஒருவருக்கு அத்தகைய தகுதியும் அதிகாரமும் இருக்குமானால் மாகாண சபைகளைக் கலைத்துவிட்டு, அரசமைப்பின் கீழ் மாகாண சபைப் பட்டியல் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பிடுங்கிக் கொள்ளும் எதேச்சாதிகார நிலைமை உருவாகும்.

அதாவது அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமைகள் விடயத்தில் சட்ட வாக்கத்துறையினால் மட்டுமே கையாளக்கூடிய நிலைமைக்கு மாறாக, நிறைவேற்று அதிகாரத்துறையே அதில் நேரடியாகத் தலையிட்டுக் கையாள்வதற்[illegible] பாதுகாப்பை வழங்கி, அரண் அமைப்பதாக அது அமைந்துவிடும்.

எனவே, ஜனாதிபதியின் முகவராக ஒரு மாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட ஆளுநர் அந்த மாகாண மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் தகைமை உடையவராகக் கருதப்படக்கூடாது. அப்படிக் கருதப்படுமானால் அது அரசமைப்பின் 13ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்ட நோக்கத்தையே சிதறடித்துவிடும்.

மேற்படி சட்டமூலம் தொடர்பில் வடக்கு மாகாண சபையின் சார்பில் கருத்து இதுதான் என்பதை எதிர்மனுதாரர் வெளிப்படுத்த முடியாது என இடைக்காலத் தடை உத்தரவு ஒன்றை உடன் வழங்கவும். இவ்வாறு ரிட் மனுவில் கோரப்பட்டுள்ளது.

## சிறுவர் தினத்தன்று....(தொடர்)

நடாத்தினார்கள் புதிய அதிபரின் கார் மாணவர்களால் தலைகீழாக புரட்டப்பட்டது. பழைய அதிபரே தொடர்ந்தும் பதவியில் இருக்க வேண்டுமென்று கோரியே இந்தத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

## வவுனியா,....(தொடர்)

நடைபெற்றது.

இந்த வைபவத்தில் அமைச்சர்கள் பசில் ராஹபக்ஷ, விமல் வீரவன்ச, குணரெட்ண வீரக்கோன், ரிஷாத் பதியுதீன் ஆகியோர் பங்குபற்றினர்.

இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்தாவும் கலந்து கொண்டார். புதிய வீடொன்றினைக் கட்டுவதற்கு ஐந்தரை இலட்சம் ரூபாவும், வீட்டைத் திருத்துவதற்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் இந்திய அரசாங்கம் வழங்கும்.

தொழில்நுட்ப உதவிகளை தேசிய வீடமைப்பு அதிகார சபை வழங்கும்.

## மீனம்பாக்கம் விமான....(தொடர்)

சென்னை வந்தது. அதில் வந்த பயணிகளை விமான நிலைய சுங்கத் துறை அதிகாரிகள் சோத னையிட்டனர்.

அப்போது, புதுக்கோட்டையை சேர்ந்த அப்துல் திபுஷான் (வயது-42) என்பவர் சுற்றுலா பயணியாக சிங்கப்பூரில் இருந்து கொழும்பு வழியாகச் சென்னை வந்தார். சுங்க அதிகாரிகள் அவருடைய பை, சூட்கேசை சோதனையிட்டனர். அதற்குள், சுடி தார் மற்றும் துணிகளுக்கு இடையே ஏராளமான கம்ப்யூட்டர் உதிரிப் பாகங்கள் மற்றும் இசைக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை பறிமுதல் செய்தனர். அவரைக் கைது செய்து தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

## நாடுகளின்... (தொடர்)

உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேச சமூகம் தலையீடு செய்வதனை எற்றுக்கொள்ள முடியாது.

பிரச்சினைகளைத் தீர்க்கும்போது ஒவ்வொரு நாடுகளுக்கும் ஒவ்வொரு முறைகளை ஐ.நா. கையாள்வது அதன் கொள்கைக்கு மாறானது.

நீண்ட கால யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில் வேறு தரப்பினரை விடவும், நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற கரிசனையை இலங்கை அரசாங்கம் கொண்டுள்ளது என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

## இலங்கை வாழ் தமிழர்களின்....(தொடர்)

குறித்து நான் கவனத்தில் எடுத்துக் கொள்வேன். இலங்கையில் நடந்து முடிந்த போருக்குப் பிறகு அங்கு வாழும் தமிழர்களின் நலனைக் காக்கவும், அவர்களது மறுவாழ்வுக்காவும் மத்திய அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை வாழ் தமிழர்களின் மறு வாழ்வை நல்ல முறையில் அமைப்பதும், அவர்கள் மீண்டும் அமைதியாக வாழ்வதையும் உறுதி செய்வதே மத்திய அரசின் முக்கிய பணியாகும்.

இலங்கையில் உள்ள தமிழர் அரசியல் கட்சிகளுடன் பேசி அங்கு தமிழர்களுக்கு சம அதிகாரம் வழங்க வேண்டும் என்று மத்திய அரசு இலங்கை அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு சம உரிமை, நியாயம், மரியாதை அளிப்பதை உறுதி செய்வதாக இலங்கை அரசும் கூறியுள்ளது. மேலும்,

இதனை உறுதிப்படுத் தும் நடவடிக்கையில் மத்திய அரசும் இணைந்து பணியாற்றும் என்றும் பிரதமர் தனது கடிதத் தில் கூறியுள்ளார்.

# வாழ்வெழுச்சிச் சட்ட மூலத்தினை வடமாகாண ஆளுநரின் ஒப்புதலுடன் நிறைவேற்ற முயற்சியாம்

வட மாகாணசபை அமைவதற்கு முன், சர்ச்சைக்குரிய திவிநெகும எனப்படும் வாழ்வெழுச்சி சட்டமூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாதெனக் கூறப்படுகின்ற போதிலும் வடமாகாண ஆளுநரின் அங்கீகாரத்துடன் இதை நிறைவேற்ற பொருளாதார அபிவிருத்தி அமைச்சு முயற்சித்து வருவதாக அதிகாரி கள் தெரிவித்தனர்.

இந்தச் சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தகுதியை ஆராய்ந்த நீதிமன்றம், சகல மாகாண சபைகளினதும் அங்கீகாரம் கிடைத்த பின்னரே இதை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்று அறிவித்தது.

ஏனைய மாகாணசபைகளில் இந்த சட்டமூலத்துக்கு அங்கீகாரம் கிடைப்பது பிரச்சினையாக இல்லாத போதும் வடமாகாண சபை இன்னும் அமைக்கப்படாமையால் அதன் அங்கீகாரத்தைப் பெற முடியாதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஐக்கிய தேசியக் கட்சியும் கூறுகின்றன. இதனால் இந்தச் சட்டமூலத்தை அரசாங்கம் நிறைவேற்ற முடியாது எனவும் வாதிடுகின்றன.

இந்தச் சர்ச்சைக்குப் பதிலளித்த சமுர்த்தி அதிகாரசபையின் ஊடகப் பிரிவு அதிகாரியான சேனக உபேசிங்க, ஆளுநரின் அங்கீகாரம் போதுமானது என்று கூறினார்.

இந்த சட்டமூலம் சமுர்த்தி அதிகாரசபை, உடரட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபை என்பன இணைந்து வாழ்வெழுச்சித் திணைக்களத்தை அமைக்க வழிசெய்யும்.

இதுபோன்ற சந்தர்ப்பங்களில், சில சட்டமூலங்கள் மாகாண சபைகளின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்ட சமயங்களில் வட மாகாண ஆளுநரே அங்கீகாரம் வழங்கினார் என்று அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டவுடன், அபிவிருத்தியில் கிராமிய மக்களின் பங்குபற்றுதல் மேலும் அதிகரிக்கும் என அவர் கூறினார்.

## சுன்னாகத்தில் முதியோர் கௌரவிப்பு

(வலிகாமம்)

சுன்னாகம் மக்கள் வங்கியினால் சர்வதேச முதியோர் தினத்தையொட்டி மூத்தபிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு திங்கள் கிழமை வங்கி முகாமையாளர் ப.பார்த்தீபன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் ஐம்பதுக்கும் மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு அன்பளிப்புப் பொருட்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

## பேஸ்புக் மூலம் கொலை மிரட்டல் விட்ட இலங்கையருக்கு மறியல்

தன்னோடு வேலை செய்த பிலிப்பைன்ஸ் பெண் தன்னைத் திருமணம் செய்யாதுவிடின் கொன்று விடுவேன் என பேஸ்புக் ஊடாக பயமுறுத்திய 33 வயது இலங்கையரான மின்சார தொழிலாளி ஒருவருக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நீதிமன்றம் மூன்று மாதமறியல் தண்டனை விதித்தது.

தண்டனைக் காலம் முடிந்ததும் அவரை நாட்டை விட்டு அனுப்பி விட வேண்டும் எனவும் நீதிமன்றம் அறிவித்துள்ளது. விசாரணையின்போது மின் தொழிலாளியான இந்த இலங்கையர், ஒரு வருடமாக தாம் இருவரும் காதலர்களாக இருந்ததாகக் கூறியதாக 'காலிஜ் ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

தான் இப்பெண்ணுக்கு 1,000 டினார் கடன் கொடுத்ததாகவும் அவர் அதை திரும்பத் தரவில்லை எனவும் அத்துடன் தனது தொலைபேசி அழைப்புக்களை அலட்சியம் செய்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் இவர் பேஸ்புக் மூலம் கொலை மிரட்டல் விட்டதை ஒப்புக்கொண்டுள்ளார். இந்த பிலிப்பைன்ஸ் நாட்டுப் பெண் இவர் தன்னை மணம் செய்யும்படி கேட்டதாகவும் தான் மறுத்துவிட்டதாகவும் கூறினார். இந்தத் தீர்ப்பை எதிர்த்து 15 நாட்களுக்குள் மேன்முறையீடு செய்ய முடியும் என நீதிமன்றம் தெரிவித்தது.

## கிளிநொச்சியில் புதன்கிழமைகளில் மனித உரிமை ஆணைக்குழுவின் பணிகள்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் நலன் கருதி, மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமையிலிருந்து கிளிநொச்சியில் நடமாடும் அலுவலகம் செயற்படவுள்ளதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகப் பணிப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலுள்ள மக்கள் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் தெரிவிப்பதற்கும் ஆலோசனைகளைப் பெறுவதற்கும் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டியுள்ளது. இதனால் மக்களின் பணம் மற்றும் நேரம் வீணாகின்றது. இதனைக் கவனத்திற்கொண்டு மனித ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் கிளிநொச்சியிலுள்ள மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டிடத்தில் புதன்கிழமை தோறும் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணிவரை நடமாடும் சேவையை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நடமாடும் அலுவலகமானது மனித உரிமை ஆணைக்குழுவின் வடபிராந்திய ஆணையாளர் ஆனந்தராஜாவின் பணிப்பிற்கமைய நடத்தப்படவுள்ளது.

எதிர் வரும் காலத்தில் இந்நடமாடும் அலுவலகத்தை கிளிநொச்சியில் நிரந்தரமாக செயற்படுத்துவது தொடர்பில் பரிசீலிக்கப்படுவதாகவும் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

## மந்திரத்தால் பெண்களை மடக்க முயன்ற தேரருக்கு 20 வருட சிறை

பெண் ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் ருவான்வெல்ல ஏ.சோபித தேரர் என்று அழைக்கப்பட்ட சுனில் சாந்த உள்ளிட்ட மூவருக்கு கேகாலை மேல் நீதிமன்றம் 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையை விதித்தது.

கேகாலை ருவன்வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இந்தத் தேரர் மந்திர தந்திர வேலைகள் செய்பவர். மந்திர தந்திர வேலைகளின் மூலம் மிகுந்த பிரபலம் அடைந்திருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு மந்திர தந்திர வேலைகளால் பல மில்லியன் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு இவர் சொந்தக்காரராகியுள்ளார். அத்துடன் இவரிடம் மந்திரிப்பு வேலைகளுக்கு வருபவர்களில் பொரும் பாலானவர்கள் இளம் யுவதிகள் எனவும், இவ்வாறு வரும் யுவதிகளுடன் இவர் மந்திர தந்திர வேலைகளுக்கான தயார்ப்படுத்தல் என்று கூறி அப்பெண்களுடன் பாலியல் உறவு வைத்துக் கொள்கிறார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் வானொலியொன்றில் பணிபுரியும் பெண் ஊடகவியலாளர் ஒருவர் இவரை மந்திர வேலைக்கு என அணுகியிருக்கின்றார். அப்பெண்ணுக்கு சோபித தேரர் பல தடவைகள் தொலைபேசி அழைப்புக்கள் மேற்கொண்டு பெண்ணிடம் அந்தரங்கமான கேள்விகளை தொலைபேசியில் கேட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. உல்லாசமாக இருக்க வருமாறு தேரர் அப்பெண்ணுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இவருடைய உரையாடல்களை பெண் ஊடகவியலாளரால் ஒலிப்பதிவு செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுறது. குறித்த ஒலிப்பதிவு வானொலியில் ஒலிபரப்பட்ட பின்னர் பொதுமக்கள் தேரரை ஒரு போலியானவர் எனத் தெரிந்தது. தேரரின் மாடி வீட்டை முற்றுகையிட்டு வீட்டில் இருந்து ஆயுதங்கள், மதுபானப் போத்தல்கள் போன்றவற்றை கண்டுபிடித்தனர். அதன் பின்னர் குறித்த தேரர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டாரென்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் மாகாண சபை இன்றி வாழ்வெழுச்சி திட்டத்தை அமுலாக்க முடியாது

வடமாகாணத்தில் மாகாண சபை அமைக்கப்படாத நிலையில், 'திவிநெகும' எனப்படும் வாழ்வெழுச்சிச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சட்டத்துக்கும், அரசியல் அமைப்புக்கும் முரணானது என்று முக்கிய சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் 13ம் திருத்தச் சட்டத்தின் கீழும், இலங்கையின் அரசியல் யாப்பின் அடிப்படையிலும், மாகாண சபைகளின் அதிகாரத்தை குறைக்கும் வகையிலான சட்ட மூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது, ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்தில் இன்னும் தேர்தல் நடத்தப்படவில்லை. இந்த நிலையில் வடக்கிலும் மாகாணசபை என்ற ஒன்று இருக்கின்ற நிலையில், அதன் மாகாண சபையில் இந்தச் சட்ட மூலத்துக்கு அனுமதி பெறுவது முக்கியமானதாக காணப்படுகிறது.

இந்த நிலையில், வடமாகாண சபையின் அனுமதியை பெறுவதற்காக, வடமாகாண ஆளுனரின் தன்னிச்சையான அனுமதியை அரசாங்கம் பெற்றுக்கொள்ளுமா? அல்லது அரசியல் காரணங்களுக்காக வடக்கில் உடனடியாக அரசாங்கம் தேர்தல் நடத்துமா? என்ற கேள்வியே தற்போது எழுந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இன்றைய இராசி பலன் (03.10.2012)

**நந்தன வருடம் புரட்டாதித் திங்கள் 17ஆம் நாள் புதன்கிழமை**

**நட்சத்திரம்** : பரணி இரவு 10.38 வரை அதன் பின் கார்த்திகை
**திதி** : திருதியை பிற்பகல் 1.28 வரை. அதன் பின் சதுர்த்தி
**சுபநேரம்** : 4.32 - 6.02
**இராகுகாலம்** : 12.02 - 1.32
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : மனப் பயம், எதிரிகள் தொல்லை, பெண்களால் நன்மை
**இடபம்** : காரியத்தடை, அதிக செலவு, கடன் பிரச்சினை
**மிதுனம்** : தொழில் பிரச்சினை, வீண் விவகாரம், ஓய்வின்மை
**கடகம்** : பொருள் சேர்க்கை, உடல்நலக் குறைவு, நண்பர்களால் நன்மை
**சிங்கம்** : எதிர்பாராத வரவு, அதிக யோசனை, அவதானம் தேவை
**கன்னி** : தொழில் முயற்சி, அந்நியர் பாராட்டு, பெற்றோர்களால் சஞ்சலம்
**துலாம்** : காரிய அனுகூலம், விருந்துபசாரம், நண்பர்களால் சிரமம்
**விருச்சிகம்** : காரியத் தடை, வீண்மனஸ்தாபம், உடல்நலக்குறைவு
**தனுசு** : புதிய முயற்சி, பதற்றநிலை, நண்பர்களால் உதவி
**மகரம்** : வருவாய் அதிகரிக்கும், தேவையற்ற சிந்தனை, மனக்கவலை
**கும்பம்** : புதிய முதலீடு, தொழில் விருத்தி, புத்திரரால் நன்மை
**மீனம்** : குடும்பச் சச்சரவு, புதியவர் சந்திப்பு, வீண் செலவு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

## ஆயிரம் பட்டதாரிகளுக்கு நேற்று ஆசிரிய நியமனம்

விஞ்ஞான மற்றும் கணித பட்டதாரிகள் 1000 பேருக்கு, நேற்றைய தினம் நியமனங்கள் வழங்கப்பட்டதாகவும் இது தொடர்பான நிகழ்வு மாலை 4.30 மணிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றதாகவும் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

நியமனங்கள் வழங்கப்பட்ட 1000 பேருக்கு தாங்கள் செயறபடவேண்டிய பாடசாலையின் பெயர் விபரங்களும் நியமனங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித் துள்ளார். அத்துடன், கணித மற்றும் விஞ்ஞான பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டிய பாடசாலைகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எக்காரணம் கொண்டும், நியமனங்கள் மாற்றி வழங்கப்படமாட்டாதெனவும், குறைந்தது 5 வருடங்களேனும் ஆசிரியர்கள் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் பணியாற்ற வேண்டுமெனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அவ்வாறு செயற்படாத பட்சத்தில் அவர்களுக்கான நியமனங்கள் இரத்து செய்யப்பட்டு அதற்கான சந்தர்ப்பம் வேறொரு பட்டதாரிக்கு பெற்றுக்கொடுக்கப்படுமெனவும் கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையின்கீழ், முன்னெடுக்கப்பட்டு வரும் 1000 பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தெரிவுசெய்யப் பட்டுள்ள பாடசாலைகளுக்கே குறித்த ஆசிரியர் நியமனம் வழங்கப்படுமென கல்வியமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முதுமாணி, கலாநிதிப் பட்டங்களை வழங்க தனியானதொரு பல்கலைக்கழகம் வேண்டும்

## - அமைச்சரவைக்கு உயர்கல்வியமைச்சு யோசனை

முதுமாணி, கலாநிதி பட்டங்களை வழங்குவதற்குத் தனியானதொரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென உயர்கல்வி அமைச்சும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் கூட்டாக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த சிபார்சுகளில் தெரிவித்தது. பல்கலைக்கழக பேராசிரியர் சம்மேளனத்தின் ஆலோசனையையும் பெற்றே இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த ஆவணத்தின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

சர்வதேச தரத்திற்கு ஏற்ப நாட்டின் தேசிய வருமானத்தின் ஆகக் கூடுதலான சதவீதம் கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும். பல்வேறு கல்வித்துறைகளுக்கான தொழில் ரீதியான பயிற்சிகள் கொடுக்கப்படுவதுடன் இதற்கான ஆய்வுகளை நடத்துவதற்கு இடமளிக்கப்படும். இதன் மூலம் தரமான கல்வியை நடைமுறைப்படுத்தி தேசிய தரத்திற்கு ஏற்புடைய வகையில் கல்வியின் தரம் உயர்த்தப்படும்.

பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் விசேட தொழில்சார் உத்தியோகத்தர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். இதற்கு அங்கீகாரமளிப்பதற்காக விசேட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

எமது பல்கலைக்கழகங்களுக்கு தேவையான, உயர் தரமுடைய பேராசிரியர்களை நியமிப்பதற்கும் ஏற்கனவே உள்ள திறமைமிக்க பேராசிரியர்களை தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுத்துவதற்கும், வெளிநாடு சென்றவர்களை மீண்டும் அழைப்பதற்கும் நடவடிக்கை எடுக் கப்படும். இதற்கும் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்கான விசேட ஜனாதிபதி குழுவொன்றும் நியமிக்கப்படும்.

இதன் மூலம் கல்வி அறிவில் ஆசியாவிலேயே இலங்கையை முன்கொண்டுவருதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதுமாணி, கலாநிதி பட்டங்களை வழங்குவதற்கு தனியானதொரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

பல்கலைக்கழகங்களின் சுதந்திரத்தையும், இறைமையையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

உயர்கல்வித்துறையை திருத்தி அமைக்கும்போது பல்கலைக் கழக பேராசிரியர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படும்.

சகல உயர்கல்வி நிறுவனங்களையும் சர்வதேச தரத்திற்கு உயர்த்துதல்.

தேசிய அபிவிருத்திக்கு பல்கலைக்கழக பேராசிரியர்களின் அனு சரணையை பெற்றுக்கொள்ளுதல்.

பல்கலைக்கழகப் பேராசிரியர் சம்மேளனத்துடன் கலந்துரையா டியே இது தயாரிக்கப்பட்டதெனவும் தெரிவிக்கப்பட்டது.

# கொழும்பு, கொம்பனித்தெருவில் மக்களின் குடியிருப்புக் காணிகளை 'டாட்டா' நிறுவனத்துக்கு வழங்கத் தடை

## - உச்ச நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு கொம்பனித்தெரு பிரதேசத்தில் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேற்றிவிட்டு அப்பகுதியில் உள்ள சுமார் ஏழு ஏக்கர் பரப்புள்ள காணியை இந்தியாவின் டாட்டா நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முடிவை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு இலங்கை உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொம்பனித்தெரு மக்கள் சிலர் தாக்கல்செய்திருந்த மனுவை பரிசீலித்த பின்னரே உச்சநீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்படவுள்ள இந்தக் காணிகளில் வசிக்கும் மக்களிடம் அதற்கான காணி உறுதிப்பத்திரங்கள் இருப்பதாக, அவர்கள் சார்பில் நீதிமன்றத்தில் வாதிட்ட சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க சுட்டிக் காட்டினார். குறித்த பகுதியில் அபிவிருத்தி செயற்திட்டமொன்றை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசாங்கம் அந்தக் காணிகளை இந்தியாவின் டாட்டா நிறுவனத்திடம் வழங்கவுள்ளதாக கூறுகிறது.

ஆனால் அந்த நடவடிக்கை மூலம் அப்பகுதியில் வசிக்கும் சுமார் அறுநூறுக்கும் அதிகமான குடியிருப்புகள் இடிக்கப்படும் என்றும் அதனால் ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் நிர்க்கதியாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சட்டத்தரணி சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

எனினும், குறித்த பகுதியில் வீடுகளை இழக்கும் மக்களுக்கு மாற்றுக் குடியிருப்புகளை வழங்க நகர அபிவிருத்தி அதிகாரசபை யாரென்று நீதிமன்றத்தில் தெரிவித்தது. ஆனால் அரசாங்கம் குறித்த மக்களுக்கு வீடுகளை வழங்குவதற்கான உறுதியான வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கும் வரை அங்குள்ள காணிகளைச் சுவீகரிப்பதை நிறுத்தி வைக்குமாறு உச்சநீதிமன்றம் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உத்தரவிட்டதாக சட்டத்தரணி சேனசிங்க குறிப்பிட்டார்.

இந்த வழக்கின் அடுத்தக்கட்ட வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 25-ம் திகதி நடக்கவுள்ளன.

# இலங்கை மருத்துவ கவுன்ஸில் பதிவிற்காக வெளிநாட்டு விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்

இலங்கை மருத்துவக் கவுன்ஸிலில் பதிவு செய்வதற்காக வெளிநாட்டு மருத்துவர்கள் செய்துள்ள விண்ணப்பங்களை ஆராய்வதற்கென ஒரு குழுவை அமைத்துள்ளதாகவும் இக்குழு, கிடைத்துள்ள விண்ணப்பங்களை இன்று பரிசீலனை செய்யவுள்ளதாகவும் மேற்படி கவுனிஸில் சார்பில் நீதிமன்றில் ஆஜரான வழக்குரைஞர் தெரிவித்தார்.

வெளிநாட்டு மருத்துவர்கள் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது இலங்கை மருத்துவக் கவுன்ஸில் சார்பில் மன்றில் ஆஜரான வழக்குரைஞர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேற்படி கவுன்ஸில் சார்பில் என்.ஆர்.சுரேந்திரன் உதவியுடன் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.ஏ.பரதலிங்கம், மருத்துவ கவுன்ஸில் நியமித்துள்ள குழுவானது கிடைத்துள்ள விண்ணப்பங்களை வழிகாட்டல் அதிகாரங்களுக்கமைய ஆராயும் எனக் கூறினார்.

நீதிபதிகள் குழுமம், இந்த மனு விசாரணைக்கு ஏற்கத்தக்கது எனவும் தமது வழக்குக்கான மேலதிக அதிகாரங்களை ஒக்டோபர் 10ஆம் சமர்ப்பிக்க வேண்டு மெனவும் கூறியது. இலங்கையில் பணிபுரியும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கான பதிவுகள் செல்லுபடியாகும் காலம் ஒரு வருடத்திலிருந்து இரண்டரை மாதங்களாக குறைத்ததன் மூலம் இலங்கை மருத்துவக் கவுன்ஸில் தமது அடிப்படை உரிமையை மீறியுள்ளதாக நீதிமன்றம் அறிவிக்க வேண்டும் என மனுதாரர்கள் கேட்டுள்ளனர்.

# அரியாலை வீதிகளுக்கு மின் விளக்குகள்

யாழ். மாநகரசபையின் இவ்வாண்டுக்கான ஏழாவது நிதிக் குழுக்கூட்டத்தில் மாநகர சபை உறுப்பினரும் நிதிக்குழு உறுப்பினருமான விந்தன் சில வீதிகளுக்கு அவசரமாக மின்விளக்குகள் பொருத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். குறித்த வீதிகளில் குடிமனைகள் நெருக்கமாகவும், மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளாகவும் இருக்கின்றன. இரவு நேரங்களில் வாகனப்போக்குவரத்து அதிகமாக இருப்பதால் வீதிகளில் போதிய வெளிச்சமின்மை காரணமாக அடிக்கடி வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. அப்பகுதியில் உள்ள வீடுகளிற்குள் திருடர்களின் கைவரிசையும் அதிகரித்துள்ளது எனச் சுட்டிக் காட்டினார். எனது கோரிக்கைகளைப் பரிசீலித்த நிதிக்குழு பிரேரணையை ஏற்று அங்கீகரித்தது. பின்பு ஏழாவது மாதாந்தக் குழுக்கூட்டத்திலும் ஏகமனதாக அங்கீகரித்து ரூபா 115,000/- செலவில் அரியாலைப் பகுதியிலுள்ள பொன்னம்பலம் வீதி, சின்னாலங்கண்டு வீதி, குகன் வீதி, ஆட்காட்டி வீதி, அருளம்பலம் வீதி, முள்ளி வீதிகளுக்கு இருபத்தியேழு மின் விளக்குகளும், அரியாலை சரஸ்வதி லேனிற்கு நான்கு மின்விளக்குகளும், மற்றும் ஈச்சமோட்டை வீதி, அதன் இரண்டாம் ஒழுங்கை, ஈச்சமோட்டை குளக்கரை வீதி, ஆனந்தம் வடலி வீதிகளுக்குமாக மொத்தம் 40 மின் விளக்குகள் கடந்த 26ஆம், 28ஆம் திகதிகளில் பொருத்தப்பட்டுள்ளன. மின்விளக்குகள் பொருத்தப்பட்ட பல வீதிகள் கடந்த 30 வருடங்களாக ஒரு வீதி மின் விளக்கையேனும் கொண்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு யாழ் மாநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தெரிவித்தார்.

# பொம்மைவெளி வெற்றுக் காணிகள் காணியற்றவர்களுக்குப் பகிர்ந்தளிப்பு

**மீரான்**

யாழ்ப்பாணம் பொம்மைவெளி முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள சின்னப் பள்ளிவாசலுக்குச் சொந்தமான வெற்றுக்காணிகளை யாழ்-கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் தலைவர் எம்.எம்.நிலா மினால் காணி இல்லாதவர்களுக்கு பங்கிட்டு வழங்கினார்.

கடந்த மூன்று வருடமாக மீள் குடியேறி சேதமுற்ற காணிகளில் வசித்து வந்தவர்களும் காணியற்றவர்களும் பயன் பெற்றுள்ளார்கள்.

புதிதாக காணிகளை பெற்றவர்களுக்குரிய அடிப்படை வசதிகளான நீர், மின்சாரம், மலசலகூடம் போன்றவைகள் அற்ற நிலையில் தற்காலிக கொட்டில்கள் அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

இவர்களுக்குரிய உதவிகளை அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் சரபுல் அனாம் நேற்றைய தினம் இம்மக்களைச் சந்தித்து மாநகர-சபை மூலம் கிடைக்கக்கூடிய உதவிகளை மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் தெரிவிப்பதாக உறுதியளித்துள்ளார்.

# தமிழ் அமைச்சரொருவர் இல்லாததற்கு சம்பந்தனே காரணம்

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ

"கிழக்கு மாகாண சபையில் தமிழர் ஒருவர் அமைச்சராக நியமனம் பெறாமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனே காரணம். அதற்கான முழுப்பொறுப்பையும் அவர்தான் ஏற்கவேண்டும்" என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்தார்.

கிழக்கு மாகாண அமைச்சரவையில் தமிழர் ஒருவர்கூட இல்லாதது குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

கிழக்கு மாகாணத்துக்காகத் தமிழர் ஒருவரை முதலமைச்சராக நியமித்தவர்கள் நாங்கள். இப்போது தமிழர் ஒருவர் முதலமைச்சராக நியமிக்கப்படாமைக்கு நாங்கள் காரணமல்ல. தேர்தல் காலங்களில் முழுக்க முழுக்க இனவாதம் பேசி செயற்பட்டார் சம்பந்தன்.

தமிழர் ஒருவர்கூட ஆளுங்கட்சி சார்பில் தெரிவு செய்யப்பட்டுவிடக் கூடாதென்று அவர் கூறினார்.

இப்போது தமிழர்களுக்குச் சேவை செய்யப்போவது யார்? தேர்தல் காலத்தில் போன்று நேரடியாகச் சென்று மக்களின் குறைகளைக் கேட்பாரா அவர்.

நாங்கள் சம்பந்தன் போல் இனவாதம் பேசி மக்களைப் பிரித்துப் பார்க்க விரும்பவில்லை என்றார்.

# 25 இலட்சம் ரூபா கப்பம் கோரி டாக்டரை டாக்டரே கடத்தினாராம்

நாரம்பனை பகுதியைச் சேர்ந்த டாக்டரொருவரை:25 இலட்சம் ரூபா இலஞ்சம் பெறும் நோக்கில், கடத்தியதாக கூறப்படும் மற்றுமொரு டாக்டர் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மற்றுமொரு டாக்டரை கைது செய்வதற்காக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நாரம்மல பகுதியில் குறித்த டாக்டர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர்களால் கடத்தப்பட்ட டாக்டர் அவிசாவளை பகுதிக்கு கொண்டுசெல்லப்பட்டதுடன், அவர் ஐந்து இலட்சம் ரூபா காசோலை வழங்கியதன் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். மிகுதிப் பணத்திற்காக வைத்தியரின் காரை வழங்குமாறுகப்பகாரர்கள் கேட்டுள்ளனர்.

பின்னர் வைத்தியர் சாதுர்யமான முறையில், மற்றுமொரு குழுவுடன் காரை கொண்டுசெல்வது போல், கேகாலை பகுதிக்குச் சென்று கடத்தற்காரர்கள் இருவரை பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

# விரிவுரையாளர்கள் இன்று வேலைக்குத் திரும்பலாம்

பகிஷ்கரிப்பைக் கைவிட்டு வேலைக்குத் திரும்பும் விரிவுரையாளர்களுக்கு மூன்று மாத சம்பளத்தை வழங்குவதாக அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

இதனால் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் வேலைக்கு திரும் புவரென உயர் கல்வியமைச்சு தெரிவித்தது.

அமைச்சரின் அறிவித்தலை நிராகரித்த பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேள னம், சங்கத்தின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிடின் தாம் வேலை நிறுத்தத்தை தொடரவுள்ளதாகத் கூறியுள்ளது.

அமைச்சின் முன்மொழிவை பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் உத்தியோகபூர்வமாக நிராகரித்துள்ள போதிலும், சிலர் வேலைக்கு வந்துள்ளதாகவும் விரைவில் அவர்களின் வேலை நிறுத்தம் முடிவுக்கு வந்துவிடு மெனவும் அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன கூறினார்.

இத்தொழிற்சங்க நடவடிக்கையில் அரசியல் தொடர்பிருப்பதாகவும் இந்தளவில் அவர்களின் ஆறு கோரிக்கைகளில 5 கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மல்வத்த மற்றும் அஸ்கிரியபீட மகாநாயக்கர்களின் இணக்க முயற்சிகளை தாம் ஆதரிப்பதாகவும் ஏனைய முயற்சிகள் தோல்வியடையின் மகாநாயர்களுடன் பேசுவதற்கு திகதி குறிக்கவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

ஆரம்பம், இரண்டாம் நிலை, மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி ஆகியவற்றுக்கான அரசாங்கத்தின் செலவை அதிகரிக்கவும் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கென விசேட கல்விச்சேவையொன்றை உருவாக்கவும் அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் முன்மொழிவுகள் தெளிவில்லாமலிருப்பதாகவும் இவை தமது கோரிக்கைகளை பூர்த்தி செய்யவில்லையெனவும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் குறிப்பிட்டுள்ளது.

# அவுஸ்திரேலியா செல்ல முயன்ற இராணுவ மேஜர்கள் உட்பட 21 பேர் கைது

ஆட்கடத்தல்காரர்களுக்கு பணம் செலுத்தி அவுஸ்திரேலியா நோக்கி செல்வதற்கு தயாராக விருந்த இரண்டு சிங்கள இராணுவ மேஜர்கள் உள்ளிட்ட 21 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பொல்அத்துமோதர பகுதியில் வைத்து இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 2.30 அளவில் கைது செய்யப் பட்டதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர். தமக்கு கிடைத்த இரகசிய தகவல் அடிப்படையிலேயே இவர்கள் கைதானதாக பொலிஸார் கூறினர்.

சிங்கள இராணுவ மேஜர்களை கைது செய்த போது அவர்கள் இராணுவத்தில் பணியாற்றும் உறுப்பினர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் அநுராதபுரம் சாலியபுர மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள முகாம்களில் பணியாற்றி வந்துள்ளனர்.

கடற்படையினருக்கு முதலில் இந்த விடயம் அறியக்கிடைத்துள்ளது. பின்னரே பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். இதே வேளை, கைது செய்யப்பட்டவர்களில் 4 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அனைவரும் வடக்கில் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இன்று கைதான 21 பேருடன் மொத்தம் 47 பேர் குழுவாக செயற்பட்டுள்ளனர். ஏனையோர் ஏற்கனவே படகுகளில் அவுஸ்திரேலியா நோக்கி தப்பிச் சென்றுள்ளனர். அவர்களை கைது செய்வதற்கு கடற்படையினர் விசேட நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

# பாடசாலை வான்களை போக்குவரத்து அமைச்சு கண்காணிக்கும்

பாடசாலை வான் உரிமையாளர்களிடமிருந்து பணம் அறவிட்டதன் மூலம் தமது அதிகாரத்தை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மீறியுள்ளது. இதனால் பாடசாலை வான்களை மேற்பார்வை செய்யும் அதிகாரத்தை மீளப்பெற்றுதை போக்குவரத்து அமைச்சிடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க கூறினார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் ஏற்கப்பட்டதும் பாடசாலை வான்கள் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவில் பதிவு செய்யப்படுமென்று என அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலை வான்களிடமிருந்து 150 ரூபா அல்லது 200 ரூபா அறவிட்டதன் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 1.8 மில்லியன் ரூபாவை திரட்டியுள்ளது என அவர் கூறினார். ஆயினும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகள் இது பற்றி கருத்து தெரிவிக்கை யில், இந்த அதிகார சபை தொடர்ந்து பாடசாலை வான்களை பதிவு செய்யுமென குறிப்பிட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவரான அனோமா திஸாநாயக்கா, 7000 பாடசாலை வான்கள் அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

# தாய்வானுக்கு போதைவஸ்து கடத்திய இலங்கையர்களான அனோஜ், ரிஸ்வி தமிழகத்தில்

இலங்கையில் தேடப்படும் கடத்தல் குற்றவாளிகள், வழக்கிற்கு பயந்து, தப்பி வந்து தமிழகத்தில் பதுங்கி உள்ளதாக, கியூ பிரிவுப் போலீஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இலங்கையிலிருந்து, கள்ளவாகப் படகில், இராமநாதபுரம் மாவட்டம், தனுஷ்கோடி அரிச்சல்முனையில் வந்திறங்கிய அனோஜ், (22), என்பவரிடம், கியூ பிரிவு போலீசார் விசாரித்தனர். இவர், இலங்கை, நுவரலியா மாவட்டம், புசல்லாவையைச் சேர்ந்தவர்.

இவரும், கொழும்பைச் சேர்ந்த என்பவரும், தைவான் உட்பட சில நாடு களுக்கு, வாசனை திரவியம் பெயரில், போதைப் பொருட்கள் கடத்தினர்.

இலங்கைப் பொலிஸார், ரிஷ்வியைக் கைது செய்தபின், அனோஜை, தேடிவந்தனர். அனோஜ், பட கோட்டிகளிடம், 40 ஆயிரம் கொடுத்து, தனுஷ்கோடிக்கு தப்பி வந்தார் என்று தெரியவந்தது.

சமீப காலமாக, இலங்கையில் கடத்தல் தொழிலில் ஈடுபடும் சிலர், அங்குள்ள பொலீசுக்குப் பயந்து, தமிழகத்தில் பதுங்கி விடுகின்றனர். பின் போலீசில் சிக்கி, சிறையில் அடைக்கப்படு கின்றனர்.

சில காலத்திற்கு பின் வெளியே வந்து, ஏதாவது ஒரு அகதிகள் முகாம் அல்லது வெளியில் தங்கி, மீண்டும் கடத்தலில் ஈடுபடத் திட்டமிட்டு வருகின்றனர். இவர்களைக் கியூ பிரிவு பொலீஸார், தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

# கிழக்கில் இன, மத பேதமற்ற சேவையை முன்னெடுப்பேன் - மாகாண முதலமைச்சர் நஜீப் மஜீத்

கிழக்கு மாகாணத்தில் இன, மத பேதமற்ற சேவையை முன்னெடுப்பேன். அதற்காக அனைவரதும் ஒத்துழைப்பை "எதிர் பார்க்கின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு நேற்று முன்தினம் திருகோண மலையில் அமைந்துள்ள மாகாண சபைக் கட்டடத்தில் நடைபெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு கன்னியுரையாற்றுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

கிழக்கு மாகாண மக்களின் எதிர் கால நலனை கருத்தில் கொண்டு நாம் பணியாற்ற வேண்டும்.

இதற்கு அனைத்து மாகாண சபை உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளை மறந்து செயற்பட வேண்டும். தவிசாளர் ஆரியவதி நீண்ட காலமாக என்னுடன் இணைந்து சேவையாற்றியவர். அவ்வாறே உபதவிசாளர் சுபைர் மாகாண சுகாதார அமைச்சராக பணியாற்றியிருக்கிறார்.

ஆகவே இம் மாகாணத்தில் சிறந்ததொரு நல்லாட்சியை ஏற்படுத்த அவர் கள் இருவரும் எனக்கு உதவி யாக இருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

# கோப்பாயில் ஐந்து இடைநிலைப் பாடசாலைகள் கையளிக்கப்பட்டன

மகிந்தோதய திட்டத்தின் கீழ் 5000 ஆரம்ப பாடசாலைகள் மற்றும் 1000 இடைநிலை பாடசாலைகளை புனரமைத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட ஐந்து இடைநிலைப் பாடசாலைகளை கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இத்திட்டத்தின் கீழ் புனரமைக் கவென புத்தூர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம், அச்சுவேலி ஆரம்ப பாடசாலை, தோப்பு அருள் நந்தி வித்தியாலயம், நவக்கிரி அ.மி.த.க ஆகிய ஐந்து பாடசாலைகளே கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் திரு.ம.பிரதீபன், வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு.இ.கிருஸ்ணராசன், கோட்டக்கல்வி அதிகாரி திரு.எஸ்.பாலசுப்பிரமணியம், பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அதிபர், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# சில பாடசாலைகளில் இந்து மாணவர்கள் சமயச் சின்னங்கள் அணியத் தடை

- இந்து மகா சபை கண்டனத் தீர்மானம்

வலிகாமம்

வடக்கு கிழக்கு மலையகம் போன்ற பகுதிகளில் உள்ள சில பாடசாலைகளில் இந்து மாணவர்கள் தமது சமய சின்னங்களை அணிந்து செல்வதற்கு பாடசாலை நிர்வாகங்கள் தடை விதித்துள்ளன. இது மாணவர்களினது அடிப்படை மனித உரிமை மீறல் சமய வழிபாட்டிற்க்கும் பங்கம் உண் டாக்கும் ஒரு செயலாகும்.

இத்தகைய செயலகள் நிறுத்தப்பட வேண்டியது அத்தியவசியமாகும்.

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் கூடிய வேளையில் இந்த தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. ஒவ்வொரு மனிதாகளுக்குத் தமது மத சுதந்திரத்தைப்பேணவும் பாதுகாக்கவும் அரசியல் யாப்பின் பிரசாரம் பாதுகாப்பும், உரிமையும் உண்டு இதனைத் தடுக்கும் வகையில் ஒரு சில பாடசாலைகள் மறுத்து வருகின்றன.

இது மாணவாகளுக்க இடையே மத நம்பிக்கையை சீர் குலைப்பதுடன் மனத"தளவில் தாக்"கத்தையும் உண்டு பண் ணக் கூடியதாகும். இந்த வகை யில் மாணவாகளின் சமய செல்பாடுகளை தடை செய்வது பிழையான செயலாகும். இத்தகைய செயல்களில் ஈடுபடும் பாடசாலைகள் எதிர் காலத்தில் இத்தகைய நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ள வேண்டும்.இல்லையென்றால் இது சம்பந்தமாக மனித உரிமைகள் ஆனைக்குழவில் முறையிட வேண்டியது தவிர்க்கமுடியாததாகிவிடும் எனவும் இந்த மகா சபைச் செயலாளரினால் தெரிவிக்கப்பட்டுளள்து.

# மகாத்மா காந்தியின் 143ஆவது பிறந்த நாளை முன்னிட்டு மன்னாரில் இரண்டாம் கட்ட வீட்டுத்திட்டம் ஆரம்பம்

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 50 ஆயிரம் வீடமைக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியமடு மத்திய வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மகாத்மா காந்தியின் 143ஆவது பிறந்தநாளை முன்னிட்டு இந்த வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் சுமார் 7500 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இன்றைய ஆரம்ப நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் அசோக் கே.காந்தா, தேசிய நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச, கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாட் பதீயுதீன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமங்களில் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதும் நிகழ்வு இடம்பெற்ற பெரியமடு கிராமத்தில் இருந்து எவரும் தெரிவு செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

# ஹெரோயின் வைத்திருந்த பெண்ணிற்கு மரண தண்டனை

ஹெரோயின் வைத்திருந்த பெண் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

2002ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி ஹெரோயின் 3.8 கிராம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் குறித்த பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.

2002ஆம் ஆண்டு தொடக்கம் இவ் வழக்கு மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் நேற்று இறுதி விசாரணைகள் நடைபெற்று கொழும்பு மேல் நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

குறித்த பெண் தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதன் காரணமாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அவருக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஒக்டோபர் மாதம் 03ஆம் திகதி புதன்கிழமை

## இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வுக்கு இந்தியாவின் உத்தரவாதம் தேவையில்லை

"இலங்கை இனப்பிரச்சினையின் இறுதித் தீர்வுக்கு இந்திய அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும் என்றால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயார்" என்று யாழ்.மாவட்ட எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இடையில் இடம்பெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து சுமார் ஒன்பது மாதங்களுக்கு மேலாகிவிடடன. எந்தவொரு முடிவும் எட்டப்படாமல் இந்தப் பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தது.

இனப்பிரச்சினைக்குப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக இறுதித் தீர்வு காணப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது. ஆனால் அதற்கு முன்னதாகவே அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் சுமார் பதினெட்டுத் தடவைகள் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன. இருந்தபோதிலும் எவ்வித முடிவுக்கும் வராமலேயே இரு தரப்புகளுமே பேச்சுவார்த்தைகளில் இருந்து ஒதுங்கிக் கொண்டன. அதன் பின்னர் பரஸ்பரம் இருதரப்பினருமே தொடர்ச்சியாக குற்றச்சாட்டினைத் தெரிவித்து வருகின்றன. இந்த இழுபறி நிலையையும், இரு தரப்பும் தெரிவிக்கும் குற்றச்சாட்டையும் பார்க்கும்போது இரு தரப்பிற்குமே இது சதுரங்க விளையாட்டாக இடம்பெறுகிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சிகளோடு சம்பந்தப்பட்ட அரசாங்கம் என்றாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றாலும் சரி, இரண்டுமே கூட்டமைப்புக்கள்தான். அரசாங்கக் கூட்டமைப்பில் சுமார் பதினான்கிற்கும் மேற்பட்ட கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, போன்ற கடும்போக்கு சிங்களத் தேசியவாதக் கட்சிகள் அரசாங்கக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன. இந்தக் கடும்போக்குச் சிங்களவாத அரசியல் கட்சிகளுக்கு இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்கள் 'வந்தேறு குடிகள்' என்ற குருட்டுப் பார்வைதான் இருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு எடுக்கப்படும் முயற்சிகள் இந்தக் கடும்போக்குச் சிங்கள தேசியவாதக் கட்சிகளுக்கு வேப்பங்காயாக கசக்கிறது. மறுபுறத்தில் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அஹிம்சை வழியையே அன்றும், இன்றும் நாடி நிற்கும் தமிழரசுக் கட்சி அதில் ஒன்று. தனித் தமிழ்நாடு கோரி ஆயுதமேந்திப் போராடிய ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, புளொட் போன்ற முன்னாள் ஆயுதக் குழுக்களும் இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

ஐக்கியமும், பேராட்டமும் என்று சொல்வார்களே. அந்த நிலைதான் அரசாங்கக் கூட்டமைப்புக்குள்ளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளும் நிலவுகிறது. சுதந்திரக் கட்சி கூறும் கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களை, அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது. இதேபோன்று தமிழரசுக் கட்சியினதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் தலைவரான இரா.சம்பந்தனுக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ்.பின் தலைவரான சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் முற்றி வெடித்து அண்மையில் அம்பலத்துக்கு வந்தன.

இதற்காக தங்களுக்குள்ளேயே கருத்து ஒற்றுமைக்கு வரமுடியாத அரசாங்கத் தரப்பும், மறுபுறத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கலந்துபேசி ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு எப்படி வரமுடியும் என்று சிலர் சந்தேகங்களை எழுப்பலாம். இந்தச் சந்தேகங்கள் அர்த்மற்றவை என்று இலகுவாகவே தட்டிக் கழித்துவிட முடியும். என்னதான் சொன்னாலும், இனப்பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினை என்ற வகையில், அனைத்துக் கட்சிகளும் அங்கம் வகிக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவே தீர்வுகாண முடியும் என்பது உண்மைதான்.


இந்த நிலையில்தான் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இருதரப்பினரையும் வலியுறுத்தியுள்ளார். எதிர்வரும் பத்தாம் திகதி புதுடில்லி செல்லவிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்கள் குழுவிடம் இந்தியா மீண்டும் இந்த வற்புறுத்தலை விடுக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

"இலங்கை அரசாங்கத்திற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் பட்சத்தில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்காது" என்று செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் அழுத்தந்தான் இருதரப்பையும் பேச்சுவார்த்தை மேசைக்குக் கூட்டிவரும் என்பது ஒரு புறம் இருக்கட்டும்.

1985 ஆம் ஆண்டு திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பின்னர் எத்தனையோ தடவைகள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒன்றுமே வெற்றியளிக்கவில்லை. முதல் தடவையாக ஆயுதமேந்திய தமிழ்க் குழுக்களும், சாத்வீக கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் திம்புப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றின. திம்புப் பேச்சுவார்த்தை நடந்து, முடிந்து கிட்டத்தட்ட கால் நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. கூறுவதுபோல் இறுதித் தீர்வுக்கு இந்தியா உத்தரவாதம் அளிக்க முடியாது; அளிக்கவும் கூடாது. பேச்சுவார்த்தையில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புகளும் இறுதித் தீர்வை காண்பதற்கான உறுதிப்பாட்டோடு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதுவே இருக்கக்கூடிய ஒரே வழி.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# துங்கம் தின்று, கடலைக் குடித்து, அடிமைகளின் உழைப்பில்... துபாய்!



(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் எல்லா இளைஞர்களும் அகமதுவைப் போலத்தான் சிந்திக்கிறார்களா? பத்திரிகையாளரும் சீர்திருத்தவாதி என்று அறியப்படுபவருமான 31 வயது சுல்தான் அல் குசேமியை சந்தித்தேன். மேற்கத்திய உடை அணிந்திருந்தார். அதிவேகமாகப் பொரிந்து தள்ளினார். "மக்கள் சோம்பேறிகளாகிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அப்பாவால் பெத்த பிள்ளைகளைக் கூட வளர்க்க முடியாதா என்ன? அரசாங்கம் ரொம்பவும் தான் சீராட்டுகிறது" என்று சீறினார்.

அடிமைகள் உழைப்பில் அதிசயங்கள் - துபாயின் செயற்கை தீவுகள் ஆனால் அடிமை உழைப்புதான் துபாயை உருவாக்கியிருக்கிறது என்ற விசயத்தை நான் பேசத்தொடங்கியதுமே அவர் ஆத்திரப்பட்டார். "அவர்கள் எங்களுக்கு நன்றி சொல்லவேண்டும். உலகத்திலேயே மிகவும் சகிப்புத் தன்மை கொண்ட மக்கள் நாங்கள்தான். இங்கே வருபவர்கள் எல்லோரும் மரியாதையாகத்தான் நடத்தப்படுகிறார்கள்" என்றார்.

சோனாப்பூர் என்றொரு இடம் இருப்பதாவது அவருக்குத் தெரியுமா? மெல்லக் கேட்டேன். அவர் ஆத்திரத்தில் வெடித்தார். "நியூயோர்க்கில் மெக்சிகோ காரர்கள் மோசமாக நடத்தப்படவில்லையா? மக்களை கௌரவமாக நடத்தவேண்டும் என்று புரிந்து கொள்வதற்கே பிரிட்டனுக்கு எத்தனை காலம் பிடித்தது? நானும் லண்டனுக்கு வந்து ஆக்ஸ்போர்டு வீதியில் இருக்கும் வீடற்றவர்களைப் பற்றி எழுதி, ஒரு மோசமான நகரமாக அதை சித்தரிக்க முடியாதா? பிடிக்கவில்லை என்றால் தொழிலாளிகள் போகலாம். இந்தியனோ, ஆசியனோ.. பிடிக்கவில்லை என்றால் கிளம்பட்டுமே."

"கிளம்ப முடியாதே. அவர்களுடைய பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்திருக்கிறார்கள். சம்பளமும் கொடுப்பதில்லை" என்றேன். உடனே "அப்படி நடந்திருந்தால் அது தவறுதான். யாராயிருந்தாலும் தண்டிக்கப்படவேண்டும்" என்றார்.

"நீங்கள் ஏன் தொழிலாளிகளின் வேலைநிறுத்த உரிமையைப் பறித்து அவர்கள் மீது வன்முறையை ஏவுகிறீர்கள்?" என்றேன். "கடவுளே, வேலை நிறுத்தத்தை நாங்கள் அனுமதிக்கவே முடியாது. அது பெரிய அசௌகரியம். வேலையை நிறுத்தி விட்டு தெருவுக்கு வருவார்கள். நாங்கள் பிரான்சு மாதிரி ஆவதை அனுமதிக்க முடியாது." என்றார்.

"அப்படியானால் ஏமாற்றப்பட்ட தொழிலாளிகள் என்னதான் செய்வது?" என்று கேட்டேன். "நாட்டை விட்டுப் போகட்டும்" என்றார். நான் பெருமூச்சு விட்டேன். "மேலை நாட்டுக் காரர்களுக்கு எங்களைக் குறை சொல்வதே வேலையாயிருக்கிறது" என்று அலுத்துக் கொண்ட சுல்தான், தன் குரலை கீச்சுக்குரலாக மாற்றிக் கொண்டு, "மிருகங்களை நல்லபடியாக நடத்தமாட்டீர்களா?" "உங்கள் ஷாம்பூ விளம்பரத்தை கொஞ்சம் தரமாக செய்யக் கூடாதா?" "தொழிலாளிகளை கவுரவமாக நடத்தக்கூடாதா?" என்று கிண்டலாகப் பேசிக்காட்டினார்.

விலங்குகள், ஷாம்பூ விளம்பரம் அப்புறம் தொழிலாளிகள்! இந்த வரிசைக் கிரமத்தின் அமைப்பே உண்மையை எடுத்தியம்புகிறது.

"மேற்குலக பத்திரிகையாளர்கள் எங்களை விமரிசிப்பதன் மூலம், தங்கள் பாதங்களையே சுட்டுக் கொள்கிறார்கள்" என்று கூறி புன்னகைத்தார் சுல்தான். "துபாய் தோற்றுவிட்டால், மத்திய கிழக்கு மிகவும் அபாயகரமான பகுதியாக மாறும். ஒரு நவீன முஸ்லிம் நாடாக இருப்பது எப்படி என்பதை நாங்கள் காட்டிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் தோற்றால் துபாய் இரானின் வழியில் இசுலாமியப் பாதையில் சென்றுவிடும்"என்றார்.

டபுள் டெக்கர். இது பிரிட்டனிலிருந்து குடியேறியவர்கள் கூடும் ஓட்டல். "துபாயின் வாழ்க்கை முறைக்காகத்தான் இங்கே தங்குகிறோம்" என்று எல்லோரும் கூறுகிறார்கள். "அதென்ன வாழ்க்கை முறை?" என்று கேட்டால் பலருக்கு விளக்கத் தெரியவில்லை. ஆன்வார்க் என்ற பெண்மணி அதை விளக்குகிறார். "அன்றாடம் இரவு இங்கே கேளிக்கைதான். நம் ஊரில் அப்படி கிடையாது. நிறைய ஓய்வு நேரம் இருக்கிறது. பணிப்பெண்களும் ஆட்களும் இருப்பதால் நமக்கு வேலை இல்லை. எப்போதும் பார்ட்டிதான்"

இருந்தாலும் துபாயில் அவர்களுக்கு ஏமாற்றமும் உண்டு. "இங்கே விபத்து கேசில் சிக்கி விட்டால் அப்பப்பா பயங்கரம். ஒரு பிரிட்டி' பெண் எவனோ ஒரு இந்தியன்மீது காரை ஏற்றி விட்டாள். அதற்காக 4 நாள் அவளை லாக் அப்பில் வைத்து விட்டார்கள். இந்த இந்தியர்கள் இருக்கிறார்களே, அவர்கள் வேண்டுமென்றே காரில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறார்கள். செத்தால் அவர்களுடைய குடும்பத்துக்கு பணம் கிடைக்குமே அதற்குத்தான். ஆனால் பொலிஸ் நம்மைத்தான் குற்றம் சொல்லும். பாவம் அந்தப் பெண்!" என்றாள் ஜூலிஸ் டெய்லர்.

"அதெல்லாம் இருக்கட்டும். ஜனநாயகமே இல்லாத ஒரு நாட்டில் வாழ்வது எப்படி இருக்கிறது?" என்று கேட்டேன். சிலர் என்னை விநோதமாகக் கருதிப் பார்த்தார்கள். சிலர் தம்மை அவமானப் படுத்தியதாக கருதினார்கள். "இது அரேபியக் கலாசாரம்" என்று கத்தினான் ஒரு இளைஞன். பிறகு அழகு சாதனத் துறையில் வேலை செய்யும் ஒரு அமெரிக்கப் பெண்ணிடம் பேச்சுக் கொடுத்தேன். "சொந்த ஊரில் விலை போகாதவன் எல்லாம் இங்கே வந்து சேர்கிறார்கள். தங்கள் தகுதிக்கு மீறிய உயர் பதவி, பணத்தில் திடீரென்று குளிப்பதால், தங்கள் தனித்திறமை பற்றி பினாத்துகிறார்கள். எதற்கும் லாயக்கில்லாத மனிதர்கள் உயர்பதவிகளில் நிறைந்திருப்பதை உலகில் வேறு எங்கும் நான் கண்டதில்லை. இங்கே ஐரோப்பியப் பெண்கள் செய்யு[illegible] அதே வேலையை பிலிப்பைன்ஸ் பெண்கள் செய்கிறார்கள் - ஆனால் அவர்களுக்கு கால் பங்கு சம்பளம்தான். பச்சையான நிறவெறி!" என்று அவள் பொரிந்து தள்ளினாள்.

இந்தப் பெண் மட்டும் ஒரு விதிவிலக்கு. மற்றப்படி இங்கே மேல்நாட்டினர் அனைவரும் கருத்தொருமிக்கும் ஒரே விசயம் - பணிப்பெண்கள். நீங்கள் இங்கே ஒருபெண்ணை வேலைக்கு அமர்த்திக் கொண்டுவிட்டால், அவள் பாஸ்போர்ட்டை பிடுங்கி வைத்துக் கொண்டுவிடலாம். அதுதான் இங்கே மரபு. பிறகு அவளுக்கு என்ன வேலை, எப்போது ஓய்வு, எப்போது சம்பளம், அவள் யாருடன் பேசலா[illegible] பேசக்கூடாது என்று அனைத்[illegible]யும் நீங்கள் முடிவு செய்யலாம்.

பகலிலும் இருண்டு போன அடிமைகளின் வாழக்கை மீது ஒளிமையாமான துபாயின் இரவு வாழ்க்கை. ஒரு பிலிப்பைன்ஸ் நாட்டு சுற்றுலாப்பயணி சொன்னாள். "மால்களில் நடமாடுவதற்கே பயமாக இருக்கிறது. என்னைப் பார்த்தவுடன் பல பணிப்பெண்கள் ஓடி வருகிறார்கள். "காப்பாற்றுங்கள். என்னைக் கைதியாக வைத்திருக்கிறார்கள். வீட்டுக்கு போன் பேசவிடுவதில்லை. ஓய்வு நாளே இல்லை" என்று கதறுகிறார்கள். "அப்படியா, தூதரகத்துக்கு தெரிவிக்கிறேன். எங்கே வேலை பார்க்கிறீர்கள். அந்த வீட்டின் முகவரியைச் சொல்லுங்கள்" என்று கேட்டால் அவர்கள் யாருக்கும் முகவரி தெரிவதில்லை. தூதரகமோ இவர்களைப் பற்றிக் கவலைப்படுவதேயில்லை. என்னால் எதுவும் செய்ய முடியாத கையறு நிலை!" என்றாள். துபாயில் பெண்களுக்காக ஒரேயொரு விடுதிதான் இருக்கிறது. அதில் இருப்பவர்கள் அனைவரும் தப்பித்து வந்த பணிப் பெண்கள். மேலா மாதாரி என்ற எதியோப்பியப் பெண் தன் கதையை சொல்கிறாள். இது சொர்க்கம் என்று நம்பித்தான் 4 வயது மகளை ஊரில் விட்டு விட்டு அவள் இங்கே வந்திருக்கிறாள்.

(நாளை தொடரும்)

# சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012

# REGISTRAR GENERAL DEPARTMENT Open Competitive Examination for Class III Grade II of the Registrar Service - 2012

பதிவாளர் நாயகம் திணைக் களத்தின் பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

**2.** 2013, சனவரி மாதம் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் பரீட்சை பெறுபேறுகளுக் கிணங்க கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சையாளர்கள் இப்பதவிகளுக்காக சேர்த்துக்கொள்ளப் படுவர். இப்பரீட்சை கீ ழ்க் காணப் படும் நகரங்களில் நடாத்தப்படும் . அந்நகரங்கள் மற்றும் நகரங்களுக்குரிய நகர இலக்கங்கள் கீழ்க்காணப்படுகின்றன. போதுமானளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அல்லது வேறு காரணங்களினால் அல்லது ஏதாவது பரீட்சை நிலையத் தினை இரத்துச் செய்து பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பின் பிரகாரம் பரீட்சை நிலையத்தினை தீர்மானிக்கும் எண்ணம் பரீட்சை ஆணையாளருக்கு உரியது.

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | அம்பாறை | 16 |
| கண்டி | 05 | அநுராதபுரம் | 19 |
| காலி | 07 | பதுளை | 21 |
| யாழ்ப்பாணம் | 10 | இரத்தினபுரி | 24 |

இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு திணைக்கள தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**3. சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப் படுத்தும் பொது நிபந் தனைகளும் இங்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அமைவாக பதிவாளர் சேவை III ஆம் வகுப்பின் II ஆம் தர பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்படும்.

**(i)** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானதுமாகும். தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகையினை செலுத்துதல் வேண்டும்.

**(ii)** தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் மற்றும் அரச சேவையின் பொது நிபந்தனைகளுக்கும் , இதுவரை வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் வழங்கப்படும் நிபந்தனை களுக் கு உட்படல் வேண்டும். அவ்வாறே தாபனக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையான பிரிவுகளுக்கும் மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச சேவை ஆணைக் குழுவின் அலுவலக நடவடிக் கையின் ஒழுங்குமுறையின் 1 ஆவது காண்டத்தின் அத்தியாயத்திற்கும் உட்படல் வேண்டும்.

**(iii)** சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படும் அலுவலர்கள் நியமன அதிகாரியினால் தீர்மானிக் கப்படுகின்றவாறு பயிற்சிக்கு உட்படல் வேண்டும்.

**(iv)** அரச சேவைக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படும் அலுவலர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

**(v)** அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் ஒரு வருடம் பூர்த்தியாகும் வரை பதில் சேவை அடிப்படையில் நியமனம் செய்யப்படுவர்.

**(vi)** பதவியில் நியமனம் பெற்று மூன்று வருடங்கள் முடிவதற்குள் பதிவாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் தாபனத்தினால் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடை எழுத்துப் பரீட்சையில் சித்திபெறல் வேண்டும். வயதினை அடிப்படை யாகக் கொண்டு வினைத்திறன்காண் தடையில் விடுப்பு வழங்கப்பட மாட்டாது.

**(vii)** பதவியில் நிரந்தரப்படுத்தப் பட்டதன்பின் அரச சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அலுவலர்களின் முன்னைய சேவையின் அங்கத்துவம் முடிவுறுவதோடு. அச்சேவைக்கு மீள திரும்புவதற்கான உரித்து இல்லாது போகும்.

**4. சம்பளத் திட்டம் :**- எம்என்-5-2006(ஏ)- ரூபா 16,720-10 x 320-11 x 365-15 x 450- ரூபா 30,685. 6/ 2006

**(iv) சுற்றுநிருபம்**

**5. வயதெல்லை:**- வயது 21 வருடங்களுக்கு குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

**6. கல்வித் தகைமைகள்.**- 2012.09.28 ஆம் திகதிக்கு கீழ்க்காணப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

**(i)** விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும் . விண்ணப்பதாரர் சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும் . அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கையின் அனைத் து பிரதேசங்களிலும் கடமை புரிவதற்கும் பதவியின் கடமையினை நிறைவேற்றுவதற்கான சிறந்த தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**(ii)** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் பட்டதாரியாக இருத்தல். அல்லது

**(iii)** சட்டக் கல்லூரியினால் நடாத்தப்படும் இறுதி சட்டப் பரீட்சையில் சித்திபெற்று உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த சட்டத்தரணியாக இருத்தல் .

**7. சேர்த்துக்கொள்ளப்படும் முறை.**- விண்ணப்பத்தினைக் கோரி தகைமைகளினை உடைய விண்ணப்பதாரர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சையின் பெறுபேறு களுக்கிணங்க சேர்த்துக்கொள்ளப்படுவர். பரீட்சையில் வெற்றிபெறுவதற்காக ஒவ்வொரு வினாத்தாளிலும் 40 அல்லது அதற்கு மேற்பட்டதாக புள்ளிகளைப்பெறல் வேண்டும் . அவ்வாறு பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர்களை தெரிவு செய்து, அவர்களின் அப்புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கு இணங்க, மேலதிக புள்ளிகளைப் பெற்றவர்கள் ஒழுங்குமுறையில் சாதாரண நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சான்றிதழ்களை பரிசீலனை செய்தலுக்காக மட்டுமே சாதா ரண நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

**8. பரீட்சைக் கட்டணங்கள் .**- பரீட்சைக் கட்டணம் ரூபா 750 ஆகும். இப் பரீட்சைக் கட் டணம் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக மாவட்ட / பிரதேச செயலகத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இன் கீழ் வைப்பிலிட்டு விண்ணப்பதாரரின் பெயரில் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்படாது. பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தின் உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும் . இப்பரீட்சைக் கட் டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் போட்டோ பிரதியினை தன்வசம் வைத்துக கொள்ளல் பிரயோசனமானது.

**9. விண்ணப்பிக் கும் முறை.**- **(அ)** விண்ணப்பப்படிவமானது, இவ்வறிவித்தலில் குறிப்பிடப் பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங் கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் இடவும். அதனை கடதாசியின் இரு பக்கத்தினையும் உபயோகித் து, 8 1/ 2" x 12" விசாலமுடைய கடதாசியில் தயாரிக்குக. மாதிரி விண்ணப் பப்படிவத்தின் விடயங்கள் 1 தொடக்கம் 7 வரை முதலாவது பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாவது பக்கத்திலும் தயாரிக்குக. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு பொருந்தாத விண்ணப்பப்படிவங்கள் , பூரணமற்ற தகவல்கள் அடங்கிய விண்ணப்பப்படிவங்கள் தகவல் அளிக்காமல் இரத்துச் செய்யப்படும் . அவ்வாறே பூரணப்படுத்தப்பட்ட விண்ணப் பப்படி வங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதா என விண்ணப்பதாரர் விசாரித்து அறிந்துகொள்வதோடு, அவ்வாறு இன்றேல் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என மேலும் தெரிவித்துக்கொள்கின்றேன். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியினை தம்வசம் வைத்துக் கொள்ளல் பிரயோசனமானது.

**(ஆ)** விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்தல், விண்ணப்பதாரர் தாம் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைபெற்ற மொழியிலேயே இருத்தல் வேண்டும் .

**(இ)** விண்ணப்பப்படிவங்கள் 2012.10.30 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர், பதிவுத் தபாலில் **"பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை"** என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இடப்பட்டு அனுப்பப்படும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012"** என தெளிவாக குறிப்பிடல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**குறிப்பு.**- அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் தங்களது திணைக்கள தலைவரினூடாக அனுப்பிவைத்தல் வேண்டும் .

**(ஈ)** அனைத்து வகைகளிலும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் இடுகையில் விண் ணப்பப் படிவங்கள் காணாமல் போதல் அல்லது தாமதித் தல் சம்பந்தமாக செய்யப்படும் எந்தவொரு முறையீடுகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**(உ)** விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி, உரிய விதத்தில் விண்ணப்பத்தினைப் பூர்த்திசெய்து, உரிய தினத்திற்கு முன்னர் அனுப்பப்படும் அனைத்து விண்ணப்ப தாரர்களுக்கும் அனுமதி அட்டைகள், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அனுப்பப்படும். அத்துடன் அதுபற் றிய அறிவித்தல் பத்திரிகை அறிவித்தல் பத்திரிகைகளில் வெளியிடப்படும் . அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்த பின்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட விதத்தில் அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல்வேண்டும். தங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பப்படிவம் மற் றும் பணத்தினை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதிகளும், பதிவுத்தபா லின் பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு வெளியில் உள்ள பிரதேசத்திலாயின் பெக்ஸ் இலக் கத்தினைக் குறிப்பிட்டு தங்களது வேண்டுகோள் கடிதத்தினை இலங்கை பரீட்சைகள் திணைக் களத்திற்கு அனுப்புதல் கூடிய பொருத்தமானதாகும் .

**10. பரீட்சை நிலையத்திற்குள் உட்புகுதல்.**- **(i)** பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை நிலையத்தின் நிர்வாகியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய பிரவேசப் பத்திரத்தினை சமர்ப்பித்தல் வேண்டும். தனது பிரவேசப்பத்திரத் தினைச் சமர்ப்பிக்காத பரீட் சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

**(ii)** அனைத்து பரீட்சார்த்திகளும் தனக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக் குத் தோற்றுதல் வேண்டும். அனைத்து பரீட்சார்த்திகளும் பரீட்சையாளர்களால் கடைப்பிடிக்க வேண்டிய பொது சட்டதிட்டங்களுக்கு உட்படல் வேண்டும் .

**(iii)** பரீட்சார்த்திக்கு பிரவேசப் பத்திரத்தினை வழங்கல், அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தாகக் கருதப்படக் கூடாது.

**11. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**- தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் சம்பந்தமாக பரீட்சை நிலைய நிருவாகி திருப்திப்படும் விதத்தில் தனது அடையாளத்தினை உறுதிப்படுத் தல் வேண்டும். அது சம்பந்தமாக கீழ்க்குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

**(i)** ஆட் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை

**(ii)** வழங்கப்பட்ட திகதி, பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு 3 வருடங்களுக்கு மேற்படாத வாறாக செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு.

**12. உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்:**

**(அ)** பரீட்சார்த்தி தகைமையற்றவராக தெளிவாகினால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலப்பகுதியில் அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்த தகைமையினை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு.

**(ஆ)** பரீட்சை நடாத்தப்படல் சம்பந்தமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற் கொள்ளப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி உட்படல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீ ட்சைகள் ஆணையாளர் நாயகம் மூலம் மேற்கொள்ளப்படும் தண்டனைக்கு அவர் கட்டுப்படல் வேண்டும்.

**13.** இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் சம்பந்தமாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

**14. பரீட்சை நடைமுறைகள் :**

**(i) மொழி மூலம்:-**

**(அ)** சிங்கள மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் ஒரு மொழியில் விண்ணப்பிக்க முடியும்.

**(ஆ)** அனைத்து விண்ணப்பதாரர்களும், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்திலேயே அனைத்து வினாத் தாள்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

**(இ)** தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

**(ii) பாடங்களும் அது தொடர்பான விபரங்களும்.**- பரீட்சையானது, கீழ்க் காணப்படும் விடயங் கள் சம்பந்தமான எழுத்து மூல வினாப் பத்திரங்களை உள்ளடக்கியதாகும். விடயம் விடய கால அளவு அதி சித்திக் இலக்கம் கூடிய கான புள்ளி புள்ளிகள்

நுண்ணறிவு 1 1 மணித்தியாலம் 100 40
பொதுஅறிவு 2 1 மணித்தியாலம் 100 40
மொழியும் 3 1 மணித்தியாலம் 100 40

கட்டுரையும் விடய விபரங்கள், வினாத்தாள் விடய விபரங்கள், நுண்ணறிவு.- வினாத்தாள்கள், பல்வகை மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது.

**பொது அறிவு.- வினாத்தாள்கள்** பல்வகை மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடிய 50 வினாக்களைக் கொண்டது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்க வேண்டும்.

**மொழியும் கட்டுரையும்.**- வினாத்தாள்கள் கட்டமைப்பு மற்றும் சுருக்கமான வினாக்களுடன் கூடியது. வினாக்கள் அனைத்திற்கும் விடையளித்தல் வேண்டும்.

**ஈ. எம். குணசேகர, பதிவாளர் நாயகம், பதிவாளர் நாயகம் திணைக்களம்,**
**இல. 234/ ஏ3, டென்சில் கொப்பேகடுவை மாவத்தை, பத்தரமுல்லை. 2012.09.28.**

## மாதிரி விண்ணப்பப்படிவம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012**

**Registrar General Department Open Competitive Examination for Class III Grade II of the Registrar Service - 2012**

**(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)**

பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மொழிமூலம் :(சிங்களம்-2 / தமிழ்-3)
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்.)

* வர்த்தமானி அறிவித்தலுக்கு இணங்க விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் மற்றும் மாவட்டத்தின் இலக்கத்தினைக் குறிப்பிடவும்.

**நகரம் நகர இலக்கம்**

1.
2.

1. (i) முதல் எழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.................................................................................................

உதாரணம் : SILVA, A.S.

**(ii)** முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.................................................................................................

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியாக ஆராயும் திறன் மற்றும் வாய்மொழி மூலமல்லாத விடயத்துடன் தொடர்புபட்ட தான தகவல்கள் பற்றிய ஆற்றல் மற்றும் நுண்ணறிவினை பரிசீலிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்படும் வினாப்பத்திரங்கள் . இலங்கையின் சமூக மற்றும் கலாச்சார முறைகள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுடன் விஞ்ஞான மற்றும் தொழி நுட்ப முன்னேற்றம் சம்பந்தமான பரீட்சார்த்தியின் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கான வினாப்பத்திரம். தரப்படும் தலைப்பு மற்றும் கருப்பொருளின் கருத்து மற்றும் தகவல்களினை சமர்ப்பித்தல், கோவையிடல் மற்றும் தகவல் பரிமாற்றம் சம்பந்தமாக பரீட்சார்த்தியின் அறிவைச் சோதித்தல்.

4 பகுதி I : தொகுதி (IIm) - இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை - 2012.09.28

**2.** முழு முகவரி :..................................................................

**(i)** நிரந்தர வதிவிட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :
.................................................................................................

(ii) நிரந்தர வதிவிட மாவட்டம் :..................................................

(iii) அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்):
.................................................................................................

**3.** பால் :.................................................................................

பெண்-1, ஆண்-0 (கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

**4.** விவாகமானவரா/ விவாகமாகாதவரா ? :........................................

விவாகமானவர் -1
விவாகமாகாதவர் -2
(கூட்டினுள் உரிய இலக்கத்தினை இடவும்)

**5.** அடையாள அட்டை இலக்கம் :...................................................

6. (i) பிறந்த திகதி :..................................................................

ஆண்டு.................................. மாதம்.................................. திகதி..................................

**(ii)** .................... ஆம் திகதியன்று வயதுவருடங்கள் மாதங்கள் நாட்கள்

**7.** பரீட்சைக்குத் தோற்றுவதற்காக தாங்கள் தகைமை பெற்ற பரீட்சை அறிவித்தலின் எந்த பந்தியின்கீழ் என்பது-

6 **(ii)** அல்லது 6 **(iii)** :...........................................................

**7.1 6** (ii) பந்திக்கு கீழாயின், பெற்ற பட்டம் :....................................

தகைமையைப் பூர்த்திசெய்த திகதி :..............................................

**6 (iii)** பந்திக்கு கீழாயின், நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த திகதி:
.................................................................................................

**8. (கழற்ற முடியாதவாறு பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்)**

கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :...........................

**(i)** பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..................................

**(ii)** பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் திகதி :........................................

**(iii)** செலுத்திய கட்டணம் :..........................................................

**9. விண்ணப்பதாரரது சான்றிதழ்.**- இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட விபரங்கள் உண்மையானதெனவும், சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் ........................... மற்றும் ........................... ஆம் திகதிய பற்றுச்சீட்டினை இதில் இணைத்துள்ளதாக பிரதிக்கினை செய்கின்றேன். பரீட்சைகள் ஆணையாளர் மூலம் நடாத்தப்படும் சட்டதிட்டங்களுக்கிணங்க செயலாற்றுவதற்கும், இப்பரீட்சை சம்பந்தமான நிபந்தனைகளுக்கும் இணங்க நான் தகைமையற்றவன் எனத் தெரியவந்தால், பரீட்சைக்கு முன்னர் அல்லது பின்னர் எனது பரீட்சார்த்தி தகைமையை இரத்துச்செய்வதற்கு எடுக்கப்படும் எந்தவொரு தீர்மானத்திற்கும், நியமனம் பெற்ற பின்னர் தெளிவாயின், நான் இழப்பீடின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் இணங்குகின்றேன்.

.................................................................................................,

விண்ணப்பதாரரது கையொப்பம்.

திகதி :...........................................................................

9-845

# வாழ வழி விடுவோம் விலங்குகளுக்கும்



உலகம் தோன்றி பல கோடிக்கணக்கான ஆண்டுகளில் பல்கிப்பெருகிய உயிரினங்களின் வாழ்க்கை வெவ்வேறு வகைகளில் பரிணாமம் பெற்றுக் கொண்டே வருவதை உலக சரித்திரம் நிஷரூபித்துக் கொண்டே வருகிறது. உலகில் மற்ற வகை விலங்குகளைக் காட்டிலும் பாலூட்டிகளே முதன் முதலில் உருவானது. உச்ச உயர்வு பால்குடி உயிரினங்களான வாலில்லா குரங்குகள், குரங்குகள், மனிதர்கள் என விரிந்தார்கள். இன்று மனிதர்களின் ஆசைகளினாலும் அத்து மீறல்களாலும் சத்துகுறைவுற்ற உணவு, மிகுந்த மாசு, இரசாயன உரம் மற்றும் தொற்று நோய்களாலும் விலங்கினம் அழிந்து வருவதை உலகம் வருத்தத்துடன் உற்று நோக்குகிறது. காடுகளை அழித்து கழனியாக்குகிறேன் என்று விலங்குகளின் வீடுகளை அழித்து விலங்குகளின் வழித்தடங்களும் மறைக்கப்பட்டு மாற்றப்பட்டு காட்டை விட்டு நாட்டை நோக்கி திசை மாறி விலங்குகளும் உலா வர ஆரம்பித்தன. விரிந்திருந்த காடு அழிக்கப்பட்ட காரணங்களாலும் அவை வாழும்பகுதி சுருங்கி குறுகிய எல்லைக்குள் வாழ வேண்டிய கட்டாயம் ஏற்பட்ட காரணத்தாலும் மேற்கூறிய காரணத்தாலும் விலங்கினங்களில் 80 வகை பாலூட்டிகள் 40 வகை பறவைகள் 20 வகை நில நிர் வாழ்வன மற்றும் ஊர்வன அழிவின் விளிம்பை நோக்கிப் போய் கொண்டிருப்பது, வேதனை யளிக்கும் விசயங்களாகும்.

பாலூட்டிகளில் நீலகிரி மந்தி, தங்கநிற மந்தி, சிங்க வால் குரங்கு, வெள்ளை புருவ குரங்கு, ஒல்லி தேவாங்கு, பெரிய தேவாங்கு ஆகிய உயிரினங்கள் அழிந்து கொண்டிருப்பதில் சிலவாகும். யானைக்கு இந்திய நாட்டின் பாரம்பரிய விலங்கு என்கிற அந்தஸ்து கிடைத்திருப்பது மனதிற்கு மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது. இன்று இந்தியாவில் 25000 யானைகள் மட்டுமே உள்ளதாகக் கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. அதிலும் 3500 யானைகள் கோவில் களிலும் சர்க்கஸ் கூடாரங்களிலும் அதற்குப் போது மான உணவு மற்றும் சுகாதாரமின்றி போட்டதைத் தின்று எலும்பும் தோலுமாய் இருப்பதை நினைக்கும் பொழுது வருத்தமாய் உள்ளது.

நமது நாட்டில் தந்தங்களுக்காக ஆண் யானைகளைக் கொல்வது அதிகமாகி வருகிறது. முதலில் 50 பெண் யானைகளுக்கு ஒரு யானை என்றிருந்த விகிதாச்சாரம் இன்று ஆண் யானைகளின் சாகடிப்புக்கு பின்பு 200 பெண் யானைகளுக்கு ஒரு ஆண் யானை என்கிற விகிதாச்சரம் இனப்பெருக்கத்திற்குப் போதுமானதாக இல்லை என்பதுடன் விரைவில் யானை இனமும் அழிந்து விடுமோ என்கிற பயம் நெஞ்சில் வறட்சியை உருவாக்குகிறது.

பளிங்கு பூனை, லிங்க்ஸ் பூனை, ஓனாய், இந்தியக் குள்ள நரி, செந்நாய், பழுப்புக்கரடி, புனுகுபூனை, மலபார் புனுகு பூனை, புள்ளி லிங்சாங், சிவப்புப் பாண்டா, எறும்பு தின்னி, ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம், ஆசிய காட்டுக்கழுதை, சடைமாடு, சதுப்பு நில மான், நாலு கொம்பு மான், நீலகிரி வரையாடு, கஸ்தூரி மான், ஹிஸ்பிட் காட்டு முயல் போன்ற பாலூட்டிகளும் அழிந்து வரும் விலங்கினங்களில் சிலவாகும்.

60 ஆண்டுகளுக்கு முன்பு 40000 புலிகள் வாழ்ந்த இடத்தில் சென்ற ஆண்டு கணக்கெடுப்பின்படி 1400 புலிகள் மட்டுமே இருக்கின்றது என்பது வேதனையிலும் வேதனை இன்னும் 10 ஆண்டுகளில் புலிகள் இனிமே அழிந்து விடுமோ என்கிற பய உணர்வு நம்மைப் போன்றவர்களையும் சமூக ஆர்வலர்களையும் வேதனைக் குள்ளாக்குகிறது.

பாலூட்டிகளில் தான் நிலைமை மோசம் என்றால் பறவையினத்தில் அதை விடக் கொடுமை. மாபெரும் இந்தியப் பஸ்டர்டு, பெரிய இருவாட்சி, லிக் புளோரிக்கான, சைபீரியா கொக்கு, இமயமலை மோனால் பெசன்ட் முதலிய பறவைகளும் அழிவை நோக்கியுள்ளன. அரிய பறவைகளான கௌதாரி, பூ நாரை, வல்லூறு, தீக்கோழி முதலானவைகளும் காலப்போக்கில் அழிந்து வருகிறது. டர்கி போன்ற அளவுடைய டோடோ என்கிற மொரிஷியப் பறவையின் கடைசி உயிர் 1680 ஆம் ஆண்டே பிரிந்து விட்டது. அதன் புகைப்படம் கூட இப்போது இல்லை என்பது வேதனைக்குரியது 1500 ஆம் ஆண்டுகளில் ஐரோப்பியர்கள் அங்கே குடியேறியபோது கொண்டு வந்த செல்லப் பிராணிகள் டோடோவின் முட்டைகளை குடித்தே அழிந்து விட்ட காரணத்தால் அந்த இனமே அழிந்து போனது.



வட அமெரிக்காப் புறா, மடகாஸ்கரின் யானைப் பறவை ஃபுளோரிடாவின் வண்ணக்கழுகு, தென்னாப்பிரிக்காவின் குவாக்கா ஆகிய அழிந்தே பல நூற்றாண்டுகளாகிவிட்டது. வேட்டை சிறுத்தை, சிவப்புத்தலை வாத்து, மலைக்காடை முதலானவை சென்ற நூற்றாண்டோடு அழிந்து போனது.

ஊர்வனவற்றில் கடல் ஆமை, தோல் ஆமை, கங்கை முதலை, கழிமுக முதலை, சதுப்பு நில முதலை, இந்திய உடும்பு, நீர் உடும்பு, பாம்புகளில் ராஜ மலை பாம்பு, இந்திய முட்டை தின்னி பாம்பு, நீர் நிலத்தில் வாழ்வனவான இமயமலை நியூட், மலபார் மரத் தேரை, கோரோ மலை மரத் தேரை, முதுகெலும்பில்லா பிராணிகளான கிரேஷ்டேஷியன்

எனப்படும் நண்டு, நத்தை முதலானவை
மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே தோ
அதிகமான வகைகள் உள்ள பூச்சிகளில்
அழிப்பு, சுற்றுச்சூழல் மாசு, அதி அள
பூச்சிக் கொல்லி மருந்து போன் களா
அழிந்து கொண்டுள்ளன. இமயமலையில்
விட்டு எண்ணக்கூடிய அளவில் கஸ்தூரி
என்பதும் இதயத்தையே பிசையும் அவல

சிட்டுக் குருவிகள் நூற்றுக்கணக்கில்
பறப்பதையோ இரண்டு தொலைபேசிக் க
நடுவில் இருக்கும் கம்பிகளில் ஓர் இடம்
யின்றி வரிசையாக அமர்ந்திருப்பதையோ
இப்போது பார்க்கவே முடியவில்லை. ரா
கழுத்தில் வெள்ளை நிறம் கொண்ட (ெ
இப்போது இருக்கிறதா என்றே தெரியவி

தினமும் 11 மணியளவில் எங்கிருந்தா
எடுக்க பறந்து வரும் பருந்து இப்பொழு
குன்றம் வந்து பிரசாதம் எடுப்பதில்லை
எண்ணும்போது வருத்தமே மிகுந்து வேத
வெளிப்படுகிறது. அலைபேசி இப்போது
கைக்கும் வந்து விட்டது. இப்போது 3
ஆயிரம் அலைபேசி கோபுரங்கள் நாட்டி
திலும் வியாபித்துள்ளது. இன்னும் அ
களின் எண்ணிக் கையை அதிகரிக்கத்
வருகிறது. அதில் இருந்து கிளம் மின்
பறவைகளின் உயிரைப் பறிக்கிறது. இ
தடுக்கிறது. புற்றுநோயை உருவாக்குகிற
விஞ்ஞானிகள்.

புலிகள் பாதுகாப்புத் திட்டம், கிர் சிங்
திட்டம், இமயமலை கஸ்தூரி மான் பாது
ஹங்கல் மான் பாதுகாப்புத் திட்டம், யா
திட்டம், பறவைகள் சரணாலயம், முதும
போன்ற மத்திய மாநில அரசுகளின் மு
அரியவகை விலங்குகள் அழிந்து வருவ
காடுகள் அழிக்கப்பட்டு அவை வாழும்
வரையறுக்கப்படுவதும் உணவுக்காகவும்
பொருளுக்காகவும், சுடப்படுவதும், இனப்
உதவாத ஆண், பெண் விகிதாசாரமும்
அழிய காரணங்கள் இன்று விளை நில
மாறி விடுகிறது.

சுருங்கி வரும் விவசாய நிலத்திலும்
உபயோகித்து அதனால் ஏற்படும் வேதி
நிலங்கள் அனைத்தும் நஞ்சாகி அதில்
களான நஞ்சையே நாமும் பறவைகளும்
வாழ வேண்டிய கட்டாயம். தோல் சுத்தி
ளிலும், சாயப் பட்டறைகளிலும் வெளியே
ஆற்றிலே கலந்து நதியும் நஞ்சாகி வரு
பரப்பளவும் குறைந்து சுற்றுச்சூழல் பாதி
வெப்பமயமாகி வருவதை விஞ்ஞானிகள்
வருகின்றனர். சமூக ஆர்வலர்களும் சுட்
னர்.

விலங்குகளின் வாழ்வுரிமையைத் துச்ச
பாமரர்கள் ஒருபக்கம் விலங்கினம் மற்று
இறைச்சிக்காகவும், தந்தம் போன்ற வி
பொருளுக்காகவும் வேட்டையாடும் கூட்ட
புயல் இடி போன்ற இயற்கைச் சீற்றங்க
காட்டை அழிக்கும் கும்பல் ஒரு பக்கம்
வேண்டும் விலங்கினம் அழிய? ஒரு தொ
பார்வையுடன் அரசு செயல்பட்டால் மட்டு
தலைமுறைக்கு சில விலங் கினங்களை
மட்டுமே பார்க்கும் அவலம் ஏற்படாது எ
நிதர்சனமான உண்மை.

**21-30 வரையுள்ள வினாக்களினுள் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை வைத்துப் பூரணப்படுத்துக.**

21.இலங்கையின் ஈரவலயப் பிரதேசம் ........................ மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழையைப் பெறுகிறது

22.பைன், ஸ்புரூஸ் என்பன ........................ காட்டு மரங்கள் ஆகும்.

23.புவி மேற்பரப்பிலிருந்து 900 கி.மீற்றர் - 1200 கி.மீற்றர் வரை ........................ மண்டலம் பரவியுள்ளது.

24.உயிர்க்கோளத்தின் தொழிற்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் உயிர்க்காரணிகளாக தாவரங்கள், பிரிகையாக்கிகள் ........................ என்பனவாகும்.

25.புவியோட்டையும் இடையோட்டையும் பிரிக்கும் எல்லை ........................ எனப்படும்

26.இலங்கை ........................ எனும் புவித்தகட்டில் அமைந்துள்ளது.

27.ஆட்டிக் பகுதியில் நிலவும் காலநிலை ........................ ஆகும்.

28.வெப்பநிலை ........................ மூலம் அளவிடப்படுகின்றது

29.சமமான நிலப்பரப்பினைக் கொண்ட உயர்நிலங்கள் ........................ எனப்படும்.

30.ஓசோன் படையில் துவாரம் ஏற்பட ........................ வாயு காரணமாகின்றது.

**31-40 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலே சரியான விடையின் கீழ் கோடிடுக.**

31.இலங்கையின் தரைத்தோற்றப் பிரிவுகளில் கரையோரச் சமவெளி எவ் உயரங்களுக்கு இடையில். அமைந்துள்து

1.30 - 300அ 2.0 - 30அ 3.0 - 300அ 4.300அ மேல்

32.உலகில் சனத்தொகை அளவு கூடிய நகரம்

1. டோக்கியோ 2. மெக்சிக்கோசிற்றி 3. மும்பாய் 4. டெல்கி

33. கண்டல் தாவரங்கள் இலங்கையின் எப்பகுதியில் பெருமளவு பரம்பிக் காணப்படுகிறது.

1.மலைநாடு 2.கரையோரப்பகுதி 3.அண்சமவெளி 4.ஆற்றங்கரை

34.இலங்கையில் 1871 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்படும் குடிசனத் தொகைமதிப்புத் தொடரின் எத்தனையாவது கணக்கெடுப்பு 2011 இல் மேற்கொள்ளப்பட்டது?

1)10 2)12 3)14 4)15

35.கோளவளத்தில் உள்ள கனியங்களாக பின்வருவனவற்றுள் எவை காணப்படுகின்றன.

1.நிக்கல், இரும்பு 2. நிக்கல், மகனீசியம்

3.சிலிக்கன், அலுமினியம் 4. சிலிக்கன், இரும்பு

36.இலங்கையில் அதிக மழைவீழ்ச்சியை பெறும் இடம்

1.மாலியபொட 2.வட்டவளை 3.நுவரெலியா 4.அப்புத்தளை

37.உலக காலநிலைப்பாகுபாட்டினை மேற்கொண்டவர்களில் ஒருவர்

1.அல்பிரட் உவெக்னர் 2.கீஸ்

3.மத்தியூஸ் 4.கெப்பன்

38.இலங்கையில் மேற்காவுகை மழைவீழ்ச்சி கிடைக்கும் காலம்

1.நவம்பர் - பெப்ரவரி 2.மார்ச் - ஏப்ரல் 3.பெப்ரவரி - ஏப்ரல் 4.ஏப்ரல் - மே

39.உலகில் அதிகளவிலான மோட்டார் வாகனங்களை கட்டிவிக்கும் நாடு

1.யப்பான் 2.சீனா 3.தென்கொரியா 4.இந்தியா

40.பூகோள நீரப்பரம்பல் பற்றிய சரியான கூற்று யாது?

1.புவியோட்டின் 97% நீரினால் மூடப்பட்டுள்ளது

2.நீர்க்கோளத்தில் உள்ள நீர் திண்மம், திரவம், வாயு என்னும் மூன்று நிலைகளிலும் இருக்கின்றது

3.கால்வாய்கள், அருவிகள், ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றில் உள்ளநீர் நிலக்கீழ் நீர் எனப்படும்

4.பிரதான சமுத்திரங்களின் பரம்பலுக்கேற்ப மிகச்சிறிய சமுத்திம் அத்திலாந்திக் ஆகும்.

இப்பத்திரிகை இன்.'போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 03.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

03-10-2012

# கல்வி ஒளி

தமிழ்நாதம்

மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 16

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - டிசெம்பர் 2012
## வரலாறு (மாதிரி வினாத்தாள்)

**ஆசிரியர்: க. ரவிக்குமார் B.A., M.A. Dip.in.Teach. NCT** **பகுதி III (தொடர்ச்சி)**

07)"வடமேல் இந்தியாவில் நிலவிய அரசியல் பலவீனம் இஸ்லாமியர்கள் தமது ஆதிக்கத்தை இந்தியாவில் நிறுவ காரணமாகியது"

1.பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவர்களை முறையே A,B,C என குறிப்பிடுக.

A - இஸ்லாமியரது ஆட்சி இந்தியாவில் நிலைபெறுவதற்கான அத்திவாரம் இட்டவர்.

B - தென் இந்தியா மீது படை எடுத்து சித்தூர், கர்நாடகா, ஆந்திரா, மதுரை போன்ற இடங்களை கைப்பற்றியவனும் மாலிக் கபூரால் விஷம் வைத்துக் கொல்லப்பட்டவனும்.

C - இபன் பதூதாவினால் "கொடையிலும் மக்களை வதைப்பதிலும் இவனுக்கு நிகர் இவனே" எனக் குறிப்பிடப்படுபவன்.

2.A - அலாவுதீன் B - கூர்கி முகமது C - கியாஸ்தீன் D - கிஸாகான்

மேலே A - D வரை குறிப்பிட்டுள்ள மன்னர்கள் எவ் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை கீழ் உள்ள அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து உமது விடைத்தாளில் A,B,C,D எனும் ஒழுங்கில் குறிப்பிடுக.

(அடிமை வம்சம் / கில்ஜி வம்சம் / துக்ளக் வம்சம் / சையது வம்சம் / லோடி வம்சம்) (04 புள்ளிகள்)

3. i.அசோகனுக்குப் பின் இந்தியாவை ஆண்ட மிகச் சிறந்த மன்னன் என கருதப்படுவர்

ii.1658 இல் தந்தையை சிறையிலடைத்து மொகாலய சாம்ராச்சியத்திற்கு மன்னனானவன்.

மேலே i, ii ஆகிய விடயங்களுடன் தொடர்புடையவர்களை முறையே உமது விடைத்தாளில் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

4. இந்து, பௌத்த மதங்கள் ஆசியாவில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி விளக்குக. (06 புள்ளிகள்)

(08)

1. A - சீனாவின் தேசியவாத கோமிங்டன் கட்சியின் நிறுவுனர்

B - விவசாயிகளே நாட்டின் வெற்றிகரமான புரட்சியாளர்கள் என கூறியவர்

C - கலாசாரப் புரட்சியின் முக்கிய ஆயுதமாக கருதப்படுபவர்

மேலே A,B,C என்பவற்றுடன் தொடர்புடையவர்களை முறையே உமது விடைத்தாளில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

2.A - 1912 - 1916 B - 1916 - 1923 C - 1923 - 1949 D - 1949 இற்கு பின்

மேற்குறித்த ஆண்டுகளுடன் தொடர்புடைய சீனப்புரட்சியின் காலகட்டங்களை முறையே உமது விடைத்தாளில் குறிப்பிடுக.

3.உலகில் மேற்கொள்ளப்பட்ட அமைதிவழிப் போராட்டங்களில் சீனாவில் இடம் பெற்ற நீண்ட நடைப்பயணமும் ஒன்றாகும். இவ்வாறு முக்கியம் பெறுவதற்கு காரணமான இப்போராட்டத்தின் வலிமைகளைக் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

4.சீனாவில் முன்னோக்கிய பொரும் பாச்சந்திட்டம் முன்னெடுக்கப்பட்டமைக்கான காரணத்தை குறிப்பிட்டு அதன் தோல்விக்கான காரணங்களையும் தருக. (06 புள்ளிகள்)

09) "ஐரோப்பாவில் கருக்கொண்டு உலகின் கடல் கடந்த பல நாடுகளையும் கண்டங்களையும் இணைத்து இடம் பெற்றதும் பெரும் மனித அழிவுகளையும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்தியதுமான போரே உலகப்போர் எனப்படுகின்றது"

1.முதலாம் உலகப்போர் காலத்தில் ஜேர்மனியின் நீர்மூழ்கித் தாக்குதல்கள் இடம் பெற்ற [illegible]லங்கள் கீழே A,B,C என குறிப்பிடப்பட்டுள்ளன. அத்தாக்குதல்களில் அழிக்கப்பட்ட கப்பல்களை முறையே குறிப்பிடுக.

A - 1915 மார்ச் 28 B - 1915 மே 07 C - 1915 மே 21 (03 புள்ளிகள்)

2.முதலாம் உலகப்போரில் நடுநிலைமை வகித்த ஐரோப்பிய நாடுகள் நான்கினைக் குறிப்பிடுக(04 புள்ளிகள்)

3.முதலாம் உலகப்போருக்குப் பின் தோல்வியுற்ற ஜேர்மனியைத் தண்டிப்பதை நோக்காகக் கொண்டு 1919 யூன் 28 இல் மேற்கொள்ளப்பட்ட வர்சேல்ஸ் உடன்படிக்கையின் நிலம் சம்பந்தமான விதியின் பிரகாரம் ஜேர்மனிக்கு ஏற்பட்ட இழப்புக்களை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

4.முதலாம் உலகப் போருக்குப் பின்னர் உலக சமாதானத்தை பேணும் நோக்கில் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்க அமைப்பின் முக்கிய உறுப்புக்கள் மூன்றையும் குறிப்பிட்டு அச்சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்களையும் தருக. (06 புள்ளிகள்)

(10)"உலகில் அளவிட முடியாத அழிவை ஏற்படுத்தி முடிந்து போன உலக யுத்தங்களுக்குப்பின் வல்லரசுகளாக எழுச்சி பெற்ற நாடுகள் தமது கொள்கைகளையும் அதிகாரங்களையும் பரப்புவதில் தீவிரம் காட்டின"

1.பின்வரும் அமைப்புகளுக்கு இணையாகத் தோன்றிய அமைப்புகளின் பெயர்களை முறையே குறிப்பிடுக.

A - நேட்டோ

B - C.I.A.

C - மார்ஷல் திட்டம்

2.முதலாளித்துவ விரிவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் இரண்டையும் சமவுடமை விரிவாக்கக் கோட்பாட்டின் அடிப்படையில் ரஷ்யா இலங்கைக்கு வழங்கிய உதவிகள் இரண்டையும் தருக?

(04 புள்ளிகள்)

3.ரஷ்யப் பொருளாதாரத்தை உயர்த்த உதவிய ஸ்டாலினின் ஐந்தாண்டுத் திட்டத்தின் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடுக? (05 புள்ளிகள்)

4.பனிப்போரின் பின் ரஷ்யாவின் வீழ்ச்சிக்கான காரணிகள் மூன்றினைக் குறிப்பிட்டு அதில் இரண்டினை சுருக்கமாக விளக்குக? (06 புள்ளிகள்)

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, டிசெம்பர் 2012**
**வரலாறு (மாதிரி வினாத்தாள்) - பகுதி - I (19.09.2012, 26.09.2012)**
**விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) 1 | 2) 3 | 3) 2 | 4) 3 | 5) 1 | 6) 1 | 7) 2 | 8) 2 |
| 9) 1 | 10) 3 | 11) 2 | 12) 3 | 13) 1 | 14) 3 | 15) 3 | 16) 3 |
| 17) 3 | 18) 1 | 19) 1 | 20) 3 | 21) 3 | 22) 2 | 23) 3 | 24) 1 |
| 25) 3 | 26) 3 | 27) 2 | 28) 2 | 29) 4 | 30) 1 | 31) 2 | 32) 4 |
| 33) 3 | 34) 3 | 35) 4 | 36) 1 | 37) 2 | 38) 1 | 39) 2 | 40) 1 |





ஆசிரியர்: குமரன்

## பகுதி - I

**இவ் வினாத்தாள் 40 வினாக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாவிற்கும் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கேற்ப எல்லா வினாக்களிற்கும் விடை எழுதுக.**

**01-10 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொன்றிலும் வெற்றிடத்திற்குச் பொருத்தமான விடையை அடைப்புக்குறியினுள்ளே உள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

01.சூரியனிலிருந்து புவி எத்தனையாம் இடத்தில் அமைந்துள்ளது.
(முதலாம், இரண்டாம், மூன்றாம்)

02.வளிமண்டலத்திலுள்ள நைதரசன் வாயுவின் அளவு ............ ஆகும்.
(75% , 78% , 80%)

03.ஓசோன் படை அமைந்து காணப்படுவது ............ ஆகும்.
(மாறன்மண்டலம், படைமண்டலம், அயன்மண்டலம்)

04.உயிர்க்கோளத்தில் உள்ள உயிருள்ள கூறுகளாக ............ காணப்படுகின்றது
(மண் வளி, நுண்ணங்கிகள் உற்பத்தியாக்கிகள், விலங்குகள் நீர்)

05.நாற்புறமும் கடலாற்சூழப்பட்ட நிலம் ............ ஆகும்.
(குடா, களப்பு, தீவு)

06.அமுக்கவிசை ஏற்படும் போது உருவாகும் பௌதிக உறுப்பு ............ ஆகும்.
(பிளவுப்பளத்தாக்கு, மடிப்பு மலை, எரிமலை)

07.பம்பாஸ் புல்நிலம் காணப்படுவது
(ஐரோப்பாவில், தென் அமெரிக்காவில், ஆபிரிக்காவில்)

08.புவி மேற்பரப்பில் உள்ள பனிக்கட்டிகளின் அளவு ............ ஆகும்.
(0.62% , 2.8%, 2.15%)

09.தென்அமெரிக்காவின் மிகப்பெரிய மலைத்தொடர் ............ ஆகும்.
(றொக்கி, அந்தீஸ், அப்பலாச்சியன்)


10.இலங்கையின் தரைத்தோற்றத்தில் 30m லிருந்து 300m வரையான பகுதியை ............ என அழைப்பர்
(கரையோர சமவெளி, அன்சமவெளி, மத்தியமலை நாடு)

**11-20 வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றினையும் அவதானமாக வாசித்து அவை சரியாயின் "ச" எனவும் பிழையாயின் "பி" ஐயும் சுற்றி வட்டமிடுக.**

11.இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1.1 ஆகும். (ச/பி)
12.உலகின் மிக நீளமான நதி ஆபிரிக்கா கண்டத்தில் அமைந்துள்ளது (ச/பி)
13.புவிநடுக்கத்தை அளக்கும் கருவி றிக்டர் ஆகும். (ச/பி)
14.இலங்கையின் அயனமண்டல மழைக்காடு சிங்கராஜவனம் ஆகும் (ச/பி)
15.கடலின் ஆழத்தில் ஏற்படும் பூகம்பத்தினால் சுனாமி அலை தோற்றம் பெறுகிறது (ச/பி)
16.புவியின் காலநிலை, வானிலை நிலைமைகளை தீர்மானிக்கும் படையமைப்பு மாறன் மண்டலம் (ச/பி)
17.இலங்கையின் வறள் வலய மாவட்டங்களாக மன்னார்,அம்பாந்தோட்டை காணப்படுகின்றது (ச/பி)
18.புவியோட்டில் சீயல் படை சிலிக்காவையும் மகனீசியத்தையும் கொண்டிருக்கிறது (ச/பி)
19.ஆறுகள் கடலை அடையும் போது அடையல்கள் படியவிடப்படுவதால் கழிமுகம் உருவாகின்றது (ச/பி)
20.இலங்கையின் முழு மொத்த நிலப்பரப்பு 65525 சதுர கிலோமீற்றர் ஆகும் (ச/பி)

(06)விளையாட்டு மைதானங்களில் சிறுவர்கள் சறுக்கி விளையாடும் பலகையைப் படம் காட்டுகிறது.

1.25Kg திணிவுடைய ஒரு சிறுவன் தரையிலிருந்து 3m உயரத்திலுள்ள மேடைக்கு 4m நீளமுடைய ஏணி வழியாக ஏறினான். அவன் செய்த வேலையை அலகுடன் தருக.



2.மேடையை அடைந்த பொழுது அவன் உயர்ந்த சக்தி மட்டத்திலுள்ளவனாகக் கருதப்படுகிறான்.

a)அவனிலுள்ள சக்தி எச்சக்தி எனப்படும்?

b) தரையிலிருந்ததிலும் பார்க்க மேடையிலுள்ள பொழுது அவனில் ஏற்பட்ட சக்தி மாற்றம் எவ்வளவு?

3)மேடையில் உள்ள சிறுவன் மேடையின் B அந்தத்தில் ஒரு மாபிளை வைத்து A யைத் தாண்டி C யை அடையும்படி உருட்டிவிட்டான். இம்மாபிளின் இயக்கத்தைக் காட்ட ஒரு வேகநேர வரைபு வரைக.

4)மாபிள் C அடைந்ததும் தானும் A யிலிருந்து C வரை சறுக்கினான். ஆனால், மாபிள் பலகையில் உருள எடுத்த நேரத்திலும் கூடிய நேரத்தைத் தான் சறுக்குவதற்கு எடுத்ததை அறிந்தான். C யை அடைந்த போது தனது பின்பக்க காற்சட்டை சூடாகவிருந்ததையும் அவதானித்தான்.

a)மாபிள் C யை வேகமாக அடைந்தததன் காரணத்தை தருக.

b)எந்தச் சக்தி காற்சட்டையில் வெப்பசக்தியாக மாறியது?

5)சிறுவன் AB பகுதியிலிருந்து நேரடியாகக் கீழ்நோக்கி 4Kg திணிவுடைய பொருளை விடுகிறான் எனின், அப்பொருள் நிலத்தை வந்தடிக்கும் வேகம் யாது? ($g=10ms^{-2}$)

**விஞ்ஞானம் (மாதிரி வினாத்தாள்) - பகுதி 1 (19.09.2012)**

**விடைகள்**


| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 2 | 31) 4 |
| 2) 3 | 12) 2 | 22) 3 | 32) 3 |
| 3) 3 | 13) 3 | 23) 2 | 33) 3 |
| 4) 2 | 14) 4 | 24) 3 | 34) $\frac{10-5}{5}$ |
| 5) 3 | 15) 3 | 25) 3 | 35) 2 |
| 6) 3 | 16) 1 | 26) 3 | 36) 1 |
| 7) 2 | 17) 3 | 27) 4 | 37) 2 |
| 8) 1 | 18) 2 | 28) 2 | 38) 4 |
| 9) 2 | 19) 1 | 29) 4 | 39) 4 |
| 10) $\frac{36\times1000}{60\times60}$ | 20) 3 | 30) 2 | 40) 3 |





**அமைப்புக் கட்டுரை வினாக்கள் (தொடர்ச்சி)**

(04) A)எளிய ஊசல் குண்டின் படம் கீழே தரப்பட்டுள்ளது.




i.அழுத்தசக்தி உயர்வாகக் காணப்படும் புள்ளி / புள்ளிகள் எது / எவை?

ii.புள்ளி A யிலிருந்து B யிற்கு குண்டு அசையும் போது நடைபெறும் சக்தி மாற்றம் யாது?


iii.இவ் அலைவிற்கான அலை வடிவம் வரைந்து குறிக்குக.

B)திரவங்களின் அடர்த்தியை அளக்கும் அமைப்பு X,Y,Z எனும் வெவ்வேறு திரவங்களில் காணப்படும் முறை படத்தில் காட்டப்பட்டுள்ளது.

i.திரவங்களின் அடர்த்தி அளக்கப் பயன்படும் அமைப்பு எது?

ii.திரவங்களின் அடர்த்தியைக் குறிப்பிடப் பயன்படும் அலகு எது?

iii.தரப்பட்ட திரவங்களை அடர்த்தியின்படி இறங்கு வரிசைப்படுத்துக.




C)தளவாடியில் ஒளித்தெறிப்பிற்கான கதிர்ப்படம் வரைக.

ii.ஒளித் தெறிப்பு விதிகளைத் தருக.

iii.தளவாடியில் தோன்றும் விம்பத்தின் இயல்புகள் 2 தருக.

iv.பின்வரும் சந்தர்ப்பங்களில் பயன்படும் ஆடி வகைகளைத் தருக.

a) வாகன பக்கவாடி
b) நுணுக்குக்காட்டி
C) சூழ் காட்டி

**பகுதி - II**

(B) உயிரியல் - கட்டுரை வினாக்கள்

(01)மனித உடலில் காணப்படும் சமிபாட்டுத் தொகுதியின் அமைப்பு அருகில் தரப்பட்டுள்ளது.


1)A, B, C, D, E, F ஆகிய பகுதிகளை பெயரிடுக.

2)E இல் எவ்வகை உணவின் சமிபாடு ஆரம்பிக்கின்றது?

3)E இல் சுரக்கப்படும் ஓமோனின் பெயர் என்ன?

4)C யினால் உணவுப் பாதையுள் விடுவிக்கப்படும் சுரப்பு எது?

5)காபோகைதிரேற்று, புரதம், இலிப்பிட்டு ஆகிய மூன்றுவகை உணவுகளையும் சமிபாடையச் செய்யும் நொதியங்களைச் சுரக்கும் இரு பகுதிகளின் பெயர்களைத் தருக.



6)புரதம் எனும் சிக்கலான உணவு அமினோஅமிலம் எனும் எளிய உணவாக மாறுவதற்கிடையில் உண்டாகும் நான்கு சேர்வைகளை ஒழுங்காகப் பின்வருமாறு குறிக்க.

புரதம் (1) (2) (3) (4) அமினோ அமிலங்கள்

7)G யிலிருந்து குருதியூடாக C யை அடையும் உணவு வகைகள் எவை?

8)இவ் உணவு வகைகள் Cயை வந்தடையும் விசேட குருதிக்கலன் எது?

9)புரதங்களின் அனுசேப விளைவுகளில் ஒன்று Cயில் பிரிக்கப்படுகிறது.


a)இவ்வாறு பிரியும் பொருள் எது?

b)C யில் இப்பொருள் மேலும் எப்பொருளாக மாற்றப்படும்?

c) C யில் நடைபெறும் இத்தொழிற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

10)வாய்க்குமிழியில் அரிசியை மென்று சிறிது நேரத்தில் இனிப்புச் சுவை உணரப்படும். இக்கூற்றை விஞ்ஞான ரீதியில் விளக்குக.

(02)உயிரிகளின் புற இயல்புகள் தொடர்பான ஆய்வொன்றின்போது ஒரு மாணவர் குழுவினர் பின்வரும் உயிரிகளை அவதானித்தனர்.




1)தரப்பட்ட உயிரிகளை இனங்கண்டு பெயரிடுக.
2)உயிரிகளின் பாகுபாட்டின் அவசியங்கள் இரண்டு தருக.
3)பின்வரும் உயிரிகளின் பாகுபாட்டுப் பிரிவுகளை குறிப்பிடுக.
i) a ii) d iii) f iv) h v) j
4)மேற்படி உயிரிகளில் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு இயல்பையும் கொண்டுள்ள ஒவ்வொரு அங்கிவீதம் தெரிவு செய்து எழுதுக.
i) தற்போசணி ii) மாறா வெப்பநிலைக்குருதி iii)ஐந்தாரைச் சமச்சீர்
iv) மிகப் பெரிய கணம் v) தனிக்கல அங்கி
5) பின்வரும் உயிரிகளின் சுவாச அங்கம்/அங்கங்கள் தருக.
i) b ii) c iii) f iv) i v) j
6)உயிரிகளின் இரு சொற்பெயரீட்டு முறையை அறிமுகம் செய்தவர் யார்.

7)இரு சொற் பெயரீட்டு முறையில் கவனிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக.

8)பின்வரும் உயிரிகளின் விஞ்ஞானப் பெயரைத் தருக.
i) யானை ii) மாமரம் iii)புள்ளிமான் iv) நெல் v) அசோகக் கொண்டை

## பகுதி - (C) இரசாயனவியல்

(03) சில மூலகங்களின் அணுவெண்கள் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. (இம்மூலகங்களுக்காக இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள குறியீடுகள் அவற்றின் நியம இரசாயனக் குறியீடுகள் அல்ல).

| மூலகம் | A | B | C | D | E | F | G | H |
|---|---|---|---|---|---|---|---|---|
| அணுஎண் | 6 | 8 | 10 | 11 | 12 | 13 | 14 | 17 |

1)இங்கு தரப்பட்டுள்ள மூலகங்களுள் ஆவர்த்தன அட்டவணையில் ஒரே கூட்டத்தைச் சேர்ந்த மூலகங்கள் யாவை?
2)ஆவர்த்தன அட்டவணையில் மூன்றாம் ஆவர்த்தனத்தையும் மூன்றாம் கூட்டத்தையும் சேர்ந்த மூலகம் எது?
3)a)இவற்றுள் எந்த மூலகம் குளிர் நீருடன் வீரியமாகத் தாக்கம் புரியும்?
b)மேற்படி தாக்கத்தைக் காட்டும் சுடுசெய்யப்பட்ட இரசாயன சமன்பாட்டை எழுதுக.
4)a) எவ்வித இரசாயனத் தாக்கங்களிலும் பங்கு பெறாத மூலகம் எது?
b)அம்மூலகம் தாக்கங்களில் பங்கு பெறாமைக்கான காரணத்தை அதன் இலத்திரன் நிலையமைப்பை வரைந்து விளக்குக.



5)B, E ஆகிய மூலகங்கள் சேர்வதன் மூலம் தோன்றும் சேர்வையில் B யினது ஒரு மூல் அணுக்களுடன் E இனது எத்தனை மூல் அணுக்கள் சேரும்?

6)a) E, F ஆகிய மூலகங்களுள் தாக்குதிறன் கூடிய மூலகம் எது?
b) நீர் மேலே குறிப்பிட்ட மூலகம் தாக்குதிறன் கூடியதாகக் காணப்படும் காரணத்தை விளக்குக?

7)எந்த மூலகத்தின் வலுவளவு இரண்டு ஆகும்?
8)D யுடன் சேரக்கூடிய மூலகத்தை தெரிவு செய்க.
9)மூலகம் A, H உருவாக்கும் சேர்வையில் காணப்படும் பிணைப்பின் குற்றுப் புள்ளடி வடிவம் வரைக?
10)சோடியம் ஆய்வுச்சாலையில் மண்ணெண்ணெயில் வைத்துப் பாதுகாக்கப்படும். விஞ்ஞான ரீதியில் விளக்குக?

(04) தரம் 11 மாணவன் ஒருவன் சடப்பொருட்களின் மூவித நிலைகளில் ஒன்றைக் கருத்தில் கொண்டு கூறிய சில இயல்புகள் கீழே தரப்பட்டுள்ளது.

- துணிக்கைகள் மிக ஐதானவை
- பரவிச் செல்லக் கூடியது

1)a)மாணவன் கருதிய சடப்பொருள் நிலை யாது?
b)அந்நிலை தவிர்ந்த ஏனைய இரு நிலைகளையும் ஒவ்வோர் உதாரணத்துடன் தருக?
c)மாணவன் கருதிய நிலையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் 2 தருக?
2)a)மூவித நிலைகளிலும் காணப்படக் கூடிய ஒரு சேர்வை நீராகும் நீர் தொடர்பான பின்வரும் விடயங்களைத் தருக.
i) உருகுநிலை ii) கொதிநிலை iii) அடர்த்தி iv) தன்வெப்பக் கொள்ளளவு.
b) நீரினின் நிலைமாற்றம் நடைபெறும் முறையை அம்புக்குறித் தொடர்பு மூலம் காட்டுக.
3)சோடியம் இருகாபனேற்று வெப்பப் பிரிகையடையும் போது சோடியங் காபனேற்று, காபனீரொட்சைட்டு, நீராவி ஆகிய விளைவுகள் உருவாகும்.
a) மேற்படி தாக்கச் சமன்பாட்டைத் தருக.
b) சோடியமிருகாபனேற்று, சோடியம் காபனேற்று என்பவற்றின் சாதாரண பெயர்களைத் தருக?
c) 1 மூல் சோடியமிருகாபனேற்றிலிருந்து பெறப்படும் காபனீரொட்சைட் மூல் அளவு யாது?
d) 1 மூல் சோடியமிருகாபனேற்றிலிருந்து பெறப்படும் சோடியங்காபனேற்றின் திணிவு யாது?
4)250$dm^3$ 0.5mol சோடியங்காபனேற்றுக் கரைசல் தயாரிக்கும் முறையின் படிமுறைகளை ஒழுங்காகத் தருக.

## (D) பௌதீகவியல்

(05)
1)a) வெப்பநிலை தவிர்ந்தவிடத்து ஒரு கம்பியின் தடையில் தாக்கம் விளைவிக்கக் கூடிய மற்றும் மூன்று காரணிகள் குறிப்பிடுக.
b)51.5 $\Omega$ தடையைக் கொண்ட கம்பியொன்றினைப் பெறுவதற்காக$1.0 \times 10^{-7}$ m2 குறுக்குவெட்டுப் பரப்புக் கொண்ட நிக்குரோம் கம்பி ஒன்றின் எவ்வளவு நீளத்தைப் பயன்படுத்தல் வேண்டும்?
(நிக்குரோமின் தடைத்திறன் $1.03 \times 10^{-6}\ \Omega$ m)

2)a) 60 $\Omega$ தடையொன்றின் இரு அந்தங்களுக்கும் இடையே 12V அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது தடையினூடு பாயும் ஓட்டத்தைக் கணிக்குக?
b)மேற்படி கணிப்பை மேற்கொள்ள நீர் பயன்படுத்திய விதியைக் குறிப்பிடுக?
c)மேற்படி விதியை வாய்ப்புப் பார்ப்பதற்கு நீர் பயன்படுத்தும் சுற்று வரிப்படத்தை வரைக?

3)a) பதார்த்தம் பெறும் வெப்பக் கணியம் தங்கியுள்ள காரணிகளிற்கான தொடர்பு யாது?
b)30 $\Omega$ தடையுடைய அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றினூடு 6 A மின்னோட்டம் 5 நிமிடம் பாய்வதன் மூலம் 4 kg திணிவுடைய நீரின் வெப்பநிலை 30$^oC$ யிலிருந்து உயர்த்தப்படுகிறது எனின், நீரின் இறுதி வெப்பநிலை யாது?



நம்மைச் சுற்றியிருக்கும் இயற்கை வளம் நிரம்பிய மரங்கள், காய்கள் பயிர்கள், வயல்வெளிகள், பூக்களென்று நம்முடைய சுற்றுப்புறம், நம்முடைய கண்களை விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டு வருகிறது. கிராமத்திலுள்ள சின்னச்சின்ன ஊர்கள், ஊருக்குள்ளே வாழும் மனிதர்கள், மனிதர்களோடு தோழமை கொண்டு துள்ளித்திரிந்த ஆடு மாடுகள், நாய்கள், பூனைகள், வீட்டுக்குள்ளே கூடுகட்டி வாழ்ந்த சிட்டுக்குருவிகள், மழைக்காலத்தில் உள்ளுக்குள்ளே தலைநீட்டிப் பார்க்கும் தவளை போன்ற எண்ணற்ற உயிரினங்கள் அனைத்துக்கும் சோறு போட்டு மகிழ்வித்த சுற்றுப்புறத்துடைய இயற்கை வளம், காலப்போக்கில் அதன்மீது அக்கறை காட்டாமையாலும், பராமரிப்பு எடுத்துக் கொள்ளாமையாலும், கவனிப்பாரற்று சீரழிந்து கொண்டு வருகிறது. வருங்காலத்தில் இந்தப் சீரழிவு ஒரு பிரம்மராட்சனைப் போல விசுவரூபமெடுத்துக் கொண்டு வருகிறது.

முன்னேற்றம் அதனுடனே பயணிக்கிற நாகரீகம் ஆகியவைகளுடைய ஆதிக்கத்தால் காடுகள் அழிந்து கொண்டு வந்தது. காடுகளிலுள்ள மரங்கள், மலைகளிலுள்ள மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டதாலும், சுற்றுப்புறத்தின் பசுமை

# பூமியைக் காப்பாற்றுவோம்

அழிந்ததாலும், பெய்யும் மழை குறைந்ததாலும், அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன. செழிப்பான மழை காடுகளுக்குள்ளேயிருக்கும் உலர்சருகுகள், மக்குகளென்று இயற்கையான உரங்களை சுமந்து கொண்டு ஆறுகளின் படுகைகளில் படியச்செய்து அவைகளுக்கு ஊட்டச்சத்தை கொடுத்து வந்தது. ஆறுகளை சுற்றியிருக்கிற வயல்வெளிகள் படுகைகளிலுள்ள ஊட்டச்சத்தை உறிஞ்சிக் கொண்டதோடு, வயல்வரப்புகளுடைய செழுமை நிறைந்த மண், எண்ணற்ற உயிரினங்களுக்கு உணவுக் களஞ்சியமாக இருந்து வந்தது. முன்னேற்றம் என்கிற பெயரில் வனமரங்கள் வெட்டப்படுவதாலும், முட்செடிகள் அறுக்கப்படுவதாலும், மூலிகைச்செடிகள் வேரோடு பிடுங்கப்படுவதாலும், வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதாலும், காட்டுநிலங்கள் அபகரிக்கப்படுவதாலும் இயற்கை தன் அழகை மட்டுமல்ல தன் உடைமையையும் சிறிது சிறிதாக இழந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டவிரோதமான செயல்களால் காடுகளுடைய பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இயற்கையின் அருமையை புரிந்து கொள்ளாமல் இந்தப் பேரழிப்பினால் மனிதன் ஈடுகட்ட முடியாத செல்வங்களை இழந்து கொண்டு வருகிறான்.

1980ஆம் ஆண்டு காடுகளுடைய பராமரிப்பு, பாதுகாப்புச் சட்டத்தை இந்திய அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்தது. காடுகளின் பரப்பளவு குன்றாமலிருப்பதற்கும், அதனுடைய வளம் சீரழிக்கப்படாமலிருப்பதற்கும், அரசாங்கம் அதற்குரிய திட்டங்களை நடைமுறைக்கு கொண்டு வந்து திறமையாக செயல்படுத்தியிருக் கிறது.

1. காடுகளில் செயற்படும் சட்டவிரோதமான செயல்களை தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கடுமையான தண்டனைகள் உடனடியாக வழங்கப்பட வேண்டும்.

2. காடுகளிலுள்ள மரங்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். காடுகளுடைய செழிப்புத்தன்மை சீரழிந்து போகாமலிருக்க ஆங்காங்கே காணப்படுகிற காலியான நிலங்களில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும்.

3. காடுகளுடைய பரப்பளவு குறையாமலிருக்க, அழிந்து போன மரங்களை அப்புறப்படுத்தி அந்த இடங்களில் இன்னொரு மரங்களை வளர்க்க வேண்டும். அவைகளுக்கு பாதுகாப்புக் கொடுத்துக் காடுகளை அடர்த்தியாக வைத்துக்கொள்ள வேண்டும்.

4. காடுகளில் தீ பற்றிக் கொள்வது இயற்கை, இந்தத் தீவிபத்து நிகழ்வைக் கட்டுக்குள் வைக்க வேண்டும்.

5. பன்முகத்தன்மையைக் கொண்ட உயிரினங்கள் அழிந்து போகாமலிருக்க, காடுகளுடைய செழிப்புத் தன்மை பாழாகாமலிருப்பதற்கும், அதனைப் பேணிக்காப்பதற்குமுரிய தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

- ஆகிய செயற்திட்டங்களை இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. இந்திய அரசு அனைத்துச் செயல் திட்டங்களையும் திறமையாகச் செயல்படுத்தியதோடு, விளம்பரங்கள், போஸ்டர்கள் மூலம் சுற்றுப்புறச் சூழலுக்கான விழிப்புணர்வின் அருமையை மக்களுக்கு தெரியப்படுத்தியிருக்கிறது. மேலும் மக்களுக்கு, இயற்கை வளத்தை மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்களை நடைமுறையில் திறமையோடு செயல்படுத்துவதற்குரிய பயிற்சிக் கூடங்களையும் அமைத்துக் கொடுத்திருக்கிறது.

1972ஆம் ஆண்டு வனவிலங்குகளுக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தை இந்திய அரசாங்கம் அமல்படுத்தி, அதனை நடைமுறைக்குக் கொண்டு வந்த பெருமையையும் பெற்றிருக்கிறது.

1. வனவிலங்குகளை வேட்டையாடும் சட்டவிரோதமான செயலுக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டுமென்றும், அவ்வாறு சட்டவிரோதமாக வனவிலங்குகளை வேட்டையாடுபவருக்கு கடுமையான தண்டனை உடனடியாக விதிக்கபட வேண்டும். அவைகளுடைய சுதந்திரம் பறிபோகாமலிருக்க தகுந்த பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

2. நோய் நொடிகள் பீடிக்கப்படாமலிருப்பதற்கு வனவிலங்குகளுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு நோய் பீடிக்கப்பட்ட வனவி லங்குகளுக்கு உரிய நேரத்தில் மருத்துவ சிகிச்சை வழங்க வேண்டும்.

3. அழிவின் விளிம்பிலிருக்கும் வனவிலங்கினங்களுக்கு அதிகமான அக்கறையும், கவனமும் கொடுத்து பாதுகாக்கப்பட வேண்டும்.

4. நோயினால் பாதிக்கப்பட்ட வனவிலங்குகளை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுவதற்கு வேண்டிய ஊர்திகளை வனத்துறையினருக்கு வழங்கப்பட வேண்டும்

ஆகிய செயல்திட்டங்களை இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. மேலும் புலிகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வருவதால் அவைகளுடைய எண்ணிக்கையை பெருக்க வேண்டுமென்பதற்காக இந்திய அரசாங்கம் பல அருமையான செயல்திட்டங்களை வடிவமைத்ததோடு அவைகளை நடைமுறையிலும் சிறப்பாக செயல்படுத்திக் கொண்டு வருகிறது. புதுமை, நவீனத்துவம், முன்னேற்றம், மாற்றம், வல்லரசாகுதல், உலகமயமாக்குதல் ஆகிய முயற்சிகள் புவியின் இயற்கை வளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நசித்துக் கொண்டு வருகிறது. இத்தகைய முயற்சிகள் இயற்கைக்கு எத்தகைய பாதிப்பைக் கொடுத்திருக்கும் என்பதை அதனுடைய சீற்றத்தின் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம். இந்த முயற்சிகளை விட்டுக் கொடுக்காமல் கைப்பற்றிக் கொண்டிருந்தால், மனிதன் எண்ணற்ற உயிரிழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களிலிருந்து வெளியேறுகிற கரியமில வாயு பூமியின் மேல்மட்டத்தில் பரவிக் கொண்டு வருவதாலும், புவியினுடைய வெப்பத்தை அதிகரித்து, மேல்மட்டத்திலுள்ள காற்று மாசுபடுத்தப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்துடைய செழிப்புத்தன்மையை சீரழிந்திருக்கிறது, மேலும் கடலோரப்பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கிறது. பெருகிவரும் மக்கள் தொகையால் உருவாகியுள்ள சத்தங்கள் புவியை அதிர வைத்திருக்கிறது.

இனி வருங்காலத்தில் நதிகளும் மற்றும் ஆறுகளும் வற்றிப் போவதற்கு அதிகமான வாய்ப்புள்ளதால் உணவுப் பொருட்கள் கிடைக்காமல், குடிநீர் கிடைக்காமல், பட்டினி, பஞ்சம் போன்ற கொடிய நோய்கள் பீடிக்கப்பட்டு அதிகமான பேரிழப்புகளைச் சந்திக்க நேரிடலாம். தொழிற்சாலைகளுடைய முன்னேற்றம் நதிகளை மாசுபடுத்தியிருக்கிறது. காற்றை மாசுபடுத்தியிருக்கிறது, நம்மை சுற்றியுள்ள சுற்றுப்புறத்தை மாசுபடுத்தியிருக்கிறது. சுற்றுப்புறத்தைப் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அரசு பல வழிகளைத் திட்டமிட்டு செயல்படுத்தியிருக்கிறது. அவை,

1. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுப் பொருட்களால் விளையக்கூடிய அபாயத்தின் தீவிரத்தை ஆராய்வதற்கு பல ஆய்வுக்கூடங்களை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

2. தொழிற்சாலைகளுடைய கழிவுகள் அதிகபட்சமான அபாயத்தை விளைவிக்கக் கூடியதாகயிருந்தால் அவைகளுடைய செயல்பாடு வேகத்தை குறைப்பதற்கான வழிகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

3. மாசுபடிந்த நதிகளை சுத்தமாக்குவதற்கும், மாசுபடிந்த காற்றைச் சுத்தமாக்குவதற்கும் தகுந்த வழிமுறைகளை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறது.

4. புவியிலுள்ள சத்தங்களை குறைப்பதற்கான விதிமுறைகளை, போஸ்டர்கள், விளம்பரங்கள் மூலம் மக்களுக்கு புரியும்படி எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

5. கடலோரப்பகுதிகளின் செழிப்புத்தன்மையை மேம்படுத்துவதற்காக பல பாதுகாப்பு திட்டங்களை வகுத்துக் கொடுத்திருக்கிறது.

இயற்கையோடு தோழமை கொள்வோம், இயற்கையை அரவணைத்து கொண்டு செயல்படுவோம், இயற்கையின் தோள்களில் தலைசாய்த்து இளைப்பாறுவோம், இதனைப் புரிந்து கொண்டு நடந்தால் நாளைய தலைமுறைக்கு ஒரு அழகிய, அருமையான புவியைக் கொடுக்க முடியும்.

**வாருங்கள் சுற்றுப்புறத்தைப் பாதுகாப்போம்! இயற்கையை நேசிப்போம்!! இந்தப் பூமியைக் காப்பாற்றுவோம்!!!**



# இலங்கை - இந்திய நல்லுறவு தொடரும்

## - இந்திய தூதுவர் அசோக் கே காந்தா

இலங்கையுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பு நடவடிக்கைகளும், நல்லுறவும் தொடரும் என்று, இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தா தெரிவித்தார். கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், இலங்கையில் மேற்கொள்ளப்படும் இந்திய உதவித்திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார், இலங்கையுடனான இந்தியாவின் உறவு வரலாறு, கலாசார ரீதியாக வலுப்பெற்று வந்துள்ளது. இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர்வாழ்வு, மீள்குடியமர்வு, கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவது போன்றவற்றில் இந்திய அரசு கவனம் செலுத்தி வருகிறது.

வீட்டு வசதித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்தியா நடவடிக்கை எடுத்தது. தற்போது இரண்டாவது கட்டமாக 43 ஆயிரம் பேருக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க இந்தியா நிதியுதவி வழங்குகிறது. இந்த நிதி பயனாளிகளுக்கு நேரடியாகச் செல்லும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த நிதியை அவர்கள் சரியாகப் பயன்படுத்துகிறார்களா என்பதைக் கண்டறிய தனி செயல்திட்டம் வடிவமைக்கப்பட்டு, கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. என்றும் இந்திய உயர் ஸ்தானிகர் தெரிவித்தார்.

ஆவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்

இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொடுப்பது மட்டுமின்றி, அங்குள்ள மக்களின் பொருளாதார உயர்வுக்கும் இந்தியா நடவடிக்கை எடுத்து வருகிறது.

இலங்கை விமானப்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பலாலி விமானத் தளத்தை குடியியல் விமான நிலையமாக மாற்ற இந்தியா தயாராக உள்ளது.

ஆனால், அதற்கு இலங்கை அரசு தான் விருப்பம் தெரிவிக்க வேண்டும்.

தூத்துக்குடி-கொழும்பு இடையிலான பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்பட்டு நிறுத்தப்பட்டது. சரியான திட்டமிடல் இன்றி தொடங்கப்பட்டதே இதற்கு காரணம். 1,100 பயணிகள் செல்லும் வகையில் சொகுசு கப்பல் சேவை அறிமுகமானது.

அதற்குப் பொது மக்களிடையே வரவேற்பு இல்லை. அதனால் சிறிய வடிவில் 400 பயணிகள் செல்லும் வகையில் கப்பல் சேவை இருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என மத்திய அரசுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. அது குறித்து புதிய சேவையாளர்களை ஈர்ப்பதற்காகச் சில நிறுவனங்களுடன் மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை பேச்சு நடத்தி வருகிறது.

கொழும்பில் இருந்து தலைமன்னார்வரை தொடருந்து போக்குவரத்து சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 2013ஆம் ஆண்டு டிசம்பரில் நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிறகு இராமேஸ்வரத்தையும் தலைமன்னாரையும் கப்பல் சேவை மூலம் இணைத்து இரு நாடுகளுக்கு இடையே வலுவான உறவுப்பாலத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு வலுவுடன் உள்ளது.

தமிழகத்தில் சில வாரங்களுக்கு முன்பு இலங்கைச் சுற்றுலாப் பயணிகளுக்கு எதிராக சில விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்றமை துரதிருஸ்டவசமானது. இரு நாடுகளிடையிலான உறவுகளை உள்விவகாரங்களை மட்டும் வைத்து ஒப்பிடக் கூடாது.

இந்த விவகாரத்தில் தெளிவான விரிவான முறையில் இந்தியா பார்க்கிறது. அதனால், வரும் காலங்களிலும் இலங்கையுடனான பாதுகாப்பு நல்லுறவு தொடரும்" என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# நேரடி ஒலிபரப்புத் துறையில் தடம்பதித்த முன்னாள் தமிழ் சேவைப் பணிப்பணிப்பாளர் உருத்திராபதி



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையின் முன்னாள் பணிப்பாளர் தம்பையா உருத்திராபதியவர்களின் இழப்பு பேரிழப்பாகும். நீண்ட காலமாக வானொலி துறையில் தன்னை அர்ப்பணித்து பணியாற்றியவர், துறை சார்ந்த கலைஞர்களுடன் மிக்க ஈடுபாட்டுடன் உழைத்தவர், தென்மராட்சி மட்டுவிலை பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது இளம் பராயக் கல்வியை கல்வயல் சைவப் பிரகாச வித்தியா சாலையிலும் றிபேக் கல்லூரியிலும், உயர்கல்வியை யாழ் மத்திய கல்லூரியிலும் தொடர்ந்தவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் எழுது வினையராக சேர்ந்தவர், காலப்போக்கில் தமிழ் சேவைப் பணிப்பாளராக உயர்ந்தார், வாழ்நாட்களின் பிற்பகுதியை கொழும்பில் கழித்து வந்தார்.

தமிழ்ச் சேவையின் பணிப்பாளராக இருக்கும் காலத்திலும் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று ஒலிபரப்புச் சேவையை திறன்பட வழங்கிவந்த பெருமை இவரைச் சாரும்.

ஆலய ஒலிபரப்புக்களை முன்நின்று நடாத்திவரும் இயல்புடையவர் குறிப்பாக கடந்த பல சகாப்தங்களாக யாழ்ப்பாணத்தில் யாழ் எப்.எம் அலைவரிசையூடாக ஆலயங்களில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வுகள், மகோற்சவ நிகழ்வுகளை முன்னின்று நேரடி அஞ்சல் நிறைவேற்றி மக்களின் இதயத்தில் இடம் பிடித்த ஒருவராக திகழ்ந்தவர் உருத்திராபதி.

இவற்றைவிட போர் அனர்த்த காலங்களிலும் பிரவேகிக்க முடியாத பகுதிகளிலுள்ள ஆலயங்களில் இடம்பெற்ற உற்சவங்களை யாழ் எப்.எம். அலைவரிசையூடாக நேரடி அஞ்சல் செய்து அன்பர்கள் ஆலய அறங்காவலர்களின் நன்மதிப்பினை பெற்ற ஒருவராக விளங்கினார்.

இறந்த வர்ணணையாளர்களை இணைத்து பிரசித்தி பெற்ற ஆலயங்களில் நடைபெற்ற உற்சவ நிகழ்வுகளை வர்ணணை செய்து வர்ணனையாளர்களுக்கு ஒரு இடத்தினை வழங்கிய பெருமை உருத்திராபதிக்கு உண்டு.

பன்முகப்பட்ட பணிகளில் இவர் இணைந்து கொண்டாலும் அவரது வாழ்நாட்களில் ஆலயம் சார்ந்த ஆன்மீகப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்தார்.

- மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன்

# தமிழர் ஆசிரியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடல்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட மாகாணத்திலுள்ள மாகாணச் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள், வலயச் செயலாளர்கள், கோட்டச் செயலாளர்கள் ஆகியோருடனான அவசர கலந்துரையாடல் நாளை மறுதினம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு சங்கத்தின் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது. இதில் தாய்ச்சங்க பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# திருமணப் பேச்சில் சர்ச்சை மருதங்கேணியில் தாக்குதல்

(வல்வெட்டித்துறை)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் திருமணப் பேச்சு தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாக ஏற்பட்ட தகராறில் சாய்பு ஹமீத் (வயது - 54) என்ற முஸ்லிம் குடும்பஸ்தர் தாக்கப்பட்டு மந்திகை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சாய்பு ஹமீத் என்பவரின் விதவைத் தங்கையைத் திருமணம் செய்து தருமாறு அவருடைய மனைவியின் தம்பி கேட்டதாகவும் அதற்கு மறுப்புத் தெரிவித்த காரணத்தால் இக் கைகலப்பு இடம்பெற்றதாகவும் தெரிய வருகின்றது.

# வாடிக்கையாளர் திருப்தியின்மை மன்னிப்புக் கோரியது அப்பிள்

ஸ்மார்ட்போன் உலகில் மிகவும் புகழ்பெற்று விளங்கும் அப்பிள் நிறுவனம், தனது வாடிக்கையாளர்களை விரக்திக்குள்ளாக்கியதற்காக அந்நிறுவனத்தின் முதன்மை செயற்பாட்டு அதிகாரிடிம் குக் மன்னிப்பு கோரியுள்ளார்.

அப்பிள் நிறுவனம் தனது ஐபோன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு ஏகப்பட்ட வசதிகளை வழங்கி வருகிறது. இதில் அனைவரும் உபயோகப்படுத்தும் கூகுள் மேப்பிற்குப் பதிலாக ஐஓஎஸ் எனும் மென்பொருளை வழங்கியது. இதன் மூலம், உலகத்தில் உள்ள இடங்களை நாம் எளிதில் அடையாளம் கண்டு கொள்ளலாம். இந்நிலையில், இந்தப் புதிய வசதி வாடிக்கையாளர்களிடம் எதிர்பாரத்த அளவு வெற்றிபெறவில்லை.

அப்பிளின் மேப் வசதி வாடிக்கையாளர்களுக்கு அவர்கள் விரும்பிய தகவல்களை வழங்காமல், தவறாக வழங்குவதாக வாடிக்கையாளர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர். இதில் பல்வேறு தகவல்கள் இல்லாமலும், இருக்கின்ற தகவல் தவறாகவும் பதிவு செய்யப்பட்டிருந்ததால், வாடிக்கையாளர்கள் மிகுந்த விரக்திக்குள்ளாகினர். இதனைத் தொடர்ந்தே அப்பிள் நிறுவன அதிகாரி மன்னிப்புக் கேட்டுள்ளார்.

விரைவில் வாடிக்கையாளர்கள் விரும்பும் வகையில் துல்லியமான மேப்பை வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஆப்பிள் மேற்கொள்ளும் எனவும் அவர் உறுதியளித்தார்.அதுவரை வாடிக்கையாளர்கள் கூகுள், நோக்கியா போன்ற நிறுவனங்களின் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# யூரோ வலயத்தில் வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள யூரோ வலய நாடுகளில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 18.2 வீதமாக அதிகரித்துள்ளது. கடந்த ஜூலையில் 11.4 வீதமாக இருந்த வேலையற்றோர் எண்ணிக்கை ஆகஸ்ட்டில் மேலும் அதிகரித்துள்ளது.

இதில் அதிகபட்சமாக ஸ்பெயினில் 25.1 வீதமானோர் வேலையின்றி இருப்பதோடு மிகக் குறைவாக அவுஸ்திரேலியாவில் 4.5 வீதத்தினர் வேலையின்றி உள்ளனர். ஜெர்மனியில் 5.5 வீதத்தினர் வேலையின்றி உள்ளனர்.

யூரோ வலயத்தில் வேலையில்லாத இளைஞர்களின் எண்ணிக்கை உயர்வாகவே உள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தின் தரவு நிறுவனத்தின் தகவலின்படி கடந்த ஆகஸ்ட்டில் யூரோ வலயத்தில் 25 வயதுக்கு கீழான 22.8 வீதத்தினர் வேலையின்றி உள்ளனர். இதில் அதிகபட்சமாக ஸ்பெயினில் 52.9 வீதமான இளைஞர்கள் வேலையின்றி உள்ள தாக்வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜோப் பாங் யாழ். கிளை இன்று திறப்பு விழா

நேஷன் ஜொப் பாங் வங்கியின் யாழ். கிளை இன்று காலை 10.30 மணியளவில் பலாலி வீதி இலுப்பையடி சந்தியிலுள்ள 72ஆம் இலக்க கட்டிடத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. இந் நிகழ்வில் விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. மாவை சேனாதிராஜா மற்றும் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்வார்கள். சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண மத்திய வங்கியின் முகாமையாளர் திரு. பி. சிவதீபன், யாழ். பல்கலைக்கழக விவசாயத்துறைப் பீடாதிபதி திரு. ஜி. மிகுந்தன், யாழ் பல்கலைக்கழக கல்விசார் ஒருங்கிணைப்பாளர் கே. சிவராஜா, ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி திருமதி. சரோஜினி இளங்கோவன் சேம்பர் ஒப் கொமர்ஸ் இன்டர்ஸ்ரித் தலைவர் திரு. கே. பூர்ணச்சந்திரன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொள்வார்கள்.

# நாகர் கோவில் நாக தம்பிரான் ஆலய தீர்த்தோற்சவம் இன்று

இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நாகேஸ்வரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் விசேட அபிடேக ஆராதனைகளும் நடைபெற்று மாலை 2.00 மணியளவில் வசந்த மண்டப பூசை இடம்பெற்று சுவாமி உள்வீதி உலா வருகின்ற திருக்காட்சி இடம்பெறும்.

இரவு 8.00 மணிமுதல் 11.00 மணிவரை ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர தவில் கலைஞர்களின் விசேட மங்கள வாத்திய நிகழ்வும் 11.00 மணி தொடக்கம் அதிகாலை 1.00 மணி "தாப்ஷரயணி கல்யாணம்" எனும் விடயத்தில் வில்லிசை நிகழ்வும் 1.00 மணிமுதல் 3.30 மணிவரை "குற்றவாளிக் கூண்டில் இன்றைய சினிமாப் பாடல்கள்" வழக்காடு மன்ற நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து அதிகாலை 3.30 மணியளவில் வசந்தமண்டப பூசை இடம்பெற்று நாகேஸ்வரப் பெருமானும் பரிவார மூர்த்திகளும் விசேட மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பெற்ற பூந்தண்டிகையில் சமுத்திரக் கரையை நோக்கி எழுந்தருளி தீர்த்தோற்சவ நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

# ஈழத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நிலை



எண்பதுகளின் ஆரம்பத்தில் ஈழத் தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நிலை, அவர்களின் பல்வேறு பிரச்சினைகள், பெண்விடுதலை, பெண்நிலைவாதம் முதலான அம்சங்கள் கூர்மையாக முனைப்புப் பெறத் தொடங்கின. இதனை ஈழத்துப் பெண்களின் கலை இலக்கிய முயற்சிகளினூடே நாம் அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

அன்று தொடக்கம் இன்றுவரை பெண்களின் பங்களிப்புக்கள், ஈழத்து கலை இலக்கியத் துறைகளில் பல பரிணாமங்களைப் பெற்று வளர்ந்துள்ளன எனலாம். இப் பெண்களில் பலர் கவிதையினைத் தமக்கான வெளிப்பாட்டு ஊடகமாகக் கொண்டுள்ளமை கவனிக்கத்தக்கது. ஈழத்துப் பெண் கவிஞர்களில் சொல்லாத சேதிகளைத் தந்த செல்வி, சிவரமணி, ஊர்வசி, ஒளவை, சங்கரி, சன்மார்க்கா, மைத்ரேயி, கொற்றவை, கண்ணகி, ஆழியாள், ஆகர்ியா, கலா, தில்லை, மலரா, பாரதி, கஸ்தூரி, வானதி, கற்பகம் யசோதரா, ரேகுப்தி நிவேதிதா, வாணி சைமன், நாகபூ'ணி கருப்பையா, ஜெயந்தி ஜெய்சங்கர், ஜெ. மதிவதனி, ராணி ஸ்ரீதரன், நெலோமி, ஈழவாணி, நவஜோதி ஜோகரட்ணம் ஆகியோரும், முஸ்லிம் பெண் கவிஞர்களில் சுல்பிகா, மரீனா இல்யாஸ், நிலாவெளி 'ர்மிளா றஹீம், பெண்ணியா, மசூறா ஏ. மஜீத், அனார், பஹீமா ஜஹான், லறீனா ஏ. ஹக், லுணுகலை றஸீனா புஹார், கலைமகள் ஹிதாயா, சித்தி றபீக்கா, ஃபாயிஸா அலி, ஜெஸீமா ஹமீட், நூருல் ஐன், பாலையூற்று அ்ரஃபா நூர்தீன், ரிஸ்கா ரிஸ்வி, புத்தளம் ஜமீலா, சில்மியா ஹாதி, லா யூசுஃப் அலி, 'ாமிலா 'ரீஃப், கெகிறாவை சுலைஹா, 'பானா சனூன், ரிம்ஸா, எம்.எப்.எப். பாரிஹா போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள் எனலாம்.

பெண்களின் கலை இலக்கியப் பிரவேசமானது பல வகையிலும் தமிழ்க் கலை இலக்கியப் பரப்புக்குப் பன்முகத்தன்மையை வழங்கிற்று என்றால் அது மிகையன்று. பொதுவாகப் பெண்கள், அவர்கள் சார்ந்த விடயங்கள் எனும் போது சீதனப் பிரச்சினை, கல்வியில் பின்னடைவு முதலானவையே பெரிதும் மையப்படுத்தப்பட்ட நிலைமைக்கு அப்பால் பெண்களின் பரந்துபட்ட பிரச்சினைகள் மிக ஆழமான விமர்சனத்துக்கும் ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்ட நிலைமை மெல்ல மெல்ல உருவாகலாயிற்று. அந்த வகையில், பெண்களின் சமூகநிலைமை, அவர்களின் இருப்பு, ஆண்-பெண் அசமத்துவ உறவின் பல்வேறு பரிணாமங்கள், பெண்களுக்கெதிரான வன்முறைகள், ஆணாதிக்க ஒடுக்குமுறைகள், பெண்களின் அகவய உணர்வுவெளிப்பாடுகள் எனப் பல்வேறு தளங்களிலும் பெண்கள் தமது கவனத்தைக் குவிக்கத் தொடங்கினர். அவற்றைத் தமது கலை இலக்கியப் படைப்புக்களின் வழியே வெளிக் கொணரலாயினர். அவற்றைக் கேள்விக்குட்படுத்தினர், தமது எதிர்ப்பையும் மறுப்பையும் வெளிக்காட்டினர். தமது பிரச்சினைகளுக்காக மட்டுமின்றி சமூக, தேசிய, உலகளாவிய பிரச்சினைகள் தொடர்பான தமது விமர்சனங்களை முன்வைத்ததோடு, அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிரான தமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தனர். சமுதாய மறுசீரமைப்பில் தமது காத்திரமான பங்களிப்பு குறித்த ஆழமான தமது புரிதலையும் செயற்திறனையும் பதிவுசெய்தனர். காலங்காலமாக நான்கு சுவர்களுக்குள் முடக்கப்பட்டிருந்த அவர்களின் ஆற்றலும் உணர்வுகளும் அகன்றதொரு தளத்தில் தமக்கான சிறகுகளைத் தாமே கட்டமைத்துக்கொள்ளும் முயற்சிகளில் தன்முனைப்புப் பெற்றன. அந்த வகையில், ஈழத்துப் பெண் கவிஞர்கள் தமது படைப்புக்களில் தம்மையும், தாம் சார்ந்த அனைத்தையும் எவ்வாறு வெளிப்படுத்துகின்றனர் என்பதை காய்தல் உவத்தல் இன்றி ஆராய்வதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்களும் காதலும்**

காதல் என்ற மெல்லுணர்வு மனித உயிரி என்ற வகையில் பெண்ணுக்கும் உரியதுதான் என்றாலும் அதனைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவதில் "பெண்" காலங்காலமாகப் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்தித்தே வந்துள்ளாள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் காதல் கவிதைகளைப் பொறுத்தவரையில், அவை பெரும்பாலும் ஆண்களால் பாடப்படுபவை, ஆண்கள் தம்மைப் பெண்களாகப் பாவனை செய்து பாடியவை என்ற இரு போக்குகளைப் பிரதிபலிக்கின்றன. தமது அகவயப்பட்ட காதலுணர்வைச் சுதந்திரமாக வெளிப்படுத்துவது பெண்களின் இயல்புக்கு மாற்றமானது என்ற கருத்துநிலையே அக்காலத்தில் மேலோங்கி இருந்தது. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்களுக்குரியன என்பன போன்ற கருத்தியல்கள் சமூகத்தில் வே'ரூன்றியிருந்தன. அந்த வகையில், ஆங்காங்கே பெண்களின் காதல் பற்றிய ஒரு சில வெளிப்பாடுகள் இருப்பினும் அவற்றுக்குக்கூட வெவ்வேறு முலாம்களும் முகமூடிகளும் போடப்படும் நிலையே வழக்கில் இருந்தது எனலாம் (உதாரணம்: "ஒளவைப்பாட்டி" என்ற விம்பம்). அல்லது அவை முதன்மைப்படுத்தப்படாமல் மறைக்கப்பட்டன அல்லது ஓரங்கட்டப்பட்டன. சங்க காலப் புலவர்களில் அகநானூறு, குறுந்தொகை ஆகிய தொகைநூல்களில் சுமார் 26 காதல் பாடல்களைப் பாடியுள்ள ஒளவையார், நன்னாகையார், வெள்ளிவீதியார், பல்லவர் காலத்தில் நாச்சியார் திருமொழி, திருப்பாவை போன்றவற்றைத் தந்த ஆண்டாள் போன்றோர் காதல் உணர்வை வெளிப்படுத்திப் பாடிய தமிழ்ப் பெண்களில் முக்கியமானவர்கள்.

எனின், காலப்போக்கில் நவீன பெண்கள் தமது காதலுணர்வை, அதன் பல்வேறுபட்ட அனுபவங்களைச் சுதந்திரமாகத் தமது படைப்புக்களில் வெளிக்கொணரத் தொடங்கினர். இத்தகைய காதல் கவிதைகளைப் பொறுத்தவரையில் அவை ஆண்களின் காதல் கவிதைகளில் இருந்து பெரிதும் வேறுபடுகின்றன எனலாம். பெண்மீதான ஆணின் காதல் உணர்வு வெளிப்பாட்டிலிருந்து பெரிதும் வித்தியாசப்பட்டு பெண்ணின் காதல் உணர்வு தனித்தன்மையோடு வெளிப்படுத்தப்படுகின்றது.

பெண்களின் சுய இருப்பு, போலித்தன்மை அற்ற மெய்யுணர்வு, சுயாதீனம், ஏற்றத்தாழ்வற்ற சமத்துவமான காதல் முதலான தனியடையாளங்களைப் பிரதிபலிப்பனவாய் இக்காதல் கவிதைகள் அமைந்துள்ளன. பிரிவுத்துயரை வெளிப்படுத்தும் கவிதைகளில்கூட பெண்ணின் தவிப்பும் இரங்கலுணர்வும் மிக நுணுக்கமாக வெளிப்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. உதாரணத்துக்கு சில கவிதைப் பகுதிகளை நோக்குவோம்.

அழிந்தும் அழியாத காதலுடன்
அவளின் ஆன்மா
கிழித்தெறிந்த கந்தலாடைகள் போல
காற்றில் சடசடத்து
சிரிப்பொலிகளின் பின்னால்
மெதுமெதுவாய் ஊர்கிறது"

("காற்றில் ஈரலிக்கும் காதல்" - இது நதியின் நாள்) என்னும் பெண்ணியாவின் வரிகளிலும்,

ஆழிப் பிரளயத்தில்
அல்லலுறும் சிறுதுரும்பாய்...
பெருமழைப் போதிலொரு
பொந்திழந்த சிற்றெறும்பாய்...
வலியாய்... கண்ணீராய்...
வாழ்வின் பெருந்துயராய்...
எல்லாமாய் அந்தரத்தில்
நான் கிடந்து தவிக்கின்றேன்.
எனக்கே அந்நியமாய்...
எனக்கே நான் புதிரானேன்!"

("தவித்துழல்தல்") என்ற லறீனாவின் வரிகளிலும்,

காற்றென்னைக் கடந்துபோகையிலும்
நிழலென்னைத் தொடர்ந்து வருகையிலும்
அதன் காலடியோசை
உன்னுடையதோவென
திடுக்கிட்டுத் திரும்புகிறேன்"

என்ற ஜெஸீமாவின் வரிகளிலும் மன உறவின் நெருக்கம், தூய அன்புக்கான மனவேட்கை, பிரிவினால் விளைந்த தவிப்பு, ஏக்கம் என்பன முதன்மைப்படுத்தப்படுகின்றனவே தவிர உடல்வேட்கை சார்ந்த உணர்வுநிலைப்பாடு முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பெண்ணுக்காக...

## பெண்மை

பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா!
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா!
தண்மை இன்பம்நற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பெயரும் சதியென்ற நாமமும்
அன்பு வாழ்கென் றமைதியில் ஆடுவோம்.
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பம் தீர்வது பெண்மையி னாலடா!
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்
வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலடா!
மானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்
கலிய ழிப்பது பெண்க ளறமடா!
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்
பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை!
கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காத லின்பத்தைக் காத்திடு வோமடா
சக்தி யென்ற மதுவையுண் போமடா!
தாளங் கொட்டித் திசைகள் அதிரவே, ஓத்தி யல்வதொர்
பாட்டும் குழல்கழும் ஊர்வி யக்கக் களித்துநின் றாடுவோம்
உயிரைக் காக்கும்,உயரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிராய் இன்ப மாகிடும்
உயிரு னும்இந்தப் பெண்மை இனிதடா!
ஊது கொம்புகள் ஆடு களிகொண்டே
போற்றி தாய் என்று தோழ் கொட்டி யாடுவீர்
புகழ்ச்சி கூறுவீர் காதற் கிளிகட்கே
நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணொருத்தி பணியிலே
"போற்றி தாய் என்று தாளங்கள் கொட்டடா!
"போற்றி தாய்"என்று பொற்குழ லூதடா!
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே
அன்ன மூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தம் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும்பொற் கைகளைப் பாடுவோம்



## பெண்கள் விடுதலைக் கும்பி

பார்வையிட்டோர் : ஏற்றப்படுகிறது..
பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேயொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வம்நற் காப்பாமே
கும்மியடி!தமிழ் நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மி)
?) ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)
மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடங் காட்ட வந்தார்,அதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி! (கும்மி)
நல்ல விலை கொண்டு நாயை விற்பார்,அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத் தார்பழி கூட்டி விட்டார். (கும்மி)
கற்பு நிலையென்று சொல்ல வந்தார்,இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)
பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை கணென்று கும்மியடி! (கும்மி)
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடு வோம். (கும்மி)
காத லொருவனைக் கைப்பிடித்தே,அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து,
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி! (கும்மி)




பிறகு சிறிதுநேரம் கழிந்து "இங்கேயும் வந்துபோயிருக்கிறான்" என்றும் சொல்லும். தெளிவாகவே வீசுகிறது அதன் வாடை?" என்றும் சொல்லும். ஸ்நோபால் என்கிற பெயரைக் கேட்டவுடனேயே நாய்கள் எல்லாம் இரத்தம் உறையும் படியாக உறுமும். பற்கள் தெரிய வாயைப் பிளக்கும், குரைக்கும்.

மற்ற விலங்குகளெல்லாம் அளவுகடந்த பீதியடைந்தன.

ஸ்நோபால் என்கின்ற, கண்ணுக்குத் தெரியாத ஒரு பிசாசு தங்களையெல்லாம் பிடித்து ஆட்டிவைக்கிறது என்கிற அசைக்க முடியாத எண்ணம் அவற்றிற்கு ஏற்பட்டுவிட்டது. காற்றிலேயே கலந்து நின்றது ஸ்நோபால் என்கிற தீய உருவம். மிருகங்களுக்கு எத்தனையோ தீமைகளை விளைவிக்கக் காத்திருந்தது அது! இந்த நிலையில், மாலையில் ஸ்க்வீலர் பன்றி விலங்குகளை அழைத்து ஒரு கூட்டம் போட்டது.

முகத்திலே ஒரு பயத் தோற்றத்துடன், முக்கியமான விஷயம் ஒன்று சொல்ல இருக்கிறது என்று மிருகங்களுக்கு அறிவித்தது. தோழர்களே! என்று கத்திற்று ஸ்க்வீலர். மேலும் கீழும் பக்கத்திலும் குதித்துக் குதித்து நின்று வாலை ஆட்டிக் கொண்டே, மிகவும் பயங்கரமான விஷயம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது.

ஸ்நோபால் என்கிற துரோகியை பிஸ்ச்பீல்ட் முதலாளி ஃப்ரடெரிக் விலை கொடுத்து வாங்கிவிட்டான்.

அவன் உதவியுடன் நம்மைத் தாக்கி, நம் பண்ணையைப் பிடுங்க ஸ்நோபால் சதி செய்து கொண்டிருக்கிறது, ஃப்ரடெரிக் நம் மீது படை யெடுக்கும் போது அவனுக்கு வழிகாட்டவும் யுக்திகள் சொல்லித் தரவும் ஸ்நோபால் சம்மதித்துவிட்டது. ஆனால் அதையும்விட மோசமான செய்தி ஒன்றும் இப்போது நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாக இருக்கிறது. ஸ்நோபாலின் துரோகம் அதனுடைய பேராசையாலும், கர்வத்தாலும் உண்டாயிற்று என்று நாம் இதுகாறும் எண்ணியிருந்தோம். அதன் துரோகத்துக்கு வேறு காரணங்கள் இல்லை என்று எண்ணினோம். அப்படி நாம் நினைத்தது தவறு தோழர்களே! அதன் துரோகத்துக்கு முக்கிய காரணம் என்ன தெரியுமா? ஆரம்ப முதலே ஸ்நோபால் ரகசியமாக ஜோன்சின் கட்சியைத்தான் ஆதரித்து வந்திருக்கிறது.

எப்போதுமே அது ஜோன்ஸின் இரகசிய ஒற்றனாகவும் பிரதிநிதியா கவுந்தான் இருந்து வந்திருக்கிறது. அது விட்டுச் சென்ற இரகசியக் கடிதங்கள் மூலம் இதெல்லாம் இப்போது தெரிய வந்துவிட்டது. இப்போதுதான் அந்தக் கடிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த கடிதங்கள் ஸ்நோபால் நடத்தையில் பல விஷயங்களை நமக்குத் தெளிவாக்குகின்றது என்றுதான் சொல்ல வேண்டும். நாமே கண்கொண்டு பார்க்கவில்லையா? **(நாளை)**

---

# சிறுவர் அமுதம்

## விடுகதைகள்




1.அத்திமரத்தடியில் கல்லுக்கும், முள்ளுக்கும் வேலி அமைக்கிறான் ஒருவன். அவன் யார்?

2.ஐந்து அடுக்கு, நான்கு இடுக்கு. அது என்ன?

3.அறுவகை உணவோடு இலையில் சோறு போட்டு, இலையை எடுத்துவிட்டு இலையிலே சாப்பிடு. அது என்ன?

4.இந்த ஊரிலே அடிபட்டவன், அடுத்த ஊரிலே போய் சொல்கிறான். அவன் யார்?


5.உச்சியிலே பூ முடிவாள், பெண் அல்ல. உயரப் போய் தொங்குவாள். வெளவாய் அல்ல. அவள் யார்?

**விடைகள்**
**1.செருப்பு, 2. விரல்கள், 3. கறிவேப்பிலை, 4. தந்தி, 5. வெளவால்**


## நிலா



**அழகான நிலவிது**
**அதிசயம் காட்டிடும் நிலவிது**
**மழலைகள் மகிழும் நிலவிது**
**இரவில் ஒளிரும் நிலவிது**
**இருளை அகற்றும் நிலவிது**
**வட்ட வடிவ நிலவிது**
**வானில் மிதந்து செல்லுது**
**இரவில் நமக்குத் தெரியுது**
**தேய்ந்து மீண்டும் வளருது**
**எட்டி எட்டி பார்க்குது**
**எட்டாமல் தான் வருகுது**
**சோறு ஊட்ட உதவுது**
**சோலைக்கு அழகு காட்டுது**
**ஜன்னலோரம் வந்து**
**என் மனதைத் தேற்றுகிறது**
**என்னை மகிழ வைக்கிறது**



# கை கொடுத்தல்



"டேய்...! கையைக் கொடுடா, வாழ்த்துக்கள்!"

"எதுக்கு?"

"வேலை கிடைச்சிடுச்சின்னு கேள்விப்பட்டேன்"

"ஓ.. ஆமாம். நன்றி!"

"இப்படி ஒருத்தரை ஒருத்தர் கையைப் பிடிச்சிக் குலுக்குற பழக்கம் எப்படி வந்தது தெரியுமா உனக்கு?"

"தெரியாதே.."

"அந்தக் காலத்துல வீரர்கள் எப்பவும் வாள் அல்லது துப்பாக்கியைக் கையிலே வச்சிருப்பாங்களாம், ரெண்டு பேர் சந்திக்கும் போது, "என் கையிலே ஆயுதம் இல்லை. தாக்குவேன்னு பயம் வேண்டாம். நாம் நட்புறவுடன் இருப்போம்..." அப்படீங்கறதைத் தெரிவிக்கறதுக்காக கை கொடுத்துக்குவாங்களாம். அந்த வழக்கம் அப்படியே நிலைச்சி போச்சு"

"இது ஒரு நல்ல பழக்கம் தான். மனிதர்கள் ஒருத்தரைப் பார்த்து ஒருத்தர் பயப்பட வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் அன்பா இருக்கணும்...ஆதரவா இருக்கணும். சண்டை போடுறது ரொம்பத் தப்பு. அன்பைக் காட்டறதும் கைதான், அடிக்க ஓங்குறதும் கை தன்!"

"ஆனா சில சமயங்களில் அடி, உதை உதவுற மாதிரி அண்ணன் தம்பி கூட உதவுறது இல்லை தெரியுமா?"

"எதை வச்சி சொல்ற"

"ஆமாம். நேத்திக்கு கூட கடைத் தெருவுல எனக்கும் இன்னொருத் தனுக்கும் பெரிய சண்டை. கடைசியில கையை ஓங்கினதும் தான் சண்டை நின்னுது"

"அப்படியா.."

"ஆமாம். ஒரே அடி, அவ்வளவு தான்."

"யாருக்கு, அவனுக்கா?" "இல்லை...எனக்கு!"

# பறவைகளும் குஞ்சுகளும்

ஒரு நெல் வயலில் ஒரு பறவை கூடுகட்டி வாழ்ந்து வந்தது. கூட்டில் குஞ்சுகளும் இருந்தன. நெல் முதிர்ந்து அறுவடைக்குத் தயாராயிற்று. ஆனால் குஞ்சுகள் பறக்கும் நிலைமையை அடையவில்லை. இதனால் தாய் கவலை கொண்டிருந்தது. தான் இரை தேடப் போயிருக்கும்போது அறுவடை ஆரம்பித்துவிட்டால் தன் குஞ்சுகளின் கதி என்ன ஆகும் என்று கலங்கியது. வெளியே போகும்போது, "யாராவது வயல் பக்கம் வந்து பேசினால், கவனமாய்க் கேட்டு வையுங்கள்" என்று சொல்லியது. பறவை திரும்பி வந்தபோது, "தகப்பனும் மகனும் வந்தார்கள். நாளை காலை அறுவடை ஆக வேண்டும் ஊராரிடம் சொல்லி அழைத்து வா என்று தகப்பன் சொன்னான் என்றன. **தாய்:** பயப்படாதீர்கள். நாளை அறுவடை ஆகப்போவதில்லை. மறுநாள் பறவை சொல்லியபடியே ஒருவரும் அறுவடைக்குக் வரவில்லை. மறுநாள் மாலை பறவை திரும்பி வந்தபோது, இன்றும் தகப்பனும் மகனும் வந்தார்கள். அறுவடைக்கு ஊரார் வரவில்லை. தகப்பன் மகனைப் பார்த்து, "நமது பந்துக்களிடம் சொல்லி நாளைக் காலை அறுவடைக்கு வரச்சொல்லு" என்று சொன்னான் என்றன. **பறவை:** அவ்வளவுதானே? பந்துக்களை நம்பினால் நாளை அறுவடை ஆகப் போவதில்லை. நீங்கள் பயப்படாதீர்கள். என்றது. மறுநாள், இன்றும் தகப்பனும் மகனும் வந்தார்கள். பந்துக்கள் ஒருவரும் வராததைப் பார்த்து தகப்பன் கோபம் கொண்டான். இனி "இரண்டு அரிவாளைத் தயார் செய்துகொண்டு அதிகாலையில் வந்துவிடு. நாமே செய்து விடுவோம்" என்று மகனுக்குக் கூறினான். என்றன. உடனே, தாய்ப் பறவை தன் குஞ்சுகளுடன் வேறு இடத்திற்கு அன்றே போயிற்று.

சுடோக்கு எண் 64 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 8 | 6 | 5 | 3 | 1 | 9 | 7 |
| 3 | 9 | 7 | 2 | 1 | 4 | 8 | 5 | 6 |
| 6 | 5 | 1 | 7 | 8 | 9 | 2 | 4 | 3 |
| 1 | 7 | 9 | 3 | 2 | 8 | 6 | 5 | 4 |
| 8 | 3 | 4 | 5 | 6 | 7 | 9 | 2 | 1 |
| 5 | 2 | 6 | 9 | 4 | 1 | 7 | 3 | 8 |
| 7 | 1 | 3 | 4 | 9 | 2 | 6 | 8 | 5 |
| 4 | 6 | 2 | 8 | 7 | 5 | 3 | 1 | 9 |
| 9 | 8 | 5 | 1 | 3 | 6 | 4 | 7 | 2 |

சுடோக்கு எண் 65

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | | 4 | 9 | | | 3 |
| | 8 | | 5 | | | | | |
| | | 7 | | 6 | | | 2 | |
| | | | | | 5 | 8 | | 6 |
| 9 | | | | | | | | 2 |
| 8 | | 5 | 3 | | | | | |
| | 9 | | | 2 | | 4 | | |
| | | | | | 8 | | 9 | |
| 7 | | | 9 | 1 | | | 6 | |

## நாடுகளும் நாணயங்களும்



| | |
|---|---|
| இந்தியா | - ரூபாய் |
| இங்கிலாந்து | - பவுண்ஸ் |
| ரஷ்யா | - பிராங் |
| அமெரிக்கா | - டொலர் |
| சீனா | - யுவன் |
| ஜெர்மனி | - ரிஷ்மார்க் |
| பாகிஸ்தான் | - ரூபாய் |
| ஸ்ரீலங்கா | - ரூபாய் |
| பர்மா | - கியாடா |
| மலேசியா | - ரிங்கிட் |
| இத்தாலி | - லிரா |
| ஜப்பான் | - யென் |
| துருக்கி | - லிரா |
| அவுஸ்திரியா | - ஷில்லிங் |
| பெல்ஜியம் | - பெல்கா |
| டென்மார்க் | - கிரவுன் |
| கிரீஸ் | - டிரிக்மா |
| ஹங்கேரி | - பெஸ்கோ |
| மெக்சிகோ | - பெஸோ |
| சுவீடன் | - குரோனர் |
| பிரான்ஸ் | - யூரோ |
| கனடா | - டொலர் |
| சவுதி | - ரியால் |
| பஹ்ரேன் | - டினார் |
| குவைத் | - டினார் |

# சிவாஜி ஒரு சகாப்தம்

**(நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பிறந்த தினம் நேற்று முன்தினம். அதனை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது)**

நீங்கள் இன்னும் ஏற்காத எந்தப் பாத்திரத்தில் நடிக்க விரும்புகிறீர்கள் என்று ஒரு முறை நடிகர்திலகம் சிவாஜி கணேசன் அவர்களிடம் கேட்டபோது அவர், தந்தை பெரியார் என்று சொன்னார்.

திறமையான இயக்குநராயிருந் தால் அவரின் முழுமையான ரசனைத் திறனுக்கு உகந்த, அதற்கும் மேலுமான வடிவத்தை வழங்கத் தகுதியான ஒரு கலைஞர்தான் நடிகர்திலகம் அவர்கள். மிகை நடிப்பு, மெலோ ட்ராமா என்று சொன்னவர்களும் உண்டு. ஆனால் அந்தக் காலகட்டத் திற்கு (ஐம்பது அறுபதுகள் எழுபதுகளின் ஆரம்பம்) அதுதான் பொருந்தி வந்தது. அதுவும் அவருக்கு மட்டும்தான் பொருந்தி, பொருத்தமாய் அமைந்தது என்பதுவே நிதியமான உண்மை. ஒரு கதாபாத்திரத்தை அதன் உச்சபட்ச மேன்மைக்குக் கொண்டு நிறுத்திவிட்டு, இனி இந்தக் கதாபாத்திரம் என்றால் அவரின் நினைப்பு மட்டுமே வருவதுபோல் செய்தது நடிகர்திலகம் மட்டும்தான் என்றால் அது மிகைக் கூற்று என்று யாராலும் சொல்ல இயலாது.


மிகை நடிப்பு என்பதற்கான ஒரு நிகழ்வு இங்கே முன் வைக்கப்படுகிறது. தங்கப்பதக கம் திரைப்படத்தில் தன் மனைவி இறந்துவிட்ட செய்தி அறிந்து எஸ்.பி., சௌத்ரி அவர்கள் வீட்டிற்கு வருவார். தள்ளாடியபடியே மாடிப்படியேறி மனைவியின் சடலத்தின் முன் நின்று கதறுவார். சில வரிகள் அவர் பேசும் அந்த நேர வசனம் பார்ப்பவர் மனதைப் பிழிந்தெடுக்கும். ஒரு நேர்மை யான உயர்ந்த நோக்கங்களு ள்ள ஒரு போலீஸ் அதிகாரிக்கு இப்படியான ஒரு சோகம் நிகழ்ந்துவிட்டதே என்று பார்வையாளர்கள் மனதை அந்தக் காட்சி கலங்கடித்து விடும். அந்த நேரத்தில் மனைவியின் சடலத்தின் முன் நின்று அவர் சோகமே உருவாய்க் கதறிப் பேசும் அந்த வசனங்களும், அப்படியே ஓகோகோ என்று கதறிக் கொண்டே மனைவியின் முன் விழுந்து அவர் அழும் அந்தக் காட்சியும் யாராலும் மறக்க இயலாது. ஆனால் இந்தக் காட்சி படு செயற்கை, எந்த மனிதன் இப்படி மனைவியின் சடலத்தின் முன் நின்று வசனம் பேசுகிறான், எவன் இப்படிக் கதறி அழுகின்றான், கொஞ்சங்கூட யதார்த்தமில்லாத காட்சி இது.... சுத்த மெலோ ட்ராமா என்பதாக விமர்சனம் செய்யப்பட்டது.

விமர்சனம் செய்தவர் பத்திரிகையாளரும், நடிகருமான மதிப்பிற்குரிய திரு சோ அவர்கள். இப்படி அவர் சொன்னபோது, நீ எப்டி செய்யணும்ங்கிறே.... இப்டித் தானே.... என்று சொல்லியவாறே அந்தக் காட்சிக்கான யதார்த்த நடிப்பை உடனே நடிகர்திலகம் அவர்கள் செய்து காட்ட அந்த அமைதியான, கொஞ்சங்கூடச் செயற்கையில்லாத, படு யதார்த்தமான நடிப்பைப் பார்த்துவிட்டு அசந்து நின்று விட்டாராம் திரு சோ அவர் கள். உடனேவா ஒரு நடிக ரால் இப்படிச்செய்து காட்ட முடியும் என்று நான் அசந்து போனேன் என்கிறார் அவர்.

நம்ம ஜனங்களுக்கு இப்டிச் செய்தாத்தான் புரியும்யா.... மனசுல பதியும்.... அவுங்களுக்கு இப்டித்தான் பிடிக்கும்....அதத் ரிஞ்சிக்கோ....என்றாராம் தன்னின் வழக்கமான நடிப்பு குறித்து.

பழைய திரைப்படமான பெற்றமனம் என்ற படத்தில் நடிகர்திலகம் ஏறக்குறைய அந்த வேடத்திலேதான் இருப்பார். அதாவது

பெரியாரை அடையாளப் படுத்தும் விதமாக. அந்தத் திரைப்படத்திற்கான ஒரு கதாபாத்திரத்திற்குரிய வேடத்தில் தொண்டு கிழவ- னா கத் தோற்றம் தருவார். அதில் அவர் அமர்ந்தமேனிக்கு வாயை மூடிக்கொண்டு தாடையும் வாயும் அசைய அசையப் பேசுவதும், உடல் மெல்லக் குலுங்கச் சிரிப்பதுவும், அசலாகப் பெரியார் அவர்களை நமக்கு நினைவு படுத்தும்.



நடிகர்திலகத்தை வைத்து இயக்குநர்கள் தங்கள் கற்பனைக்கு வளம் சேர்த்து அவருக்கு ஏற்ற கதாபாத்திரங்களை உருவாக்கி அவர் திறமையை படத்துக்குப் படம் மெருகேற்றி வெளிக்கொ ணர்ந்தார்கள்.

இந்த அளவுக்கா ஒரு கலைஞனுக்கு நடிப்பதில் ஆசை இருக்கும் என்று நினைத்து பிரமிக்கும் அளவுக்கு அந்த இயக்குநர்களின் திறமைக்கு சான்றாக அவர்களின் எதிர்பார் ப்புகளுக்கும் அதி மேலாக அந்தக் கதாபாத்திரத்தை தன் மேம்பட்ட நடிப்புத் திறனால் பார்வையாளர்களின் கண்முன்னே கொண்டு நிறுத்தி தன்னை மேலும் மேலும் அக்கறையாக வளர்த்துக் கொண்டார் திரு சிவாஜி அவர்கள்.

உடன் நடிப்பவர்கள் நன்றாக நடித்தால்தான் தனக்கும் தடையின்றி நடிப்பு வரும் என்று வெளிப்படையாகச் சொன்ன நடிகர்திலகத்துடன் ஐம்பது, அறுபதுகளில் கைகோர்த்த ஜாம்பவான்கள் அநேகம்.

திரு எஸ்.வி.ரங்காராவ், திரு நாகையா, திருஎஸ்.வி.சுப்பையா, திரு எம்.என் நம்பியார், திரு பாலையா, திரு சகஸ்ரநாமம்,திரு டி.ஆர்.இராமச்சந்திரன், நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்கள், திரு சாரங்கபாணி, திரு வி.எஸ்.ராகவன், திரு பூர்ணம் விஸ்வநாதன் என்று இன்னும் பல முக்கியஸ் தர்களோடு இணைந்து அவர் பணியாற்றிய காலம் தமிழ்த்திரைப்படத்தின் பொற்காலம் என்று சொல்லலாம்.

மொத்தம் 282 தமிழ்த் திரைப்படங்களில் நடித்தவர் நடிகர்திலகம் அவர்கள். இதுபோக உறிந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்றும் நடித்திருக்கிறார். கௌரவப் பாத்திரங்களும் ஒன்றிரண்டு என்று ஏற்றிருக்கிறார். ஆனால் அவர் தமிழில் நடித்த பல திரைப்படங்கள் காலத்தால் அழியாதவை. நடிப்பு என்கிற கலைக்குள் நுழைபவர்கள் அவசியம் கற்றுக் கொள்ள அவரிடம் ஏராளமான பாடங்கள் உள்ளன. அந்த மாபெரும் கலைஞன் வே'மிட்டு நடிக்காமல் போன சில பாத்திரங்களும் உள்ளனதான். சமீபத்தில் தின- மணிக் கதிர் அந்தப் படங்களை வெளியிட்டிருந்தது. யதார்த்த நடிப்பிலும் திலகமாகத் திகழ முடியும் என்பதற்கு தேவர் மகனில் அவர் ஏற்றுக் கொண்ட தேவர் பாத்திரம் ஒரு சான்று. முதல் மரியாதையிலும் அதை நிரூபித்த அவருக்கு என்றுமே முதல் மரியாதைதான்.

---

# கழுகுக் கண்கள்

ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கும் நான் நாட்டின் பல பகுதிகளிலும் வீதி விபத்துக்கள் ஏற்படுவதைப் பார்த்து பெரும் வேதனைப்படுகிறேன்.

ஒரு நாட்டின் நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள், பாலங்கள் போன்ற சீரான நவீன வீதிகளே அந்நாடு பொருளாதாரத் துறையில் முன்னிலையில் திகழும் நாடு என்பதை இங்கு வரும் வெளிநாட்டவருக்கு விளக்கக்கூடியதாக அமைந்திருக்கும்.

இதனால்தான் லண்டன், பெர்லின், டோக்கியோ, மாஸ்கோ, நியயோர்க், வாஷிங்டன், பெய்ஜிங், கோலாலம்பூர், சிங்கப்பூர், ஹொங்கொங் மற்றும் புதுடில்லி போன்ற உலகின் முன்னணி தலைநகரங்களுக்கு செல்பவர் கள் அங்கிருக்கும் நவீன வீதிகளையும் மேம்பாலங் களையும் நெடுஞ்சாலைகளையும் பார்த்து மலைத்துபோய் இந்த நாடு இவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்து விட்டதா என்று ஆச்சர்யப்படுவார்கள்.

பொதுவாக உலகின் எந்தவொரு நாட்டிலும் நெடுஞ்சாலைகள், அதிவேக நெடுஞ்சாலைகள், மேம்பாலங்கள் போன்றவை நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அவற்றில் வாகனங்கள் மிதமிஞ்சிய வேகத்தில் செல்வதனால் பெரும் வீதி விபத்துக்களும், வீதி விபத்து மரணங்களும் அதிகரிப்பதுண்டு.

எவ்வளவுதான் பொலிஸ் உத்தியோகத்தர்கள் நெடுஞ்சாலைகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும் சில வாகன ஓட்டிகள் வீதி ஒழுங்குகளை மீறி மதுபோதை யில் அங்கீகரிக் கப்பட்ட வேகத்தை விட கூடுதலான வேகத்தில் வாகனங்களை ஓட்டிச் செல்வதனால் தான் இத்தகைய விபத்துகள் ஏற்படுகின்றன.

நெடுஞ்சாலைகள் அமைக்கப் பட்டதனால் வீதி விபத்து மரணங்களினால் பெரும் பாதிப்பை இலங்கை எதிர்நோக்கியுள்ளது. சரியான முறையில் பரிசோதித்து பார்க்காமல் 18 வயதுக்கு அதிகமான அனைவருக்கும் வாகனங்களை ஓட்டிச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதும் வீதி விபத்து மரணங்களுக்கு இன்னுமொரு காரணமாகும்.

கைலஞ்சம் வாங்கி வாகனங்களை ஓட்டுவதற்கு தகுதியற்றவர்களுக்கும் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதனாலும் இந்த விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

தென்கொரியாவில் வாகன விபத்துக்களினால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்து வருகின்றன. சில வருடங் களுக்கு முன்னர் தென்கொர- ியாவின் பாரிய பாலமொன்றில் வாகனங்கள் மிதமிஞ்சிய வேகத்தில் சென்றுக்கொண்டிருந் ததனால் அந்த பாலத்தில் அடிதளம் ஆட்டம் கண்டு பாலம் நூற்றுக்கணக்கான வாகனங் களுடன் ஆற்றில் மூழ்கியதனால் பலர் கொல்லப்பட்டனர்.

இலங்கையில் கடந்த திங்களன்று இடம்பெற்ற 5 வெவ்வேறு வீதி விபத்துகளில் 6 பேர் கொல்லப்பட்டும் 40இற்கும் மேற்பட்டோர் படுகாயமும் அடைந்தனர். இவ்வாண்டில் மாத்திரம் 25 ஆயிரம் வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த விபத்துக்களினால் இவ்வாண்டில் இதுவரையில் 1500 பேர் மரணித்திருக்கிறார்கள்.

எங்கள் நாட்டின் சிங்கள தொலைக்காட்சி தொடர் நாடகங்களை நெறியாள்கை செய்து சாதனைப் படைத்த நாலக்க வெதமுல்ல என்ற ஒரு தொலைக்காட்சி கலைஞர் திங்களன்று அதிகாலையில் நடந்த ஒரு விபத்தில் மரணித்திருக்கிறார். இந்த வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி இப்போது தலைமறை- றவாகிவிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இவ்விதம் வீதி விபத்து மரணங்கள் அதிகரிப்பதற்கு முச்சக்கர வண்டிச் சாரதிகளின் பொறுப்பற்ற தன்மையும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளின் கவனக்குறைவுமே பிரதான காரணமாகும். இவ்விரு சாராரைவிட வீதி விபத்துக்கள் அதிகரிப்பதற்கு பஸ்களை ஓட்டிச் செல்லும் சாரதிகளும் பெரும் பங்களிப்பை வழங்குகிறார்கள். இவர்கள் குறுகிய இடைவெளிக்குள்ளும் தங்கள் பஸ்களை நுழைத்து வேகமாக செல்வதை எங்களில் பலரும் அவதானித்திருப்பார்கள். பஸ்கள் பெரிதாக இருப்பதனால் அவற்றுக்கு அருகில் சிறிய வாகனங்கள் செல்லப் பயப்படுவதை இந்த பஸ் சார- திகள் தங்களுக்குச் சாதமாகப் பயன்படுத்திச் சிறிய வீதிகளிலும் பஸ்களை வேகமாக ஓட்டிச் செல்கிறார்கள். இதுவும் வாகன விபத்து அதி- கரிப்பதற்கு ஒரு காரணமாகும்.

வீதி விபத்துக்கள் அதிகரிப் பதற்கான முழுப் பொறுப்பையும் பொலிஸாரே ஏற்றுக் கொள்ள வேண்டும். பொலிஸார் சிறிய பிழைகளை விடும் வாகன ஓட்டிகளை பிடித்து தண்டிக் கிறார்களே ஒழிய, வாகன நெரிசல் அதிகமாக இருக்கும் பாதைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி வேகமாக ஓட்டிச் செல்பவர்களை பிடித்து தண்டிப்பதில் அசமந்தப் போக்கையே கடைப்பிடிக் கிறார்கள்.

வாகனங்களை அத்துமீறி வேகமாக ஓட்டிச் செல்பவர் களின் தராதரத்தையும், சமூக, பொருளாதார அந்தஸ்தையும் பொருட்படுத்தாமல் சம்பந்தப்பட்ட வாகன ஓட்டிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுத்தால் தான் வீதிகளில் செல்லும் அப்பாவி மக்கள் வீதி மரணங்களை எதிர்நோக்காமல் பாதுகாப்பாக வீடு திரும்ப முடியும். இது தொடர்பாக போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# சர்கோசியின் உத்தரவின் பேரிலேயே கேணல் கடாபி கொல்லப்பட்டார்

**திடுக்கிடும் தகவல்**

பிரான்சின் முன்னாள் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசியின் உத்தரவின் பேரிலேயே கடாபி கொல்லப்பட்டதாக திடுக்கிடும் தகவல் வெளியாகி உள்ளது.

லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி கடந்தாண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி தனது சொந்த ஊரான கிரிட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து லிபிய போராட்டக்காரர்களுடன் இணைந்திருந்த வெளிநாட்டு முகவர் ஒருவரே கடாபி கொலை செய்யப்பட்டதற்கு காரணம் எனத் தகவல் வெளியானது.

இந்நிலையில் அந்த வெளிநாட்டு முகவர், பிரான்ஸ் நாட்டவராக இருக்கலாம் என இத்தாலிய பத்திரிக்கையொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அப்பத்திரிக்கையில்,கடந்த 2007ஆம் ஆண்டு சர்கோசி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது, அவருக்கு மில்லியன் கணக்கான பண உதவியை கடாபி வழங்கினார் என்றும், இது தவிர மற்ற சில இரகசியங்களையும் பகிரங்கமாக அறிவிக்கப் போவதாக கடாபி மிரட்டல் விடுத்துள்ளார் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.



மேலும் இதன் காரணமாகவே கடா பியை கொலை செய்வதற்கு நிக்கோலஸ் சர்கோசி தேவையான முயற்சியில் ஈடுபட்டதாகவும், இத்திட்டத்தின் படி போராட்டக்காரர்களின் மத்தியில் ஊடுருவிய 22 வயது மதிக்கத்தக்க வெளிநாட்டு முகவரே கடாபியை சுட்டுக் கொன்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

# உலக பார்வை

## 63ஆவது தேசிய தினத்தை கொண்டாடியது சீனா

சீனா தனது தேசிய தினத்தை கொண்டாடியது. இதனை முன்னிட்டு நடந்த விழாவில் சீனாவின் முக்கிய தலைவர்கள் பங்கேற்றனர். சீன தலைநகர் பீஜிங்கில் உள்ள தியானென்மென் சதுக்கத்தில் நடந்த விழாவில் கலந்து கொண்ட சீன தலைவர்கள், தேசிய விடுதலை போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இந்த விழாவில் Hu Jintao (ஜனாதிபதி), Wen Jiabao (பிரதமர்) உட்பட அரசியல் தலைவர்கள் Wu Bangguo, Jia Qinglin, Li Changchun, Xi Jinping, Li Keqiang, He Guoqiang, Zhou Yongkang ஆகியோர் கலந்து கொண்டனர்.




# ஈரானின் விமானங்களை சோதனையிடுங்கள் ஈராக்கிற்கு அமெரிக்கா கடும் உத்தரவு

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆதரவாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் இடையேயான உள்நாட்டு போர் தீவிரமடைந்து வருகின்றது.

இத்தாக்குதலில் இதுவரை 25 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர ஐ.நா.வும், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் தீவிரமாக உள்ளன.

ஆனால் ஜனாதிபதி அசாத் பதவி விலக மறுப்பதுடன் போராடும் மக்களை கொன்று குவிப்பதில் தீவிரம் காட்டி வருகிறார்.

இதற்காக இராணுவத்திற்கு ஈரான், வடகொரியா உள்ளிட்ட நாடுகளில் இருந்து ஆயுதங்களை வாங்கி கடத்தி வருகிறார்.



எனவே, ஆயுத கடத்தலை தடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது. சிரியாவுக்கு புறப்படும் ஈரான் விமானங்கள் ஈராக் வழியாக தான் பறந்து செல்கின்றன.

எனவே, அந்த விமானங்களை தடுத்து நிறுத்தும்படியும், அவற்றில் ஆயுதங்கள் கடத்தப்படுகிறதா என்று சோதனை நடத்தும் படியும் ஈராக்கிற்கு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

கடந்த வாரம் ஈராக் தலைநகர் பாக்தாத் வந்த அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் இதுகுறித்து அந்நாட்டு துணை ஜனாதிபதி குதயர் அல்-குஷாயியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதை தொடர்ந்து தனது வான் எல்லையில் பறக்கும் ஈரான் விமானங்களை இறக்கி ஆயுதம் உள்ளதா? என சோதனை நடத்த ஈராக் முடிவு செய்துள்ளது. இந்தத் தகவல் ஈரானிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிரியாவுக்கு ஆயுத உதவியோ அல்லது நிதி உதவியோ செய்ய வேண்டாம் என கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த தகவலை ஈராக் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹோஷியர் ஷெபரி தெரிவித்துள்ளார். இதற்கிடையே, அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று வடகொரியா விமானத்தை தரையிறக்கி ஈராக் ஆயுத சோதனை நடத்தி உள்ளது.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், மீண்டும் போட்டியிடும் ஜனாதிபதி ஒபாமா, லாஸ்வேகாஸ் நகர பள்ளி மைதானத்தில் நடந்த பிரசார கூட்டத்தில் பங்கேற்றனர். அங்கு கூடியிருந்த தன் கட்சி ஆதரவாளர்களை நோக்கி உற்சாகமாக கையசைத்தார்.

## சர்ச்சைக்குரிய படத்தைத் தயாரித்தவரை கொல்பவருக்கு 1.14 கோடி ரூபாய் அறிவிப்பு

நபிகள் நாயகத்தை அவமதிக்கும் வகையில், திரைப்படத்தை தயாரித்தவரை கொல்பவருக்கு, இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வெகுமதி அளிக்கப்படும் என, பாகிஸ்தான் முன்னாள் எம்.எல்.ஏ., அறிவித்துள்ளார்.

சர்ச்சைக்குரிய, இன்னோசன்ஸ் ஆப் முஸ்லிம்ஸ் என்ற திரைப்படத்தின் சில காட்சிகள், இணையதளத்தில் வெளியாகி, உலகெங்கும், அமெரிக்காவுக்கு எதிரான போராட்டங்களை வெடிக்கச் செய்தது. இத்திரைப்படத்தின் காட்சிகளை, இணையதளத்தில் வெளியிட, பாகிஸ்தான் அரசு தடை விதித்தது. இதற்கிடையே, நபிகள் நாயகத்தை அவமதிக்கும் வகையில் திரைப்படத்தை தயாரித்த, இயக்குனரை கொலை செய்பவருக்கு, ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் சன்மானம் வழங்கப்படும் என, பாகிஸ்தான் ரயில்வே அமைச்சர் குலாம் அ... மது பிலாவர் அறிவித்திருந்தார். இதற்கு, அமெரிக்க அரசு கண்டனம் தெரிவித்திருந்தது. சர்ச்சைக்குரிய திரைப்படத்தைக் கண்டித்து, பாகிஸ்தானில் நடந்த பல்வேறு போராட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறையில் 24 பேர் கொல்லப்பட்டனர். இந்நிலையில், பெஷாவர் நகரில், திபா -இ- பாகிஸ்தான் என்ற பழமைவாத முஸ்லிம் அமைப்பின் பேரணி நேற்று நடந்தது. இந்த பேரணியில் கலந்து கொண்ட முன்னாள் எம்.எல்.ஏ., இக்ரமுல்லா 'ராகித், சர்ச்சைக்குரிய திரைப்படத்தை தயாரித்தவரை கொல்பவருக்கு, இரண்டு இலட்சம் அமெரிக்க டொலர்கள் (1.14 கோடி ரூபாய்) அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்ட, அங்கு கூடியிருந்த 15 ஆயிரம் பேர், மகிழ்ச்சியில் ஆரவாரம் செய்தனர்.

# பொருளாதாரக் கட்டுப்பாடுகளை எதிர்த்து பிரான்சில் 80,000 பேர் போராட்டம்

ஐரோப்பாவின் புதிய நிதிநிலை அறிக்கை கொள்கையை பிரான்ஸ் பின்பற்றக்கூடாது என்று தலைநகர் பாரிஸில் சுமார் எண்பதினாயிரம் பேர் கூடி நின்று போராட்டம் நடத்தினர்.

கடந்த வெள்ளியன்று(28ம் திகதி) புதிய அரசு 2013ம் ஆண்டுக்கான தனது நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தது.

அதில் 37 மில்லியன் யூரோ அளவிற்கு வரி உயர்வும் செலவுக் குறைப்பும் காணப்பட்டது.

இதைக் கண்டதும் ஐரோப்பாவின் நிதிநிலைக் கொள்கையைப் பின்பற்றி பிரான்சின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறதே என்று மக்கள் கொதித்தெழுந்தனர்.

இந்தப் போராட்டம் ஜனாதிபதி ஓலாண்டுக்கு எதிரானது அன்று ஐரோப்பாவின் பொதுநிதிக் கொள்கைக்கு எதிரானதாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க பாஸ்ட்டில் பகுதியில் கூடி நின்ற மக்கள் தடை, தடைஎன்று கோஷமிட்டனர்.

ஐரோப்பிய நிதிக் கொள்கைக்கு பிரான்சில் தடை விதிக்க வேண்டும் என்பது இவர்களின் கோ'மாக இருந்தது.

இத்துடன் நூற்றுக்கணக்கான கொடிகளையும் எதிர்ப்பு அடையாள அட்டைகளையும் இக் கூட்டத்தினர் ஏந்தி வந்தனர்.

பிரான்சின் தென்பகுதியிலிருந்து ஐந்து மணி நேரம் பேருந்தில் பயணப்பட்டு வந்த நோயே என்பவர், தற்போது நிதி ஆளுமை அரசியல் ஆளுமையை பின்னுக்குத் தள்ளிவிட்டது. ஐரோப்பாவின் புதிய நிதிக்கொள்கை வசதிபடைத்தவர்களை வாழ வைக்கவே உதவும்.




இந்தக் கொள்கை வற்புறுத்தும் பொருளாதார நிபந்தனைகள் நிதியாளர் மற்றும் வங்கியாளரின் பணப்பெட்டியை நிரப்புமே தவிர மற்றவர்களுக்கு எந்தப் பலனையும் அளிக்காது.

இதனை என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை. நான் இதுவரை எந்த அரசியல் போராட்டத்திலும் பங்கேற்றதில்லை.

இப்போது முதன்முறையாக இப்போராட்டத்தில் பங்கேற்கிறேன், காரணம் இது சாதாரண மக்களின் நிதிப்பிரச்னை என்றார்.

தீவிர இடதுசாரிக் கட்சியான காஷ் முன்னணி கட்சியின் தலைவர் ஜீன் லுக் மெலன்கோன், இன்று தான் முதன்முதலாக பிரெஞ்சு மக்கள் பொருளாதாரத் தடைகளை எதிர்த்துப் போராடுகின்றனர் என்றார்.


கட்சியைச் சேர்ந்த மரியா ஏஞ்சி போய்ஸ், வங்கி மற்றும் நிதி சார்ந்து நிற்கும் ஐரோப்பாவை நான் எதிர்க்கிறேன் என்றார்.

ஐரோப்பா முழுக்க இந்தப் போராட்டம் நடப்பதால் ஒருநாள் பிரஸ்ஸல்சும் அங்கு கூடிப்பேசும் அரசியல்வாதிகளின் இந்தத் தெருக்களில் மக்கள் எழுப்பிய கண்டனக் குரலுக்குச் செவி சாய்க்க வேண்டும் என்று கடுமையாக விமர்சித்தார்.

## 24 மணி நேர திருமண திட்டம்: பிரிட்டனில் அமுல்

12 சீட் தர தயார் என தே.மு.தி.க.,வுடன் தி.மு.க., பேரம்: காங்., கூட்டணியை விட்டு விலக பிரிட்டனில், பகல் பொழுது மட்டுமல்ல, இரவு நேரத்திலும் திருமணம் செய்து கொள்ளும் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 176 ஆண்டுகளாக, பிரிட்டனில், காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டுமே சட்டப்படி திருமணம் செய்ய, அரசு அனுமதி அளித்து வந்தது. திருமண சட்டத்தில் திருத்தம் செய்துள்ள பிரிட்டன் அரசு, இனி மக்கள், 24 மணி நேரத்தில், எப்போது வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ள வழிவகை செய்து உள்ளது. இந்த சட்டம் நேற்று முதல் அமலுக்கு வந்தது. பிரிட்டன் உள்துறை அமைச்சர் மார்க் ஹார்ப்பர், குறிப்பிடுகையில், இந்த மாற்றத்தினால் மக்கள் இனி தங்கள் வாழ்வின் முக்கியமான, திருமண நாளை திட்டமிட அதிக சுதந்திரம் உள்ளது, என்றார்.

# கறுப்புச்சட்டை அணிந்து போராடப்போகும் கருணாநிதி



தி.மு.க. தலைமை அலுவலக மான அண்ணா அறிவாலயத்தில் கட்சியின் தலைவர் கருணாநிதி தலைமையில் செயற்குழு கூட்டம் நடந்தது.

இக்கூட்டத்தில் மு.க.ஸ்டாலின், மு.க. அழகிரி, அன்பழகன் உள் பட கட்சியின் முக்கியப் பிரமுகர் கள் பலரும் கலந்து கொண்டனர்.

தமிழக அரசின் பல்வேறு நடவ டிக்கைகளை கண்டித்து கருப்புச் சட்டை அணிந்து மனிதச்சங்கிலி போராட்டம் நடத்தப்போவதாக அதன் தலைவர் கருணாநிதி கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

அதிமுக அரசு திமுக மீது நடத்தி வரும் கைது நடவடிக்கை களை கண்டித்தே இந்த போராட் டம் நடத்தப்படுகிறது.

வரும் 5ம் திகதி தமிழகம் முழுவதும் திமுக தொண்டர்கள் கறுப்புச்சட்டை அணிந்து போராட் டம் நடத்த உள்ளனர்.

சென்னைக்கு கருணாநிதியே கருப்புச்சட்டை அணிந்து போராட் டம் நடத்துவார் என தெரிகின் றது.

கடைசியாக கடந்த யூன் 22ம் திகதியன்று திமுக செயற்குழு கூட்டம் கூடியபோது கட்சியின் முக்கிய பிரமுகரான வீரபாண்டி ஆறுமுகம் கைது செய்யப்பட் டதை கண்டித்து சிறை நிரப்புப் போராட்டம் நடத்த தீர்மானிக்கப் பட்டது. ஓகஸ்ட் 4ம் திகதி சிறை நிரப்பும் போராட்டமும் நடத்தப்பட் டது குறிப்பிடத்தக்கது.

# சோனியாவின் வெளிநாட்டு பயணத்திற்கு மட்டும் செலவான பணம் ரூ.1880 கோடி

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தனது வெளிநாட்டு பய ணத்திற்காக ரூ.1880 கோடி செலவு செய்ததாக குஜராத் முதல்வர் நரேந்திரமோடி குற்றம் சாட்டியுள்ளார்.

குஜராத்தில் சட்டசபை தேர்தல் வரும் மாதங்களில் நடைபெற இருக் கிறது.

அதற்கான தேர்தல் பிரசா ரத்தை தொடங்கியுள்ள அம்மா நில முதல்வர் மோடி, காங்கிரஸ் அரசை விமர்சித்து வருகின்றார்.

நேரடி அன்னிய முதலீட்டிற்கு மத்திய அரசு அனுமதி அளித் துள்ளதன் மூலம் அமெரிக்கா நிறுவனங்களுக்கு காங்கிரஸ் பாதையை திறந்து விட்டுள்ளது.

மேலும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியின் வெளிநாட்டு செலவிற்காக கடந்த 3 ஆண்டு களில் மத்திய அரசு ரூ. 1880 கோடியை செலவிட்டுள்ளது.

மன்மோகன் சிங்கும், சோனியா காந்தியும் மக்கள் பணத்தை வீணடிப்பதாக குற்றம் சாட்டும் மோடி, தன் மாநிலமான குஜராத் தில் நடக்கும் பண்டிகைகளுக்கு



அரசு பணம் பல கோடியை செல விடுகிறார் என்பது குறிப்பிடத்தக் கது.

# மாஜி இந்திய இராணுவ அதிகாரி மீது லண்டனில் சரமாரி தாக்குதல்


இந்தியாவின் முன்னாள் இரா ணுவ அதிகாரியான குல்தீப் சிங் பிரார் மீது லண்டனில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது பொற கோவிலில் சீக்கிய பயங்கர வாதிகளுக்கு எதிராக நடத்தப் பட்ட தாக்குதலுக்கு குல்தீப் சிங் தலைமை தாங்கியவர்.

பிரித்தானியா தலைநகர் லண்ட னில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு அடை யாளம் தெரியாத 4 பேர் குல்தீப் சிங் பிரார் மீது தாக்கு தல் நடத்தினர்.

கூரிய ஆயுதத்தால் அவர்கள் தாக்கியதாகவும், உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட அவர் தற்போது நலமாக இருப்பதா கவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து பிரித்தானியாவில் உள்ள இந்தியத் தூதரக அதி காரிகளுக்குத் தகவல் தெரிவிக் கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குல்தீப்சிங் குடும் பத்துக்கு வேண் டிய உதவிகளைச் செய்து வருவ தாகவும் மத்திய வெளிவிவகாரத் துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

இத்தாக் குதல் குறித்து லண்



டன் பொலி ஸார் விசாரித்து வரு கின்றனர்.

# தன்னைக் காப்பாற்றக்கோரி பாகிஸ்தான் தூதரகத்திற்கு கடிதம் எழுதிய கசாப்

மும்பை தாக்குதல் வழக்கின் குற்றவாளி கசாப், தான் கைதான சமயத்தில் பாகிஸ்தான் தூதரகத் திற்கு எழுதிய கடிதத்தின் விப ரம் தற்போது வெளியாகியுள்ளது.

கடந்த 2008ம் ஆண்டு நவம்பர் 26ம் திகதி மும்பையில் புகுந்த அஜ்மல் கசாப், தாஜ் ஹோட்டல், சத்ரபதி சிவாஜி ரயில் நிலையம் என முக்கிய இடங்களில் தாக்கு தல் நடத்தினான்.

இதில் 160க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய் யப்பட்டனர்.

இது தொடர்பான வழக்கில் கசாப்புக்கு தூக்குதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலை யில் கைதான சில நாட்களில் பாகிஸ்தான் தூதரகத்திற்கு கடி தம் எழுதியுள்ளான்.

அக்கடிதத்தில், பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள பரித்கோட் என்ற ஊரைச் சேர்ந்த



நான் ஒரு ஜிஹாதியாக விரும்பினேன்.

இதற்காக லஷ்கர்-இ- தொய்பா பயிற்சி முகாமில் பயிற்சி எடுத் தேன்.

முசாபராபாத்தில் உள்ள முரிட்கே என்ற இடத்தில் துப்பாக்கிகளை இயக்கவும், வெடிகுண்டுகளை கையாளவும் எனக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

லஷ்கர்-இ- தொய்பா முகாமில் ஹபிஸ் சயீத், ஜாகி-ஜர்-ரஹ்மான் லக்சி, அபு ஹம்ஸா மற்றும் கஹாபா ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

மேலும் தீவிரவாத செயல்களை மேற்கொள்வதற்காக என்னை மூளைச்சலவை செய்தனர் என விபரமாக தனது கடிதத்தில் எழுதி யுள்ளான்.

மும்பையில் தாக்குதல் நடத்து வதற்காக பாகிஸ்தான் கப்பலான அல்-ஹீசைனி மூலம் இந்திய கடல் பகுதிக்கு வந்ததாகவும் பின்னர் எம்.வி.குபேர் என்ற இந் திய மீன்பிடி படகை துப்பாக்கி முனையில் கடத்தி அதன் மூலம் மும்பைக்கு வந்து சேர்ந்து தாக் குதல் நடத்தியதாகவும் எழுதி யுள்ளான்.

எனவே தனக்கு உதவும்படி வேண்டுகோள் விடுத்துள்ள கசாப் பின் இக்கடிதத்திற்கு பாகிஸ் தான் தூதரகம் பதிலளிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு 2 முறை கருணை மனுக்களை எழுதியிருந்தான் கசாப்.



# இந்திய செய்திகள்

# பாகிஸ்தானில் இந்திய மீனவர்கள் 33 பேர் கைது



எல்லை தாண்டிச் சென்று பாகிஸ்தான் கடல் பகுதியில் மீன் பிடித்த 33 இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் மீனவர்கள் தங்களது கடல் எல்லைகளை மீறி மீன் பிடித்து கைதாவது வாடிக்கையான விடயமாகி விட்டது.

இந்த வகையில் பாகிஸ்தான் கடல் எல்லை பகுதியில் அத்து மீறி மீன் பிடித்ததாக இந்திய மீனவர்கள் 33 பேர் அந்நாட்டு கடலோர காவல் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீன்பிடிக்க உபயோகப்படுத்திய ஐந்து படகுகள், பறி முதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் பாகிஸ்தான் கராச்சியில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# நேபாளத்தில் கடும் நிலச்சரிவில் சிக்கி இந்தியர்கள் பலி

நேபாள நாட்டில் பெய்து வரும் கனமழையைத் தொடர்ந்து ஏற் பட்ட நிலச்சரிவில் சிக்கி, இந்தி யர்கள் உட்பட ஏழு பேர் பலி யாகினர்.

நேபாளத்தில் பட இடங்களில் கனமழை பெய்து வருகிறதை யடுத்து அங்குள்ள மக்கள் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் இலாம் என்ற இடத்தில், மெச்சி நெடுஞ்சாலை யில் ஏற்பட்ட நிலச்சரிவில், அந்த வழியாகச் சென்ற வாகனங்கள் புதையுண்டன.

நிலச்சரிவில் சிக்கிய 14 பேரில் ஏழு பேரின் உடல்கள் மீட்கப்பட் டன.

இதில் பலியானவர்களில் ஒரு வர் இந்தியர். மீதமுள்ளவர்களை காணவில்லை.

காணாமல் போன 7பேரில், ஐந்து பேர் இந்தியர்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

இவர்களை தேடும் பணியில் நேபாள பொலிஸாரும் இராணு வத்தினரும் ஈடுபட்டு உள்ளனர்.



இந்த ஆட்டம் போதுமா? விருதுநகரில் சமூக நலத்துறை சார்பில் நடந்த, முதியோர் தினவிழாவில், அனைவரையும் கவர்ந்த மூதாட்டிகள் நடனம்.

# பிரியங்கா சோப்ராவுக்கு கண்டனம்

சென்னையில் நடந்த ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் ஆபாசமாக நடனமாடியதற்காக பாலிவுட் நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் கடந்த ஏப்ரல் மாதம் நடந்த ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளுக்கான தொடக்க விழாவில் பாலிவுட் நடிகர்கள் மற்றும் நடிகைகள் நடனமாடினர்.

இதில் நடிகை பிரியங்கா சோப்ரா நடனத் தில் மிகுந்த ஆபாசம் காணப்பட்டதாக ஜெபக்குமார் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார்.

அவர், பொதுமேடையில் நடிகர்கள், கிரிக்கெட் வீரர்கள், பிரபலங் கள் அநாகரீகமாகவும் ஆபாசமாவும் ஆடியுள்ளனர். அவர்கள் மீது நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

இந்நிலையில் இவ்வழக்கை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளை, பொதுமேடையில் அநாகரீகமாக ஆபாசமாக ஆடியது கண்டனத்திற்குரியது என்று கண்டனம் தெரிவித்துள்ளது.

# அரையிறுதியை உறுதிசெய்தது இலங்கை தொடரிலிருந்து வெளியேறியது இங்கிலாந்து




சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக்கிண்ண ருவென்ரி-20 தொடரின் அரையிறுதிப் போட்டிகளுக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது. இன்று இடம்பெற்ற இங்கிலாந்து அணிக்கெதிரான போட்டியில் 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றே இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

பல்லேகல சர்வதேசக் கிரிகெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்திருந்தது. இன்றைய போட்டியில் இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்தன பங்குபற்றியிருந்த போதிலும், அணியின் தலைவராக குமார் சங்கக்கார செயற்பட்டிருந்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுததாடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதலாவது விக்கெட்டாக திலகரட்ண டில்ஷான் 16 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த போதிலும், மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது. இருவரும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்க ஜீவன் மெண்டிஸ், அன்ஜலோ மத்தியூஸ் இருவரும் சிறப்பாக ஆடினர். இருவரும் அடுத்தடுத்த பந்துகளில் ஆட்டமிழக்க திஸர பெரேரா, லஹிரு திரிமன்ன இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தைப் புரிந்து இலங்கை அணிக்கு சிறப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்தன 38 பந்துகளில் 42 ஓட்டங்களையும், அன்ஜலோ மத்தியூஸ் 19 பந்துகளில் 28 ஓட்டங்களையும், திஸர பெரேரா 16 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக ஸ்ருவேர்ட் ப்ரோட் 4 ஓவர்களில் 32 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கிரேம் ஸ்வான் 4 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், ஸ்டீவன் ஃபின் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 170 ஓட்டங்களை வெற்றி இலக் காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களை மாத்தி ரம் பெற்று 19 ஓட்டங்களால் தோல் வியடைந்தது.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்த இங்கிலாந்து அணி லசித் மலிங்கவின் ஒரே ஓவரில் 3 விக்கெட்டுக்களை இழந்தது. அதன் பின்னர் சமித் பட்டேல் அதிரடியாக ஆடிய போதிலும் மறுபுறத்தில் விக்கெட்டுக்கள் தொடர்ந்து வீழ்த்தப்பட்டன. அதன் காரணமாக இங்கிலாந்தின் வெற்றி தடுக்கப்பட்டது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக சமித் பட்டேல் 48 பந்துகளில் 67 ஓட்டங்களையும், கிரேம் ஸ்வான் 20 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க 4 ஓவர்களில் 31 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், அகில தனஞ்சய 4 ஓவர்களில் 26 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நுவான் குலசேகர, ஜீவன் மெண்டிஸ் இருவரும் தலா ஒரு விக்கெட்டை யும் கைப்பற்றினர்.

இவ்வெற்றியின் மூலம் இலங்கை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றதோடு, மேற்கிந்தியத் தீவுகள் அணியும் அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது.

நடப்பு சம்பியனான இங்கிலாந்து அணி உலகக்கிண்ண ருவென்ரி-20 தொடரிலிருந்து வெளியேற்றப்பட் டுள்ளது.போட்டியின் நாயகனாக இலங்கையின் லசித் மலிங்க தெரிவானார்.

# அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் – 2012 இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு விழாவும்

இவ்வாண்டிற்கான இறுதிச் சுற்றுப்போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் கரவெட்டி மைக்கல் (மாலுசந்தி) விளையாட்டு மைதானத்தில் நாளை மதியம் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டிகளில் பங்குபற்றும் அணிகளின் விபரம் பின்வருமாறு:

## துடுப்பாட்ட அணி


மாவட்டச் செயலக அணி


சங்கானை பிரதேச செலக அணி

## வலைப்பந்தாட்ட அணி


மாவட்ட செயலக அணி


சண்டிலிப்பாய் பிரதேச அணி

## உதைபந்தாட்ட அணி


கரவெட்டி பிரதேச செயலக அணி


பருத்தித்துறை பிரதேச செயலக அணி

# சங்காவின் தலைமை சரியானது – மஹேல

இலங்கை அணி நேற்று முன்தினம் குமார் சங்கக்காரவை அணித் தலைவராகச் செயற்படுத்தியமையில் தவறு இல்லை என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார். சரியான நோக்கங்களிற்காகவே அந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் இலங்கை அணியின் வழக்கமான தலைவராக மஹேல ஜெயவர்தனவிற்குப் பதிலாக குமார் சங்கக்கார உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் அம்முடிவு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, இதற்கு முன்னர் இடம்பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி குறித்த நேரத்திற்குள் ஓவர்களை வீசி முடிக்கவில்லை , என்பதால் தனக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டி ருந்த நிலையில், இங்கிலாந்திற்கெதிரான போட்டியிலும் இலங்கை அணி குறித்த நேரத்திற்குள் ஓவர்களை வீசி முடிக்காதுவிடின் போட்டித்தடை விதிக்கப்படும் என்பதாலேயே குமார் சங்கக்கார அணித் தலைவராகச் செயற்பட்டதாகத் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விதிகளின் படி அணியொன்று ஒரே தலைவரின் கீழ் 12 மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் பந்துவீசியிருக்காவிடில் அடுத்த போட்டியில் அணித்தலைவர் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்படும்.

இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான போட்டியில் ஏற்கனவே ஒரு தடவை அகப்பட்டுக் கொண்ட நிலையில் இங்கிலாந்திற்கெதிரான நேற்றைய போட்டியில் அகப்பட்டுக் கொண்டால் அரையிறுதிப் போட்டியில் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டிருக்கலாம். எனவே குமார் சங்கக்கார அணித்தலைவராகச் செயற்பட்டார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 03.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது